ANGLO ASIAN
MINI MART
513 High Road
Wembley,
Middx
Hao 4 ag
Tel: 0181-900 2451
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள், மரக்கறி
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
Pub.

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

Eelamurasu Weekly

முரசு: 5 29 ஜூலை – 04 ஒகஸ்ட் 1999 முழக்கம்: 237

CAR CHECK
Mot & Repair Center
உங்களுடைய சகல திருத்த
வேலைக்கும், M.O.T க்கும்
தொடர்புகொள்ளவேண்டிய இடம்:
(Honda & Nisson Dealer க்கு அருகாமையில்)
Unit 17 Stonefield Close.
Off Stonefield Way
Ruislip - Middx.
தொடர்புகளுக்கு: 0181-841 1880
(சுகுமார்)
Pub.

# காஞ்சிபுரத்தில் ம.தி.மு.க. மாநாடு

## அத்வானி முன்னிலையில் சிறீலங்காவிற்கு கண்டனத் தீர்மானம்

(26.07.99)

காஞ்சிபுரத்தில் ம.தி.மு.கவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இருநாள் மாநில சுயாட்சி மாநாட்டின் இறுதியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் சிறீலங்கா மீதான கண்டனத் தீர்மானமும் அடங்குகின்றது. இத் தீர்மானங்கள் இந்திய உட்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி, தமிழக முதல்வர் கருணாநிதி, பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ், ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ ஆகியோர் முன்னிலையில் இயற்றப்பட்டுள்ளன.

அத் தீர்மானங்களில் ஈழத் தமிழினத்தை கருவறுக்கத் துடிக்கின்ற சிறீலங்கா இராணுவத்தின் கடந்த 25 ஆண்டுகளில் படுகொலைகள் மனிதாபிமானம் உள்ளவர்களை நடுங்கச் செய்வதாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. கொசோவோ மாநிலத்தில் சேர்பிய இராணுவம் செய்த படுகொலைகளை கண்டித்த உலகநாடுகள் செம்மணிப் புதைகுழிகள் விடயத்திலும் அதேயளவு அக்கறையை காட்டவேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் சிறீலங்கா கடற்படை இந்திய எல்லைக்குள் வந்து தமிழக மீனவர்களை தாக்கிக் கொல்லும் கொடுமை இனியும் தொடரக்கூடாது இது குறித்து மத்திய அரசு சிறீலங்கா அரசுக்கு உடனடியாக கண்டனம் தெரிவிப்பதுடன் இறந்துபோன மீனவர்களின் குடும்பத்திற்கு சிறீலங்கா

(☞ 2ம் பக்கம்)

# வன்னி போக்குவரத்து தடை

## 8 பேர் மரணம்; 90 பேரின் உயிர் ஊசலாடுகிறது

வன்னிக்கான போக்குவரத்து தொடர்ந்தும் தடைப்பட்ட நிலையில் அங்கு பல மரணங்கள் நிகழ்ந்துவருகின்றன. கடந்த 23-ம் திகதிவரை மேலதிக சிகிச்சையின்றி 8 பேர் மரணமாகியுள்ளனர். 90 பேரின் உயிர் ஊசலாடிவரும் அபாயகரமான நிலைமையும் எழுந்துள்ளது. இவ் 90 பேரையும் வழமையான நிலைப்படி சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம்தான் வவுனியாவிற்கு அழைத்துவரவேண்டிய நிலைமை இருந்தாலும், இதுவரை செஞ்சிலுவைச் சங்கம் இவர்களை வவுனியாவிற்குக் கொண்டுவருவதற்கு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரிகளின் தகவலின்படி முக்கிய உயிர்காப்பிற்குத் தேவையான மருந்துகள் யாவும் இம் மாவட்டங்களில் முற்றாக முடிவடைந்துவிட்டதால் நிலைமை மிக மிக மோசமாகியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர். வன்னியின் அவலநிலை குறித்து முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர்கள் கொழும்பிற்கு அறிவித்தபோதிலும் இதுவரை எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இன்னும் ஓரிரு நாட்களில் பாதையைத் திறந்து அவசர நோயாளர்களை வவுனியா

(☞ 2ம் பக்கம்)

### வன்னி மக்களுக்காக

# யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஊர்வலம்

## சிறீலங்கா படையினர் தடை

(26.07.99)

யாழ். பல்கலைக்கத்தின் அனைத்துப்பீட மாணவர்களும் ஒன்றுசேர்ந்து வன்னி மக்களின் துயரங்களைப் போக்கும் வகையில், சிறீலங்கா அரசு போக்குவரத்துப்பாதை ஒன்றைத்திறக்க வேண்டும் எனக்கோரியும், சிறீலங்கா ஜனாதிபதிக்கு இக்கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றினை கையளிப்பதற்காகவும் இன்று நண்பகல் யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து யாழ். செயலகத்தை நோக்கி ஊர்வலம் ஒன்றை ஆரம்பித்தனர். ஊர்வலம் பரமேஸ்வராச் சந்தியை வந்தடைந்தபோது மாணவர்களை இடைமறித்த சிறீலங்காபடையினரும், பொலிஸாரும் ஊர்வலத்தை தொடர்ந்து செல்லவிடாது தடை செய்தனர். இதனால் மாணவர்கள் வீதியில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபடத்தொடங்கினர்.

தம்மிடம் முன்னனுமதி பெறாது இவ் ஊர்வலம் நடத்தப்படுவதால் தொடர்ந்து செல்

(☞ 2ம் பக்கம்)

# பாரிசில் தமிழீழ தேசாபிமானிகளின் எழுச்சிவிழா

## 35 இலட்சம் பிரெஞ்சு பிராங்குள் பங்களிப்பு

(25.07.99)

தமிழீழத்தில் வன்னியில் சர்வதேச நாடுகளாலும் சர்வதேச தொண்டர் நிறுவனங்காலும் ஏறக்குறைய கைவிடப்பட்ட நிலையில் அவலமான வாழ்வோடு போராடிக்கொண்டிருக்கும் மக்களின் வாழ்வியல் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக தமிழீழ தேசாபிமானிகள் பலர் பாரிசில் இன்று மாலை எழுச்சியுடன் பங்கெடுத்துக் கொண்டனர்.

மிகவும் உணர்வுபூர்வமாக இடம்பெற்ற இவ் எழுச்சிவிழா நிகழ்வில் தமிழ் மக்களின் இன்றைய போர்க்கால வாழ்நிலை பற்றி பல பேராளர்கள் சிறப்புரை ஆற்றினர். களத்தில் நிற்கும் போராளிகளுக்குக் கரம் கொடுப்பதற்கு புகலிடத் தமிழர்கள் ஆற்ற வேண்டிய பங்கு குறித்தும் இவ் எழுச்சிவிழாவில் ஆராயாப்பட்டுள்ளது.

பாரிசில் வ்ாழும் தமிழர்களில் பலதரப்பட்ட தரப்பினரும் இவ் எழுச்சிவிழாவில் பங்கெடுத்துக்

(☞ 2ம் பக்கம்)

# திருமலை துறைமுகத்தில் குண்டுவெடிப்பு

## கப்பல் மூழ்கியது

(26.07.99)

திருமலை துறைமுக இறங்குதுறையில் நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் ஒன்றில் 'நியூகோ என்டுயரன்ஸச்' என்ற கப்பலொன்று மூழ்கடிக்கப்பட்டுள்ளது. இச் சம்பவத்தில் அக் கப்பலின் பொறுப்பதிகாரியும் பலியாகியுள்ளார்.

நேற்று அதிகாலை 3.30 மணியள்வில் இக் கப்பல் நங்கூரம் இடப்பட்ட பகுதியிலேயே குண்டு வெடித்துள்ளது. இதனால் கப்பலுக்கு பலமான சேதம் ஏற்பட்டு அது படிப்படியாக மூழ்கத் தொடங்கியது. இக்குண்டு வெடிப்பிற்கு விடுதலைப் புலிகளின்

(☞ 2ம் பக்கம்)

# 'பிரபாகரன் மீண்டும் இங்கு வருவார்'

## – காஞ்சிபுர பேராளரின் உரைக்கு பரத்த கரகோசம்

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற ம.தி.மு.கவின் மாநில சுயாட்சி மாநாட்டில் உரையாற்றிய பேராளர் ஒருவர் தமிழ்தேசியத் தலைவர் பிராபாகரன் அவர்கள் மீண்டும் இங்கு வருவார் என தனது உரையில் தெரிவித்தபோது மாநாட்டில் கலந்துகொண்ட மக்கள் பலத்த கரகோசம் செய்தனர். அப்போது மேடையில் தமி

(☞ 2ம் பக்கம்)



உங்கள் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்கிறது
Kumars Shop
S. A. R. L.
80, Bld. Barbes, 75018 Paris. M°: Marcadet Poissonniers
Tél: 01 42 59 35 10 / Fax: 01 42 59 35 00



Singapore
Exchange Co.
38, Rue Saint Quention
75010 Paris. M°: Gare du Nord
Tel: 01 48 74 48 21 / 01 44 53 96 87
Fax: 01 49 70 06 32

தமிழ் மக்களின் இதயநாதமாய் என்றும் முழங்குவது ஈழமுரசு

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE
27 BERNAY, FRANCE.

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்

ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France

E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
**Leama**
**Tel: 0208 2053650**
**Fax: 0208 2053651**

டென்மார்க்:
T. சுரேஸ்காந்த்
Møller vcj - 23
5800 Nyborg, Denmark.
Tel: 65316155 - Fax: 65302588

சுவிஸ்: மக்கள் கடை
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin,
Swiss.
Natel: 079 635 02 16

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
ஹரி - Tel: 07887874177

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
'EELAMURASU'
P.O Box S-109
Homebush South
N.S.W 2140
Australia
E-Mail:ccsydney@one.net.au

# பள்ளிமுனை யுவதியின் சடலம் தோண்டியெடுக்கப்பட்டு கொழும்புக்கு அனுப்பப்பட்டது

மன்னார் பள்ளிமுனைப் பகுதியில் கடந்த 12-ம் திகதியன்று சிறீலங்கா இராணுவத்தினரின் கொடுமையான பாலியல் வல்லுறவுக்குப் பின்னர் பிறப்புறுப்பில் சுட்டுக்கொல்லப்பட்ட ஜடா கமலிற்றாவின் (21) சடலம் பள்ளிமுனைப் பொது மையானத்தில் இருந்து மன்னார் மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் முன்னிலையில் தோண்டியெடுக்கப்பட்டு கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதற்காக கொழும்பிற்கு அனுப்பப்பட்டது. காலை 8.00 மணி அளவில் மன்னார் பிரதேசசபை சிற்றூழியர்கள் சடலப் பேழையினைத் தோண்டியெடுத்தனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## வன்னி மக்கள்...

வதற்கு அனுமதி வழங்க முடியாது என படையினர் மாணவர்களிடம் தெரிவித்தனர். ஆனால் பல்கலைக்கழகத்தில் இருந்து தொலைபேசி மூலமாக யாழ். பொலிஸ் நிலையத்தில் அனுமதி பெற்ற பின்னரே இவ் ஊர்வலம் ஒழுங்கு செய்யப்பட்டதாக மாணவர்கள் தெரிவித்தனர். ஆனால் இதுபற்றி தமக்கு எந்த வித தகவலும் தெரியாது எனக் கூறி படையினர் தொடர்ந்து செல்லாது தடைசெய்தனர்.

வெயிலையும் பொருட்படுத்தாது மாணவர்கள் வீதியில் அமர்ந்திருந்து அமைதியான முறையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவ்விடத்தை விட்டு அகன்று செல்லும்படி படையினர் வற்புறுத்தியும் தம்மால் கலைந்து செல்ல முடியாது என மாணவர்கள் உறுதியாகக் கூறிவிட்டதால் ஏதும் செய்ய முடியாத நிலையில் படையினர் நின்றுள்ளனர்.

இன்று காலையில் பல்கலைக்கழக வளாகத்தில் ஒன்றுகூடிய மாணவர்கள் வன்னி மக்களின் துயரங்களைப் போக்க உடனடியாக தீர்வுகாணப்பட வேண்டிய அவசியத்தை கருத்தில் கொண்டு இவ் ஊர்வலத்தை நடாத்த முடிவுசெய்தனர். வன்னியில் வசிக்கும் மக்களும் இந்த நாட்டின் குடிமக்கள் என்ற வகையில், அவர்களுக்கான உணவுத் தடை நீக்கப்பட வேண்டும், ஏனைய பகுதிகளுக்கு அவர்கள் சென்றுவரும் வகையில் ஒரு போக்குவரத்துப் பாதையைத் திறக்கவேண்டும் என்ற கோரிக்கையும் அடங்கிய மகஜரை தயாரித்து அதை அரசாங்க அதிபரிடம் கையளிப்பதென முடிவு செய்தனர். அதனையடுத்து யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள சிறீலங்கா பொலிஸாருக்கு அறிவித்ததன் பின்னர் இந்த ஊர்வலத்தை நடத்தினார்கள்.

மாணவர்களின் ஊர்வலம் திடீரென படையினரால் தடைசெய்யப்பட்டதையும், இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டதையும் அறிந்த யாழ். அரச அதிபர் கே.சண்முகநாதன் மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கத்தை அவ்விடத்துக்குச் சென்று மாணவர்களின் மகஜரை வாங்கி வருமாறு அனுப்பி வைத்தார். இதையடுத்து வைத்திலிங்கத்திடம் மாணவர்கள் மகஜரைக் கையளித்தனர். மாணவர்கள் அமர்ந்திருந்த இடத்துக்கு யாழ். மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் எஸ். சிறீதரனும் சென்றிருந்தார். மேலதிக அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிக்கப்பட்டதை அடுத்து மாணவர்கள் அமைதியாகக் கலைந்து சென்றனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## காஞ்சிபுரத்தில்...

அரசாங்கத்திடம் இருந்து நட்டஈட்டுதொகை பெற்றுத் தரவேண்டும் எனவும் மாநாட்டின் இன்னொரு தீர்மானம் வலியுறுத்தியுள்ளது.

இம் மாநாடானது பா.ஜ.க., தி.மு.க. கூட்டணி ஏற்படுத்தப்பட்டதன் பின்னர் நடாத்தப்பட்டுள்ளதால் தமிழக அரசியலில் இம் மாநாடு சிறப்பான கவனத்தினையும் ஈர்த்துக்கொண்டுள்ளது. (மாநாட்டின் முழுமையான விபரம் இந்தியச் செய்திப் பக்கத்தில்)

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## திருமலை...

கரும்புலிகளே பொறுப்பென சிறீலங்கா அரசு தெரிவித்துள்ளது. ஆயினும், முன்னர் வெளியான செய்திகளின்படி குண்டுவெடிப்பு இடம்பெற்ற பகுதியில் மிதந்த சடலம் கரும்புலிப் போராளி ஒருவருடையது எனக் கூறப்பட்ட போதிலும், சிறீலங்கா கடற்படை சுழியோடிகள் அச் சடலத்தினை மீட்டு அடையாளம் கண்டபோது அது கப்பலின் பொறுப்பதிகாரியுடையது எனத் தெரியவந்துள்ளது.

குண்டுவெடிப்பு நடைபெற்ற இறங்குதுறையுடன் பொலிஸ் நிலையமும், இறங்குதுறையில் கடற்படையின் நடமாட்டம் அதிகமாக இருக்கின்ற போதிலும், இக்குண்டினைப் பொருத்தியவர்கள் எவ்வாறு அக் கண்காணிப்புக்களை மீறி இறங்குதுறை கடற்பரப்பிற்குள் நுழைந்தார்கள் என்பதில் திருமலை பாதுகாப்பு வட்டாரங்கள் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளன.

## பரதநாட்டிய அரங்கேற்றம்



திரு. திருமதி ஐயம்பெருமாள் - வசந்தா தம்பதியினரின் புதல்வியும், இலங்கை சங்கீத சபை கலா பூஷணம் திருமதி லீலாம்பிகை செல்வராஜா அவர்களது மாணவியுமான **செல்வி ஜமுனா ஐயம்பெருமாள்** அவர்களது பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த ஞாயிறு 27.06.99 ல் இலங்கையில் மருதானை எல்பின்ஸ்டன் அரங்கில் மாலை 5 மணிக்கு நிறைவெய்தியது.

*தகவல்: சித்தப்பா*
*கா. லோகேஸ்வரன்*
*Fachsen Felder Str-8, 73434 A.A. Dewangen.*
*Germany*

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## வன்னி போக்குவரத்...

விற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படாவிடில் அதிகளவான மரணங்கள் ஏற்படுமென வன்னியின் பொது அமைப்புக்கள் எச்சரிக்கை தெரிவித்துள்ளன.

இதேவேளை வன்னியில் இருந்து வவுனியாவுக்கு வந்து மீண்டும் வன்னிக்குச் செல்ல முடியாமல் வன்னியில் பரிதவிக்கும் பெருந்தொகையானோர் தொடர்ந்தும் வவுனியா செயலகத்தின் முன்னால் மறியல் செய்து வருகின்றனர். கடந்த செவ்வாயன்று புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் இருந்து அவசர சிகிச்சை தேவைப்படும் நான்கு நோயாளர்களை ஏற்றிக் கொண்டு வைத்திய அதிகாரிகள் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்திற்குக் கொண்டு வந்து இந்நால்வரதும் அபாயகரமான நிலைமையை விளக்கிக்கூறியபோதிலும் உருப்படியான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## பாரிஸில்...

கொண்டமை ஒரு சிறப்பு நிகழ்வாகும். எழுச்சி விழாவின்போது தமிழீழ மக்களின் பாதுகாப்பிற்கென 35 இலட்சம் பிரெஞ்சு பிராங்குள் உணர்வுபூர்வமாக கூடியிருந்தோரால் வழங்கப்பட்டது. இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான எழுச்சிவிழாக்கள் சகல புகலிட நாடுகளிலும் பீறிட்டுக் கிளம்பும் என விழாவில் பங்கெடுத்துக் கொண்டவர்கள் நம்பிக்கை தெரிவித்ததுடன், அவ்வாறு நடைபெறும் விழாக்களில் புகலிடத் தமிழர்கள் தங்களை இணைத்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## பிரபாகரன்...

மூக முதல்வர் கருணாநிதியும் உட்துறை அமைச்சர் அத்வானியும் அமர்ந்திருந்தனர். மக்களின் கரகோசத்தினை அவர்கள் அவதானித்துக் கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப் போராளரின் உரை முடிந்ததும், வைகோ எழுந்து மேடைக்கு வந்து உரையாற்றியவர் கூறிய கருத்துக்கள் அவரது தனிப்பட்ட கருத்துக்கள் எனவும் குறிப்பிட்டார்.

ERRANCES TRAVELS

**Tel: 01 42 09 70 00**
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,900 Frs. |
| Singapour | - | 3,980 Frs. |
| Madras | - | 4,300 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
Li: 075 95 01 37
(ADV)

## கறுப்பு யூலை நினைவிற்காக பல்கலைக்கழகத்தில் மறியல் போராட்டம்

1983-ம் ஆண்டு யூலை 23-ம் திகதி தமிழ் மக்கள் மீது சிங்கள பேரினவாதம் கட்டவிழ்த்து விட்ட வன்முறைகளைக் கண்டித்தும் அத் துயரத்தினை நினைவு கூரும் முகமாகவும் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த 23-ம் திகதியன்று தமது வகுப்புக்களை பகிஸ்கரித்து வளாகத்திற்கு முன்னால் கறுப்புக் கொடிகளைத் தாங்கியவாறு போராட்டம் ஒன்றினை நடாத்தியுள்ளனர். போராட்டத்தில் வன்னிப்பகுதி மக்களின் பட்டினிச்சாவை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக தரைவழிப்பாதை ஒன்றினைத் திறப்பதற்கு சிறீலங்கா அரசு அனுமதிக்கவேண்டும் எனவும் மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாக பல்கலைக்கழகத்தின மாணவர் பேரவை அறிக்கை ஒன்றினையும் வெளியிட்டுள்ளது. அவ் அறிக்கையில் வன்னி மக்களின் பட்டினிச்சாவைத் தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறும், வன்னிக்கான உணவு விநியோகப் பாதையினைத் திறக்குமாறும் கோருகின்றோம். தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் முகமாக விடுதலைப் புலிகளுடன் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை ஒன்றை நடாத்தி சமாதானத்தை ஏற்படுத்துமாறும் கோருகிறோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## படகுமூலம் அவுஸ்திரேலியா செல்ல முயன்ற தமிழர்கள் கடலில் மூழ்கினர்

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவிற்குள் நுழையும் நோக்குடன் இந்தோனேசியாவில் இருந்து மீன்பிடிப் படகொன்றின் மூலம் பயணித்த சுமார் 20 இலங்கையர்கள் அவுஸ்திரேலியாவில் இருந்து 80 கிலோமீற்றர் தூரத்திலுள்ள கிறிஸ்மஸ்தீவுக் கடலில் மூழ்கியுள்ளனர். இவர்களில் 5 பேர் மாத்திரம் அப்பகுதியால் படகுச் சவாரியில் வந்த தம்பதியினரால் காப்பாற்றப்பட்டுள்ளனர். மிகுதிப் 14 பேரும் கடலில் மூழ்கியுள்ளனர். இவர்களில் ஒருவரது சடலம் மாத்திரம் கிடைத்துள்ளது. ஏனையவர்கள் அனைவரும் இறந்திருக்கலாமென அஞ்சப்படுகிறது.

மூழ்கியவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்ட அவுஸ்திரேலிய கடற்படையினரின் விமானங்களும் கப்பல்களும் 48 மணி நேரத்தின் பின்னர் தமது தேடுதல் முயற்சிகளைக் கைவிட்டனர். காப்பாற்றப்பட்ட அனைவரும் தமிழர்களே என அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது. இயந்திரக்கோளாறு காரணமாகவே இவர்களது படகு மூழ்கியதாகவும் தற்பொழுது பொலிஸ் காவலில் உள்ள இவ் ஐவரும் விரைவில் மீண்டும் சிறீலங்காவுக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் எனவும் அவுஸ்திரேலியப் பொலிசார் குறிப்பிட்டுள்ளனர்.

## மன்னாரில் இரு இளைஞர்கள் பலி

மன்னார் பேசாலை முருகன் கோவிலடியில் சிறீலங்காவின் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இவ் இரு இளைஞர்களும் தம் மீது தாக்குதல் நடாத்த முற்பட்ட வேளையிலேயே தம்மால் சுட்டுக் கொல்லப்பட்டதாக படையினர் தெரிவித்துள்ளனர். ஆயினும் பலியான இளைஞர்கள் யார் என்பது பற்றி இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

இதேவேளை மன்னார் வங்காளவிரிகுடாக் கடலில் மிதந்து வந்த இளம்பெண்ணின் சடலமொன்று கடந்த 20-ம் திகதியன்று கரையொதுங்கியுள்ளது. மன்னார் மாவட்ட நீதிபதி மா. இளஞ்செழியனின் உத்தரவின் பெயரில் இச் சடலம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இச் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

## கண்டியில் மனித உரிமை மாநாடு

ஆசியப் பசுபிக் மனித உரிமைகள் மன்றமும், அவுஸ்திரேலிய மனிதஉரிமை ஆணைக்குழுவும் இணைந்து கண்டியில் மூன்று நாட்களுக்கான மனித உரிமை மாநாட்டினை நடாத்தியுள்ளனர். இம் மாநாட்டின் போது மனித உரிமைகளைப் பாதுகாக்கும் விடயத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து செயற்படக்கூடிய வழிவகைகள் குறித்து ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது. இலங்கையில் மனித உரிமைகளை பாதுகாக்கும் விடயத்தில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து சிறீலங்கா தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு இவ் அமைப்புக்கள் ஆலோசனைகளையும் வழங்கியுள்ளன.

## செய்தியாளர் மீதான தாக்குதலைக் கண்டித்து கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கடந்த 15-ம் திகதியன்று ஐக்கியதேசியக் கட்சியினர் நடாத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம் பற்றிய செய்திகளைச் சேகரிக்கச் சென்ற செய்தியாளர்கள் மீது பொலிசார் நடாத்திய தாக்குதல்களை ஆட்சேபித்து ஊடகவியலாளர்கள் கடந்த 21-ம் திகதியன்று கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தியுள்ளனர். இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலம் கொழும்பு 7-ல் காலை 10.00 மணி அளவில் ஆரம்பித்து. சந்திரிகாவின் அலரிமாளிகையினை நோக்கிச் செல்ல முயன்றது. இவ் ஊர்வலத்தில் இலங்கைப் பத்திரிகையாளர்கள் சங்கம், உழைக்கும் பத்திரிகையாளர்கள், சுதந்திரப் பத்திரிகையாளர்கள் சங்கம் உட்பட பல்வேறு செய்திஸ்தாபன அமைப்புக்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர். சிறீலங்கா செய்தித்துறை அமைச்சர் மங்கள சமரவீரவினதும், சந்திரிகாவின் பாதுகாப்புப் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவரினதும் கொடும்பாவிகளும் கொண்டுசெல்லப்பட்டன. ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசிற்கும் பொலிசாரிற்கும் எதிரான பல கோஷங்களை எழுப்பியவாறு சென்றனர்.

ஆர்ப்பாட்ட ஊர்வலம் முன்னேறிச் செல்கையில் பொலிசார் ஒலிபெருக்கி மூலமாக அப்பகுதி பாதுகாப்பு வலயமாக்கப்பட்டுள்ளதென அறிவித்ததுடன், அனைவரையும் கலைந்து செல்லும்படியும் உத்தரவிட்டனர். ஆயினும் ஊர்வலம் தொடர்ந்து சென்றது. உடனடியாக பொலிசார் வீதியை மறித்து ஊர்வலத்தினைத் தடுக்க முயன்றனர். அவ்வேளை இருதரப்பினருக்கும் இடையே காரசாரமான வாக்குவாதங்களும், இழுபறிகளும் நிகழ்ந்தன. கூடுதல் பாதுகாப்பிற்கென மேலும் நூற்றுக்கணக்கான பொலிசார் அவ்விடத்திற்கு வரவழைக்கப்பட்டதுடன் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்வதற்கும் பொலிசார் தரப்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதன் காரணமாக ஆர்ப்பாட்டம் அவ்விடத்தில் நிறுத்தப்பட்டு கொடும்பாவிகள் வீதியில் எரிக்கப்பட்டதன் பின்னர் ஊர்வலம் கலைந்துசென்றது.

## அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தில் 50 இலட்சம் ரூபா கொள்ளை

சிறீலங்காவின் அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தினுள் கடந்த வெள்ளியன்று அதிகாலை வேளை நுழைந்த ஆயுதபாணிகள் சிலர் ஊழியர்களின் சம்பளப் பணமான 50 இலட்சம் ரூபாவை அப்பணம் வைக்கப்பட்டிருந்த இரும்புப் பெட்டகத்துடன் தூக்கிக்கொண்டு தப்பிச்சென்றுவிட்டனர். பாதுகாப்பு ஊழியர்களை துப்பாக்கி முனையில் தாக்கி அறையொன்றினுள் அடைத்து வைக்கப்பட்ட பின்னரே இக்கொள்ளை இடம்பெற்றுள்ளது. கொள்ளைச் சம்பவத்தின் பின்னர் பொலிசார் அவ்விடத்தில் தேடுதல் நடாத்தியபோதிலும் வீதியோர புதர் ஒன்றினுள் இருந்து பணம் எடுக்கப்பட்ட நிலையில் வெறுமையாகப் பெட்டகத்தை மாத்திரம் கொள்ளையர் விட்டுள்ளனர்.

## தம்பாலைப் படைமுகாம் பொறுப்பதிகாரி குண்டுவெடிப்பில் பலி

அச்சுவேலி தம்பாலை படைமுகாம் அருகேயுள்ள தோட்டமொன்றில் புதைத்துவைக்கப்பட்டிருந்த குண்டொன்று வெடித்ததில் இராணுவமுகாம் பொறுப்பதிகாரி கொத்தலாவலவும் அவரது உதவியாளரும் பலியாகி உள்ளார்கள். படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள இத் தோட்டத்தில் பாரிய குண்டொன்று புதைத்துவைக்கப்பட்டிருப்பதாக முகாமிற்குக் கிடைத்த தகவலையடுத்தே அக்குண்டினை மீட்பதற்கு பொறுப்பதிகாரி தலைமையில் இராணுவ அணியொன்று புறப்பட்டது. குறிப்பிட்ட அக்குண்டினைத் தோண்டியெடுக்க முனைந்த வேளை அக்குண்டு வெடித்ததன் காரணமாகவே இவ்விருவரும் பலியாகியுள்ளனர்.

## இராணுவ வேலியின் மின்சாரம் தாக்கி மீனவர் பலி

வேலணை மேற்கில் முகாமிட்டிருக்கும் சிறீலங்காக் கடற்படையினரின் மின்சாரப் பாதுகாப்பு வேலியில் தவறுதலாக தொட்ட மீனவர் ஒருவர் அவ்விடத்திலேயே துடிதுடித்துப் பலியாகியுள்ளார். கடற்தொழிலுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மீனவர், தான் கையில் கொண்டுவந்த மீன்பிடி உபகரணமொன்று தரையில் வீழ்ந்ததால் அதனை எடுக்கக் குனிந்தபோதே தவறுதலாக அவரது கையிலிருந்த மீன் குத்தும் கம்பியொன்று படையினரின் மின்சார வேலியில் தட்டுப்பட்டுள்ளது. உடனே மின்சாரம் இம் மீனவரைத் தாக்கியுள்ளது. நிலைதடுமாறிய இம் மீனவர் மின்சார வேலியின் மேலே விழுந்து துடிதுடித்துப் பலியாகியுள்ளார். இம் மீனவர் ஆறு பிள்ளைகளின் தந்தையாவார்.




### பௌசியின் 'தெமிழ்'

சிறீலங்காவின் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு பௌசி பொறுப்பானவர். தமிழ் மக்கள் பெரும்பான்மையாகவுள்ள மாத்தளை அலுவலகத்தின் பெயர்ப் பலகையில்தான் இப்படுகொலை. உண்மையில் இப் பெயர்ப்பலகையில்
'போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை
ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியின் மூன்றாம்கட்ட பாதை அபிவிருத்தித் திட்டம்'
என்றிருக்க வேண்டும். ஆனால் இருப்பதோ.....

# வன்னிப்பாதை திறப்பு
## சர்வதேச அமைப்புக்களை புலிகள் வன்னியில் சந்திப்பு

வன்னிக்கான போக்குவரத்துப் பாதை திறப்பதற்கு விடுதலைப்புலிகள் நிபந்தனை எதனையும் விதிக்காதபோதிலும், சிறீலங்கா அரசு அது தொடர்பான பொய்ப்பிரச்சாரத்தினை மேற்கொண்டுவருவது தெரிந்ததே.

கடந்த புதனன்று சர்வதேசத் தொண்டர்நிறுவனப் பிரதிநிதிகளையும் கிளிநொச்சி, முல்லைத்தீவு அரச அதிபர்களையும் வன்னியில் சந்தித்து விடுதலைப் புலிகள் பேச்சுக்களை நடாத்தினர். இப்பேச்சுக்களுக்கு புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தலைமை தாங்கினார். வன்னிக்கான போக்குவரத்துப் பாதையைத் திறப்பதற்கு விடுதலைப் புலிகள் நிபந்தனை எதனையும் விதிக்கவில்லை எனவும், புலிகளின் முன்னணிக் காவலரண்களுக்கும், இராணுவத்தினரின் முன்னணிக் காவலரண்களுக்கும் இடையே உள்ள பகுதியை பாதுகாப்புப் பிரதேசமாக இராணுவத்தினர் ஏற்கும் பட்சத்தில் வன்னிக்கான போக்குவரத்துப் பாதையை விடுதலைப் புலிகள் திறப்பதற்கு தயாராக இருப்பதாகவும் அக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இக்கூட்டம் நடைபெற்று முடிந்ததும் அது தொடர்பான விபரங்களை புலிகள் அறிக்கையாக வெளியிட்டுள்ளனர்.

பாதை திறப்பு விடயமானது வன்னிப் பகுதி மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினையாக மாறியுள்ளது. இந்த நேரத்தில் உயிலங்குளம் பள்ளமடு ஊடான பாதையை, அல்லது மாங்குளம் ஊடான பாதையை நாம் திறப்பதற்குத் தயாராக இருக்கின்றோம். மனிதாபிமானத்துடன் அணுகப்படவேண்டிய இப் பிரச்சினையை அரசு தனது குறுகிய இராணுவ அரசியல் இலாபத்திற்காகப் பயன்படுத்துகின்றது. இது அநாகரீகமானது. சர்வதேச மனிதவுரிமை விதிகளை மீறும் ஒரு செயலுமாகும். சிறிலங்கா இராணுவத் தரப்பினரே எம்மால் ஏற்கமுடியாத நிபந்தனைகளை விதித்து வன்னிப்பகுதி மக்களை பட்டினிச்சாவிற்குள் தள்ளிவிட்டனர்.

கடந்த சில மாதங்களாகவே வன்னிக்கான பாதை அமைந்திருந்த பகுதிகளில் பல இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு அரசு திட்டமிட்ட முறையில் வன்னிக்கான பாதையினை மூடியது. இதன்காரணமாக வன்னி மக்கள் பலர் மரணமடைந்துள்ளார்கள். இன்னும் பலர் மரண அபாயத்தை எதிர்நோக்கியுள்ளார்கள். எனவே இவ்வாறான நேரத்தில் இராணுவத்தினரின் இவ்வாறான செயற்பாட்டை சர்வதேசத் தொண்டர் நிறுவனங்கள் கண்டிக்க வேண்டும். சிறிலங்கா அரசின்மீது அழுத்தத்தினைப் பிரயோகித்து இதற்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மகசீன் சிறையில் தமிழ் இளைஞர் மரணம்

தெஹிவளையில் உள்ள விடுதியொன்றில் காசாளராகக் பணிபுரிந்த தமிழ் இளைஞர் ஒருவர் கடந்த 14-ம் திகதி கைது செய்யப்பட்டு மகசீன் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார். இவ் இளைஞர் கடந்த 20-ம் திகதியன்று அங்கு மரணமாகியுள்ளார். சுளிபுரம் மேற்கைச் சேர்ந்த 33 வயதான செல்வநாயகம் சிவலிங்கம் என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவர்.

14-ம் திகதி நள்ளிரவுவேளையில் சிறிலங்கா இராணுவத்தினரால் தெஹிவளை விடுதியில் இருந்து நான்குபேர் கைதுசெய்யப்பட்டனர். இந் நால்வரும் அவ் விடுதியின் பணியாளர்களாவர். இவர்கள் அனைவரையும் மகசீன் சிறையில் இராணுவத்தினர் தடுத்து வைத்திருந்தனர். இந்த நேரத்தில் சிவலிங்கம் என்பவரின் உடல்நிலை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. இவருக்குச் சிகிச்சை அளிப்பதற்கு சிறைச்சாலை அதிகாரிகள் மறுத்துவிட்டனர். இந்த நிலையில் கடந்த 20-ம் திகதியன்று இவர் சிறைச்சாலையில் மரணமடைந்துள்ளார். இவரது சடலத்தினை உறவினர்களிடம் கையளித்த சிறைச்சாலை நிர்வாகம் சுகயீனம் காரணமாகவே இவர் மரணமானதாகவும் தெரிவித்துள்ளது. இவ் இளைஞர் வருகிறமாதம் திருமணம் செய்ய இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மடு அகதிகள் தற்போதும் அகதிகளே!
## ரத்வத்தைக்கு ஜெயலத் பதிலடி

மடு அகதிமுகாமில் இருந்த அகதிகளை மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்திவிட்டதாக சிறிலங்கா பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை அறிவித்திருப்பதானது அப்பட்டமான பொய்யென ஐ.தே.க.வின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார். மடு அகதிமுகாமில் இருந்து அகதிகளின் விருப்பத்திற்கு மாறாகவும், கத்தோலிக்க சபையின் வேண்டுகோளைப் புறக்கணிக்கும் வகையிலும் செயற்பட்ட அரசு, அகதிகளை முருங்கன் பகுதியில் உள்ள முகாம்களுக்கு மாற்றியுள்ளதே தவிர, அவர்களது பழைய இடங்களில் அவர்களைக் குடியமர்த்தவில்லை எனவும் தெரிவித்த ஜெயலத் இதனை அரசு மறுக்குமாயின் அதற்கான ஆதாரங்களைக் காட்டுவதற்குத் தயாரா எனவும் வினவியுள்ளார்.

அகதிகளுக்கு உதவும் நோக்கில் தாம் செய்துவரும் மருத்துவ முகாம்கள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்த தவறான கருத்துக்கள், தனது உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய சூழ்நிலையைத் தோற்றுவித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசு இன்று கூறிவருவது போல மடுத்தேவாலயம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் ஒருபோதும் இருக்கவில்லை. எவரும் சுதந்திரமாகப் போய்வரக் கூடிய ஒரு பிரதேசமாகவே அது இருந்துவந்துள்ளதனையும் இச் சந்தர்ப்பத்தில் ஜெயலத் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கிழக்குத் தேர்தல்கள் குறித்து
## இராணுவம் தமிழ்க்குழுக்களுடன் பேச்சு

மட்டக்களப்பு மாவட்டத்தில் செயற்படும் தமிழ் குழுக்களை சிறிலங்காவின் கிழக்குப் பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் செனிவிரட்ன கடந்தவாரம் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தியுள்ளார். கிழக்கில் தேர்தல் நடாத்துவது தொடர்பாகவே இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது. ரெலோ, புளொட், ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய குழுக்களின் உறுப்பினர்கள் இச்சந்திப்பில் பங்கெடுத்துக்கொண்டனர்.

மட்டு மாவட்டத்தின் பெரும் பகுதிகளில் விடுதலைப்புலிகள் நடமாடுவதால் தாம் சுதந்திரமாக தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது எனத் தெரிவித்த இக்குழுக்கள், தற்போதைய சூழலில் கிழக்குத் தேர்தல்களை நடாத்தமுடியாது எனவும் குறிப்பிட்டுள்ளன. இதே வேளை மட்டு. மாவட்டத்தில் பொலிசார் உட்பட சகல படையினரதும் வேலை விடுப்புக்கள் மறு அறிவித்தல்வரை ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மட்டக்களப்பு வாவிக்கு அப்பால் உள்ள பகுதிகளில் இராணுவ நடவடிக்கை ஒன்றினை மேற்கொள்வதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கை இதுவாக இருக்கலாம் என மட்டக்களப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## புனானை காவலரண் மீது தாக்குதல்
## இரு சிப்பாய்கள் பலி

வாழைச்சேனை - கொழும்பு பிரதான வீதியில் உள்ள புனானை இராணுவ முகாமின் முன்னரங்கக் காவலரண் ஒன்றின்மீது விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலில் இரு சிப்பாய்கள் பலியாகியுள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

கடந்த 21-ம் திகதி காலை 6.30 மணியளவில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. காவலரண்மீது புலிகள் எறிகணை வீச்சினையும், துப்பாக்கிப் பிரயோகத்தினையும் மேற்கொண்டு அதனை அழித்துள்ளனர். அப்பொழுதே இவ்விரு சிப்பாய்களும் பலியாகியுள்ளனர்.

இதேவேளை ஏறாவூர்ப் பகுதியில் சிறிலங்காப் பொலிஸ்காரர் ஒருவர் விடுதலைப்புலிகளின் கைத்துப்பாக்கி அணியின் தாக்குதலினால் பலியாகியுள்ளார். இரவுக் கடமையில் பொலிசார் ஈடுபட்டபோதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத் தாக்குதலை அடுத்து பொலிசார் மேற்கொண்ட பழிவாங்கும் தாக்குதல்களால் இரு முஸ்லீம் பெண்கள் படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர். இவ் இருவரும் தாயும் மகளுமாவார்கள்.

ஜேர்மனி பொன் (Bonn) நகரில்

யாழ் ரவல்ஸ்

YARL TRAVELS

Thomas Mann Str 21,53111 Bonn

உலகின் எப்பாகங்களுக்கும் மலிவு விலையில்

பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்

சிறீலங்கா, இந்தியா, சிங்கப்பூர், கனடா

ஆகிய நாடுகளுக்கு விசேட சலுகைகள்.

தொலைபேசி இலக்கம்: 0228/9652885 – தொலைநகல்: 0228/9652985

GE-Pub.

## நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது சாத்தியமில்லையாம்

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பது தற்போதைய சூழ்நிலையில் சாத்தியமற்றது என பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சந்திரிகாவின் அவசர பணிப்பின் பேரில் கூட்டப்பட்ட இக் கூட்டத்தில் பல்வேறு விடயங்களும் ஆராயப்பட்டன. நிறைவேற்று அதிகார முறையை தற்போதைக்கு நீக்கமுடியாது என பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளரும் காணி அமைச்சருமான எம்.ஜெயரட்ன தெரிவித்திருக்கிறார். இம் முடிவுக்கு பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளும் முழுமையான பங்களிப்பை வழங்கவேண்டும் என சந்திரிகா வலியுறுத்தியுள்ளார்.

## வன்னியில் உயர்தரப் பரீட்சை நடக்குமா?
### மாணவர்களும் ஆசிரியர்களும் குழப்பம்

வன்னிக்கான போக்குவரத்துத் தடை காரணமாக அடுத்த மாதம் 2-ம் திகதி நடைபெறவுள்ள கல்விப்பொதுத் தராதர பரீட்சை மற்றும் அதிபர்கள் தெரிவிற்கான போட்டிப் பரீட்சை ஆகியன நடக்குமா என்பதனையிட்டு ஆசிரியர்களும், மாணவர்களும் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளனர்.

வன்னிக்கான பாதை திறப்பு சாத்தியம் குறித்து சிறீலங்கா பரீட்சைத் திணைக்களமும் உறுதிப்படுத்தப்படாமையினால் மேற்படிப் பரீட்சைகளில் மாணவர்கள் தோற்றமுடியாத நிலையே ஏற்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை வன்னிப்பகுதிக்கான உயர்தரப் பரீட்சை வினாத்தாள்களை எடுத்துச்சென்று விநியோகிக்கும் பொறுப்பினை சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் ஏற்றுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# வடமராட்சி இராணுவ நடவடிக்கை முடக்கம் குடத்தனைக் காடுகளுக்கு துருப்புக்கள் தீவைப்பு

வடமராட்சி கிழக்குப் பகுதியில் பெருமெடுப்பிலான இராணுவ நடவடிக்கை ஒன்றினைக் கடந்த 20-ம் திகதி ஆரம்பித்த சிறீலங்காத் துருப்பினர் கடந்த 22-ம் திகதியன்று தமது இராணுவ நடவடிக்கையை முடித்துக் கொண்டு முகாம் திரும்பினர். இவ் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து விடுதலைப் புலிகள் நடாத்திய எதிர்த் தாக்குதல் காரணமாகவே இராணுவத்தினர் தமது பழைய நிலைகளுக்கு திரும்ப நேரிட்டுள்ளது.

அடம்பன், வரணி, குடத்தனை, பொற்பதி ஆகிய கிராமங்களை நோக்கி நாகர்கோயில் வல்லிபுரம், வரணி ஆகிய இடங்களில் உள்ள சிறீலங்கா முகாம்களில் இருந்த படையினர் கவசவாகனங்களின் உதவியுடன் நகரத் தொடங்கினர்.

படைநடவடிக்கையை வழிநடத்துவதற்காக வல்லிபுரம் படைமுகாமில் இராணுவத்தினரின் தற்காலிக அலுவலகம் ஒன்றும் திறக்கப்பட்டது. படையினர் முன்னேறிச் செல்ல வேண்டிய இடங்களைநோக்கி தென்மராட்சியில் உள்ள படைமுகாமில் இருந்து பலத்த எறிகணைவீச்சுக்களும் இடம்பெற்றுள்ளன. ஆயினும் முன்னேறிய படையினரை எதிர்கொண்ட விடுதலைப்புலிகளின் அணிகள் தமது எதிர்த்தாக்குதலை நடாத்தியுள்ளனர்.

இத் தாக்குதலில் மூன்று படையினர் பலியாகியதுடன் மேலும் எழுவர் காயமடைந்ததாக வடமராட்சி செய்திகள் தெரிவிக்கின்றன. அத்துடன் படையினரின் கவசவாகனப் பிரிவின் மீதும் விடுதலைப் புலிகள் கடுமையான தாக்குதல் நடாத்தியதால் அவர்களின் முன்னேற்றமும் தடைப்பட்டது. விடுதலைப் புலிகளின் தாக்குதல் மேலும் மேலும் அதிகரிக்கவே கடந்த 22-ம் திகதி மாலையுடன் இந்த இராணுவ நடவடிக்கை முடிவிற்குக் கொண்டுவருவதாக இராணுவம் அறிவித்தது. ஏற்கனவே இவ் இராணுவ நடவடிக்கை ஒருவாரகாலத்திற்கு நீடிக்கும் என இராணுவ தரப்பு தெரிவித்திருந்தது.

மீண்டும் தமது பழைய நிலைகளுக்கு துருப்புக்கள் திரும்பினர். ஆயினும் குடத்தனையில் உள்ள சவுக்குக் காடுகளுக்கு படையினர் தீவைத்து அழித்துள்ளனர். இந்நாசகார நடவடிக்கையால் ஏராளமான சவுக்கு மரங்கள் அழிந்துள்ளன.

# கைக்குண்டு வீச்சு சிப்பாய் பலி

மட்டக்களப்பு வந்தாறுமூலைப் பகுதியில் கடந்த 23-ம் திகதியன்று காலை 9.30 மணியளவில் நடாத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல் ஒன்றில் சிறீலங்காச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். அத்துடன் மேலும் ஒரு சிப்பாய் காயமடைந்துள்ளார். வீதிச் சோதனையை நடாத்திய இராணுவ அணியொன்றே இக்குண்டு வீச்சிற்கு இலக்காகியுள்ளது. இச்சிப்பாய்கள் மாவடி வேம்புப் படைமுகாமில் இருந்து புறப்பட்டு வந்த சிறிது நேரத்திற்குள் இத் தாக்குதல் நடைபெற்றுள்ளது. கைக்குண்டு வீசப்பட்டதும் படையினர் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தினை நாலாபக்கமும் மேற்கொண்டனர். அத்துடன் வீதியால் சென்ற பொதுமக்களையும் கடுமையாகத் தாக்கினர். இதனால் தானியங்கி இழுவையொன்றின் சாரதியுட்பட 5 பேர் காயமடைந்துள்ளனர். படையினர் மட்டக்களப்பு வாழைச்சேனை வீதி போக்குவரத்தினையும் சிறிது நேரத்திற்குத் தடைசெய்தனர்.

இது ஒருபுறமிருக்க கடந்த 24-ம் தியதியன்று வாழைச்சேனைப் பொதுமயானத்தில் காவலரணில் இருந்த சிப்பாய் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் காலில் படுகாயம் அடைந்துள்ளார். புதுக்குடியுருப்பு காளிகோயிலுக்கு முன்பாக இவர் நின்றவேளையே காவலரண் சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டுள்ளார்கள்.

# 'வன்னிக்கான பாதையைத் திற' படுவான்கரையில் கண்டனப் பேரணி

வன்னிக்கான போக்குவரத்துப் பாதையைத் திறப்பதற்கு சிறீலங்கா அரசு அனுமதி அளிக்க வேண்டும் எனக்கோரி கரடியனாறு, போரதீவு ஆகிய பகுதிகளில் கடந்த 22-ம் திகதியன்று கண்டனப் பேரணிகள் நடாத்தப்பட்டுள்ளன. மக்களுக்கான உணவினையும் மருந்தினையும் சிறீலங்கா அரசு போராயுதமாக பயன்படுத்துவதை உடனடியாக நிறுத்தக்கோரியும், விடத்தல்தீவு தேவாலயம் மீது நடாத்தப்பட்ட விமானக் குண்டுவீச்சினையும் கண்டித்து இப்பேரணியில் சுலோகங்கள் எழுப்பப்பட்டன.

காலை 9.00 மணிக்கு ஆரம்பித்த இப் பேரணிகள் பட்டிப்பளைப் பிரதேச செயலகத்தை நோக்கிச் சென்றடைந்தன. இவ் ஊர்வலங்களில் பெருந்தொகையான மக்களும் வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகளும் திரண்டிருந்தனர். மாட்டுவண்டில்களிலும் உளவு இயந்திரங்களிலும் மோட்டார் வாகனங்களிலும் மக்கள் இப்பேரணிக்காக வந்திருந்தனர். அத்துடன் இவ் ஊர்திகளும் பேரணியில் பங்கெடுத்துக்கொண்டன.

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவினதும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தையினதும் கொடும்பாவிகள் இப் பேரணியில் கட்டி இழுத்துக்கொண்டுவரப்பட்டு தீயிட்டுக் கொழுத்தப்பட்டன. இப் பேரணி காரணமாக ப்ட்டிப்பளை, போரதீவு, வவுணதீவு பிரதேசச் செயலகப் பிரிவுகளில் உள்ள அலுவலகங்கள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

அப் பகுதிகளில் இருந்து பொதுமக்கள் எவரும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் அன்றைய தினம் வராத காரணத்தால் பட்டிருப்புப் பாலமூடான போக்குவரத்துக்களும் இடம்பெறவில்லை.


**உங்கள் தலைமுடி உதிர்கின்றதா?**
**கவலை வேண்டாம்**
**இதோ ஜேர்மனியின் புதிய கண்டுபிடிப்பு**

தலைமுடி உதிர்வு, கணைவெடிப்பு, இளநரை, மற்றும் முடிவளர்ச்சி நிறுத்தம் போன்றவற்றால் விரக்தியடைந்து போயுள்ளவர்களுக்கு ஓர் நற்செய்தி!
இந்தப் பிரச்சினைகள் வயதானவர்களுக்கும் ஏற்படலாம். இள வயதினருக்கும் ஏற்படலாம். ஆனால் இக் குறைபாடுகளை Naturina® வை தொடர்ந்து உபயோகிப்பதன் மூலம் தடுத்து நிறுத்தலாம்.
இத் தயாரிப்பு நீண்டகாலமாக ஆய்வுகளில் ஈடுபட்டுவந்த ஜேர்மனி முன்னணி நிறுவனத்தின் கண்டுபிடிப்பு.
**Naturina® இயற்கையான மருத்துவத்தின் கலவைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் உயிர்ப்புக் கலவையாகும்.**
இத் தயாரிப்பு எந்தவித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது.
எமது புதிய தயாரிப்பைப் பயன்படுத்துவதன் மூலம் சர்மம் பளபளப்புத் தன்மையையும், ஆரோக்கியமான தோலினையும், பலமான நகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
எமது Naturina® தயாரிப்புக்களான கூட்டுக்குளிகைகள், ஷம்பு, கூந்தல் தைலம் (Capsules. Shampoo, Hair tonic) ஆகியவற்றை ஏக காலத்தில் 3 மாதங்களுக்குத் தொடர்ச்சியாக பயன்படுத்தினால் பயன் நிச்சயம்.
***இன்றே பாவியுங்கள் Naturina® உங்களை நிச்சயம் திருப்திப்படுத்தும்!***






**எமது ஸ்தாபனத்தின் தயாரிப்புக்களை உபயோகித்து பலன் பெற்றோர் கூறுவதைக்கேட்டு நீங்களும் பயன்பெறுங்கள்.**

**சுவிற்சலாந்திலிருந்து: திரு. ராஜன்.**
*நான் இந்த Naturina® தயாரிப்புக்களைக் கடந்த 3 மாதங்களாகப் பாவித்து குறுகிய காலத்தில் எனது தலைமயிர் உதிர்வைக் குறைத்துக்கொண்டேன்.*

**டென்மார்க்கிலிருந்து: திருமதி துரைராஜா.**
*நான் Naturina® மாத்திரைகளைப் பயன்படுத்தி எனது தோல் பிரச்சினைகளையும் நக அழகையும் பேணிக்கொண்டுள்ளேன்.*

**இங்கிலாந்திலிருந்து: திருமதி ரேணுகாதேவி.**
*இந்த Naturina® தயாரிப்புக்களைப் பற்றி பத்திரிகையில் படித்தபோதும் அதன் பிரதி பலன்களை நான் முழுமையாக நம்பவில்லை. இருந்தும் இவற்றை பயன்படுத்தியதில் முழுப் பலனையும் அடைந்துள்ளேன்.*

மேலதிக விபரங்களுக்கு:
**Intercare Handels GmbH**
Munster str 5, 59065 Hamm-Germany
Tel: 0049 2381 688347 / Fax: 0049 2381 688349 (நாம் தமிழும் கதைப்போம்)
Internet: http://www.intercare-naturina.com


பிரித்தானிய தொடர்புகளுக்கு:
**Dr. Lawrie / Dr. Nandakumar**
Tel: 0181 5216338
Mobil: 079 30471356

# ஒட்டப்பம் வீட்டைச்சுடும்!

சிறீலங்காவின் பௌத்த பேரினவாத வரலாற்றில் சிறில்மத்தியூ என்றொரு பெயரும் பதிவாகியிருக்கிறது. தமிழ் மக்கள் மீது அப்பட்டமான இன துவேசத் தாக்குதல்களைத் தொடுப்பதுதான் சிறில்மத்தியூவினது வேலை. இத்தகைய அம்சம் அவருக்கு இருந்ததால் ஐக்கிய தேசியக் கட்சியின் மிகப் பிரபலமான பிரமுகராகவும் அவர் திகழ்ந்தார். சிறீலங்காவின் உருக்குக் கூட்டுத்தாபனம் சிறில்மத்தியூவினது கைத்தொழில் அமைச்சின்கீழ்தான், ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் காலப்பகுதியில் இருந்தது. இப்பொழுது இப்பத்தியில் சிறில் மத்தியூவைப் பற்றி குறிப்பிடுவதற்கு என்ன அவசியம் என நீங்கள் கருதலாம். ஆனால் அவசியமிருக்கிறது. 1983-ம் ஆண்டு சிறீலங்கா பேரினவாதம் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட யூலை படுகொலைகளைப் பற்றி குறிப்பிட வேண்டுமானால், அங்கு சிறில்மத்தியூவைப் பற்றியும் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

சிறில்மத்தியூவின் பொறுப்பிலிருந்த உருக்குக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சாலைகளில் யூலை மாதத்திற்கு முன்பான சில மாதங்களில் பல்லாயிரக்கணக்கான உருக்குக் கத்திகள் உற்பத்திசெய்யப்பட்டன. இதே கத்திகள்தான் யூலை இனக்கலவரங்களில் சிங்களக் காடையரின் கைகளில் இருந்துள்ளன. இப்பொழுது சிறில்மத்தியூவைப் பற்றி அதிகம் கூறத்தேவையில்லாத அளவிற்கு அவரது இன வெறியின் உச்சம் உங்களுக்குப் புரிந்திருக்கும். இந்தக் கத்திகள் தயாரித்த தயாரிப்பு விடயம் பற்றி, அப்போது சிறீலங்காப் பாராளுமன்றத்தில் தமிழ் மக்களுக்கு ஆதரவாகக் குரல்கொடுத்துவந்த கலவான தொகுதி அங்கத்தவர் 'சரத் முத்தெட்டுவேகம' பகிரங்கப்படுத்தியிருந்தார்.

யூலை 24-ம் திகதி ஆரம்பித்த இனக் கலவரங்கள் பின்னர் நாடெங்கிலும் பரவலாகியது. தமிழர்கள் வசித்த வீடுகள் பற்றிய விபரங்களை வாக்காளர் பட்டியலில் இருந்து தெரிந்து வைத்துக்கொண்டு அந்த விபரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட வீடுகளின் மேல் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. வீடுகளை இனங்காட்டுவதற்கு சிங்களத் தபால்காரார்களும் கணிசமான பங்களிப்பினைச் செய்துகொண்டார்கள். இவ்வேளை 'டெயிலி ரெலிகிராப்' என்ற பத்திரிகைக்குப் பேட்டியளித்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா, 'இப்போது யாழ்ப்பாண மக்களின் அபிப்பிராயத்தைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. இந்த வேளை நாங்கள் அவர்களைப் பற்றிச் சிந்திக்கவும் முடியாது. அவர்களின் வாழ்க்கையைப் பற்றியோ அவர்கள் எங்களைப் பற்றி என்ன நினைக்கின்றார்கள் என்பதைப் பற்றியோ சிந்திக்க முடியாது' எனக் குறிப்பிட்டிருந்தார். தமது அரச தலைவரின் கூற்று இவ்வாறிருக்க, சிங்களக் காடையர்களின் அராஜகங்களோ தலைவிரித்தாடின. கலவரம் மிகத் தீவிரமாக நடந்த நான்கு நாட்களும் ஜே.ஆர்.




ஜெயவர்த்தனா மௌனமாகவே இருந்தார். வானொலியிலோ அல்லது தொலைக்காட்சியிலோ நாட்டு மக்களுக்கு உரையாற்ற அந்த 'நான்கு' நாட்களிலும் அவர் முன்வரவில்லை. தமிழர்கள் மீதான தாக்குதல்கள் முடிவடைந்த பின்னர்தான் அவர் தனது வாயைத் திறந்தார். ஆனாலும் கக்கப்பட்டவையோ மிக நச்சுத்தனமான கருத்துக்கள்தான்.

'நடைபெற்ற கலவரங்கள் சிங்களமக்களின் பொதுவான வெகுஜன இயக்கமே ஒழிய, நகரப்புறக் கலகக் கும்பல்களின் தாக்குதல்கள் அல்ல' எனவும் 'சிங்கள மக்களின் தொடர்ச்சியான வேண்டுகோளுக்கும் அவர்களின் தேசிய நன்மதிப்பிற்கும் இணக்கம் தெரிவிக்கவேண்டிய நேரம் வந்துவிட்டது' எனவும் அவர் அவ் உரையில் சிங்கள மக்களை தமிழர்களுக்கெதிராக மேலும் தாக்குதல்களை நடாத்தக்கூடிய வகையில் கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். ஆனால் தற்பொழுது அதே ஜெயவர்த்தனா உயிருடன் இல்லை. ஆயினும் அவர் வளர்த்தெடுத்த கருத்துக்களைக்கொண்ட சிங்கள வீரவிதான இயக்கம் இன்று சிறீலங்காவில் வேரூன்றியுள்ளது. இப்போது குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால், ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அபிலாசையை மாத்திரமல்ல, சந்திரிகாவின் அபிலாசைக்கும் செயற்திட்டம் கொடுப்பதுதான் வீரவிதானவின் நோக்கம். அரசியல் ரீதியான கொள்கைகளில் சந்திரிகாவிற்கும் ஜே.ஆரிற்கும் சிறிதளவான வேறுபாடுகள் இருந்தாலும் தமிழர்களை ஒழித்துக் கட்டுவதென்ற கொள்கையில் இருவருக்கும் ஒரே கருத்துத்தான். 1983-ம் ஆண்டு தமிழர்கள்மேல் ஜே.ஆரின் வாரிசுகள் மிலேச்சத்தனமான வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டதன் வளர்ச்சி இன்று சிங்களப் பத்திரிகையாளர்கள் மீதே தாக்குதலை நடாத்துமளவிற்கு வளர்ந்துள்ளது. அன்று தமிழ் மக்கள் மீதான தாக்குதல்களின்போது வாய்மூடி மௌனிகளாக இருந்த சிங்களச் செய்தியாளர்கள், இன்று தம்மீது தாக்குதல் நடாத்தப்பட்டதும் சிறீலங்காவின் ஜனநாயகம் சாகடிக்கப்பட்டுவிட்டதாக கூக்குரலிடுகின்றார்கள்.

கடந்த 15-ம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியினரால் நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் செய்திகளைச் சேகரிக்கச் சென்ற செய்தியாளர்கள் மீது அரச ஆதரவுக் குண்டர்கள் மிகக் கடுமையான தாக்குதலை நடாத்தியிருந்தனர். 1970-ம் ஆண்டிற்குப் பிறகு ஊர்வலக்காரர்கள் மீது நடாத்தப்பட்ட மோசமான தாக்குதல் எனக்கூட இது வர்ணிக்கப்படுகிறது. தம்மீது நடாத்தப்பட்ட இத்தகைய தாக்குதல்களுக்கெதிராக கண்டனம் தெரிவிக்கும் நோக்குடன் செய்தியாளர்களும் ஊடகவியலாளர்களும் கடந்த 21-ம் திகதியன்று அரசிற்கெதிரான போராட்டத்தை நடாத்தினர். சந்திரிகாவின் அலரி மாளிகையை நோக்கிச் செல்லவும் இவர்கள் முற்பட்டனர். ஆனால் அப்போது சிறீலங்காவின் பாதுகாப்பு வட்டாரங்கள் செய்தியாளர்களின் இப் போராட்டத்தை சர்வதேச அரங்கில் இருந்து திசை திருப்புவதற்காக கதையொன்றினைக் கட்டிவிட்டனர். கொழும்பில் தாக்குதல் நடாத்தும் நோக்குடன் கரும்புலி ஒருவர் நுழைந்திருப்பதால் ஜனாதிபதியின் அலரிமாளிகை உள்ள பகுதி பாதுகாப்பு வலையமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக பாது

**பேம்பி**

காப்புப் படையினர் அறிவித்தனர். ஆனால் இந்த அறிவிப்பை சகல தரப்பினரும் கேலியாக நோக்கினார்களே தவிர, யாரும் கடுமையாக எடுத்துக்கொள்ளவில்லை. ஊர்வலக்காரர்களை நோக்கி பொலிசார் அடிக்கடி கரும்புலி எச்சரிக்கையை விடுக்க, ஆத்திரமடைந்த செய்தியாளர்கள், 'முடியுமானால் வருகின்ற கரும்புலிக்கு கண்ணீர்புகைக் குண்டுகளை பிரயோகியுங்கள்' என கூக்குரலிட்டனர். எனினும் பொலிசார் தமது நடவடிக்கைகளில் கடுமையாகவே, கொண்டுவந்திருந்த கொடும்பாவிகளை அதே இடத்தில் போட்டுத் தீக்கிரையிட்டுவிட்டு ஊர்வலம் கலைந்துவிட்டது. இக்கொடும்பாவிகள் சிறீலங்கா செய்தித்துறை அமைச்சர் மங்கள சமரவீரவினதும், சந்திரிகாவின் பாதுகாப்பிற்குப் பொறுப்பான ஏ.எஸ்.பி. கருணாரத்தினவினதும் என்பது குறிப்பிடத்தக்கது.

செய்தியாளர்கள் ஆர்ப்பாட்டம் நடாத்திய இதேவேளை ஐக்கியதேசியக் கட்சியினரும் கடந்த வியாழனன்று அரசிற்கெதிரான கண்டன ஒன்றுகூடல் ஒன்றினை கொழும்பில் நடாத்தினர்.

ஆனால் ஐக்கியதேசியக் கட்சியினரின் இந்த முடிவு பற்றி 48 மணித்தியாலங்களுக்கு முன்னதாகவே தெரிந்துகொண்ட அரசு, உடனடியாக அலரிமாளிகையைச் சுற்றியுள்ள பகுதியை யாரும் கூட்டமாகச் செல்ல முடியாதவாறு பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியது. அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியினரின் ஒன்றுகூடலில் மிக அதிகளவான புலனாய்வு அதிகாரிகளையும் அனுப்புவதாக முடிவு செய்தது. இவ், ஒன்றுகூடலில் சுமார் 2500 பேரளவில் கலந்துகொண்டாலும், கலந்துகொண்டவர்களின் விகிதாசாரத்திற்கு மிக அதிகமான வகையில் சிறீலங்காவின் குற்றப்புலனாய்வு அதிகாரியும் கூட்டத்தோடு கூட்டமாகக் கலந்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. ஆயினும் 'இவர்களை ஐக்கியதேசியக் கட்சியினரால் உடனடியாக இனங்காணமுடியாததால் பெரியளவான அசம்பாவிதங்கள் எதுவும் நடக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியினரின் கண்டனத்தின் அடித்தளமான சிறீலங்கா அரசியலில் இருந்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது தொடர்பாக கடந்த வாரம் பொதுஜன ஐக்கிய முன்னணியினர் தமது எதிர்க் கருத்தினைத் தெரிவித்துள்ளனர்.

கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில், 'தற்போதைய நிலையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையினை முடிவிற்குக் கொண்டுவருவது சாத்தியப்படாத ஒரு விடயம்' என முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஐக்கியதேசியக் கட்சியினர் இம்முறைமை நீக்கப்படவேண்டுமெனப் போராட்டங்களை நடாத்த, பொதுஜன ஐக்கியமுன்னணியினரோ நீக்கமுடியாதென எதிர்ப்புத் தெரிவிக்கும் இந்த நிலைமையை எதிர்வரும் மாதங்களில் சிறீலங்கா அரசியலில் பல கடுமையான விடயங்களை எதிர்நோக்கலாம் என்பதே அரசியல் அவதானிகளின் நிலைப்பாடாகும். இந்த நிலைப்பாடு பொய்யாகுமா? அல்லது உண்மையாகுமா? இனி வரும் மாதங்கள் தான் புலப்படுத்தும்.

**சந்திரிகாவின் அலரிமாளிகையை நோக்கிச் செல்லவும் இவர்கள் முற்பட்டனர். ஆனால் அப்போது சிறீலங்காவின் பாதுகாப்பு வட்டாரங்கள் செய்தியாளர்களின் இப் போராட்டத்தை சர்வதேச அரங்கில் இருந்து திசைதிருப்புவதற்காக கதையொன்றினைக் கட்டிவிட்டனர்.**

**ஊர்வலக்காரர்களை நோக்கி பொலிசார் அடிக்கடி கரும்புலி எச்சரிக்கையை விடுக்க, ஆத்திரமடைந்த செய்தியாளர்கள், 'முடியுமானால் வருகின்ற கரும்புலிக்கு கண்ணீர்புகைக் குண்டுகளை பிரயோகியுங்கள்' என கூக்குரலிட்டனர்.**

PERLYN TOURS




35 Kgs பொருட்களை வரியின்றி இலவசமாக கொண்டு செல்ல நீங்கள் நாடவேண்டிய இடம்! விமான பயணச்சீட்டு பெறுவோருக்கு இன்னுமோர் அரிய சந்தர்ப்பம்!! CD ஒன்று இலவசமாக வழங்கப்படும்

| | | | |
|---|---|---|---|
| **Colombo** | **790sfr** | Toronto | 840sfr |
| Chennai | 1390sfr | Newyork | 499sfr |
| Singapore | 1290sfr | .London | 195sfr |
| Bangkok | 1390sfr | | |

எம்மிடம் உலகளாவிய பயணச் சீட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம்

Perlyn Tours
Limmatstrasse -213, 8005 zürich
Tel - 01/440 71 15 or 01/ 433 18 93
Fax - 01/440 71 17 or 01 / 433 17 93
E-Mail: Perlyn@datacomm.ch
Internet: web.site/http//www.keggscribe.com/perlyn

Pub. Sw

# அரசு உருவாக்கிய தற்கொலைப் போராளியும் தடைப்பட்ட எதிர்ப்பு ஊர்வலமும்

கடந்த 21-ம் திகதி தென்னிலங்கையின் பத்திரிகையாளர்கள் ஒன்றுகூடி எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றினை நடாத்தினார்கள். இந்த ஊர்வலமானது அதற்கு முந்தியவாரம் அதாவது 15-ம் திகதி பத்திரிகையாளர்கள் நடாத்திய ஊர்வலத்தில் இனந்தெரியாத குழுவினர் நடத்திய தாக்குதல்களைக் கண்டித்தும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துமே இது ஒழுங்கு செய்யப்பட்டது. கொழும்பு தர்மபால மாவத்தையிலிருந்து அலரிமாளிகை வரை இவ் ஊர்வலம் செல்வதென்றும் அங்கு ஜனாதிபதியிடம் மகஜர் ஒன்றைக் கையளிப்பதென்றும் முடிவெடுக்கப்பட்டது. இதன்படி பத்திரிகையாளர்கள் ஒன்றுகூடி தர்மபால மாவத்தையின் முகப்பிற்குச் சென்றபோது திடீரென அங்கு பெருமளவில் பொலிஸ் அதிகாரிகள் கூடி நின்றனர். அதன் மத்தியில் ஓர் அதிகாரி ஒலிபெருக்கி ஒன்றில் கீழ்கண்டவாறு அறிவித்தார்.

அதாவது விடுதலைப் புலிகளின் தற்கொலைப் போராளிகள் கொழும்பிற்குள் ஊடுருவி இருப்பதாயும் அதிலும் அதி உயர் பாதுகாப்பு வலையமான இப்பகுதிக்குள் அவர்கள் தற்போது வந்துள்ளதாயும் அதன் காரணமாக ஊர்வலத்தை மேற்கொண்டும் செல்ல அனுமதிக்க முடியாது என்றும் கூறினார். இதேபோன்று ஓர் தகவல் அதற்கு முந்திய தினம் பத்திரிகைகளிலும் வெளிவந்திருந்தது. விக்கினேஸ்வரி என்று அழைக்கப்படும் ஓர் பெண் தற்கொலைப் போராளி கொழும்பிற்குள் ஊடுருவி இருக்கிறார். திருகோணமலையைச் சேர்ந்த அவர் கடந்த 19-ம் திகதி கொழும்பு தும்முல்ல பகுதிக்குள்

*கொழும்பிற்குள் நுழைந்திருப்பதாகப் பொலிசார் ஓர் இளம்பெண்ணின் படத்துடன் அவரது பெயர் முகவரி போன்றவற்றுடன் செய்தி வெளியிட்டுள்ளனர். தாக்குதல்களுக்காக புலிகள் வருவதையோ போவதையோ இதுவரை அறிந்திருக்காத பொலிசார் இம்முறை எப்படி இத்தகவல்களை அறிந்துகொண்டார்கள்?*

ஒழிந்திருப்பதாயும் பொலிசார் சந்தேகிக்கின்றனர் என செய்தி வெளியாகியிருந்தது. இந்தச் செய்தியை சிறீலங்காவின் செய்தித் திணைக்களம் சகல பத்திரிகைகளுக்கும் அனுப்பி இச்செய்தி கட்டாயம் மறுதினம் சகல பத்திரிகைகளிலும் வெளிவர வேண்டும் எனக்கோரியிருந்தது. அதாவது கடந்த 20-ம் திகதி இச்செய்தி எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்திருந்தது.

பொலிஸ் அதிகாரியின் அறிவித்தலையடுத்து மேற்கொண்டு முன்னேற முடியாத ஊர்வலத்திலிருந்து கலைந்து சென்றனர். ஊர்வலத்தில் கலந்துகொண்ட பத்திரிகையாளர்கள் வெளியேறிய பின்னர் அவ்வீதியில் அமைதியே காணப்பட்டது. பொலிசாரும் அங்கிருந்து வெளியேறி இருந்தனர். வாகனப் போக்குவரத்து சாதாரணமாக இடம்பெற்றது. அப்படியானால் பொலிசார் கூறிய அந்த தற்கொலைப் போராளி வந்தவழி தெரியாமல் அவ்விடத்தில் இருந்து மறைந்துவிட்டாரா?

அரச செய்தித் திணைக்களத்தினூடாக பத்திரிகைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட இந்தப் பெண் போராளி சம்பந்தமான தகவல்கள் சிறீலங்காவின் இரகசிய உளவுத்துறையினருக்குக் கூடத் தெரிந்திருக்கவில்லை. அதேபோன்று கொழும்பில் நடவடிக்கைத் தலைமையகத்திற்குக்கூட இந்தத் தகவல் கிடைக்கவில்லை. இதுவரை காலமும் சிறீலங்காவில் நடந்த தற்கொடைத் தாக்குதல்களிளெல்லாம் அதனை புரிந்தவரது பெயர் விபரம் முன்னரேயே தெரிந்திருக்கவில்லை. ஆனால் இம்முறை கொழும்பிற்குள் நுழைந்திருப்பதாகப் பொலிசார் ஓர் இளம் பெண்ணின் படத்துடன் அவரது பெயர் முகவரி போன்றவற்றுடன் செய்தி வெளியிட்டுள்ளனர். தாக்குதல்களுக்காக புலிகள் வருவதையோ போவதையோ இதுவரை அறிந்திருக்காத பொலிசார் இம்முறை எப்படி இத்தகவல்களை அறிந்துகொண்டார்கள்? தும்முல்ல பகுதியில் பொலிசார் தற்கொலைப் போராளியைப் பிடிக்கும் எந்த ஒரு நடவடிக்கையையும் மேற்கொண்டதாக இதுவரை தகவல்கள் எதுவும் இல்லை. பாதுகாப்புக்கள் கொழும்பு நகரில் அதிகரிக்கப்பட்டிருக்கும் இவ்வேளையில் கொழும்பு நகருக்குள் ஊடுருவிய தற்கொலைப் போராளி பொலிசாரின் கண்களில் மண்ணைத்தூவி விட்டு எப்படி தர்மபால மாவத்தைக்குள் நுழைந்தார் என்பது வேடிக்கையான ஒரு விடயமென மக்கள் பேசிக்கொண்டார்கள். அதிலும் ஊர்வலம் இடைவழியில் கலைக்கப்பட்டவுடன் அந்த தற்கொலைப்போராளி கூட அவ்விடத்தைவிட்டு நழுவிப் போய்விட்டாராம். இது யாருக்குச் சொல்லும் கதை என மக்கள் கேட்கிறார்கள்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஊர்வலத்தில் கலந்துகொண்ட பத்திரிகையாளர்கள் வீதிவழியாகச் சென்றுகொண்டிருந்தபோது அங்கு நின்ற ஓர் பொலிஸ் அதிகாரி எப்படி நன்றாக ஏமாந்து போனீர்களா என ஏளனமாகக் கேட்டாராம். இதன் அர்த்தம் முதலில் பத்திரிகையாளர்களுக்குத் தெரியாத போதிலும் பின்னர் அவர்கள் தாம் மட்டுமல்ல இந்த நாட்டு மக்களையும் தமது செய்திமூலம் ஏமாற்றியதைப் புரிந்துகொண்டார்கள். அதாவது தற்கொலைப்போராளி பற்றிய ஓர் கற்பனைச் செய்தியைப் பத்திரிகைகளில் வெளியிட்டதானது மறுநாள் நடக்கவிருந்த ஊர்வலத்தைத் தடைசெய்வதற்கே என்பதுவும் அதனைப் பாவித்து பொலிசார் வெகு இலகுவாக ஊர்வலத்தை நிறுத்திவிட்டதையும் மட்டுமல்ல தாம் பொய்யான ஓர் செய்தியை ஏற்கனவே இறந்துபோன ஓர் பெண்ணின் படத்துடன் பிரசுரித்து நாட்டு மக்களையே ஏமாற்றியதை எண்ணி மிகவும் மனவேதனை அடைந்தார்கள்.

அரசாங்கம்கூட மக்களை ஏமாற்றவும் தனக்கு எதிரான நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும்கூட விடுதலைப் புலிகளின் தற்கொடைத் தாக்குதல் போராளி என்ற பதத்தையே பாவிக்கும் அளவிற்கு வந்துவிட்டது என்பது கவலை தரும் விடயமாகும்.

## சிங்களம் கூறும் சில...

– மாந்தன் –

### தமிழர் பிரச்சினையை உணர்ந்து கொள்ளாத ஜே.வி.பி. மூன்றாவது சக்தியாகுமா?

தாம்தான் மூன்றாவது சக்தி எனக் கூறிக்கொள்ளும் ஜே.வி.பியினர் தென்னிலங்கையில் குறிப்பிடக்கூடிய ஒரு சக்தியாக இருக்கலாம். ஆனால் தேசிய அளவில் அவர்களை அப்படிக்கூற முடியாது. எமது நாட்டின் வடக்குக் கிழக்கில் நடப்பது இனப்பிரச்சினைதான் என்பதை இவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. வடக்கின் பிரச்சினையை முதலாளித்துவ தலையீட்டுடன் ஏற்பட்டுள்ள பிரச்சினை என்றும் அமெரிக்க தலையீடுதான் இதன் பின்னணி என்றும் கூறும் இவர்கள், யுத்தத்தால் இறக்கும் வடக்குத் தெற்கு அப்பாவிகளிற்கு ஒரு அனுதாபம் கூட தெரிவிக்காத இவர்கள் எப்படி மூன்றாவது சக்தியாவார்கள். முதலாளித்துவ அரசுகளுக்கு தேசிய பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிகள் புரியாது எனக்கூறி, தமது அரசு பதவிக்கு வரும்வரை பொறுத்திருக்கும்படி கூறுகிறார்கள். தேசிய பிரச்சினைகள் தொடர்பாக இவ்வளவு அசட்டையுடன் இருக்கும் மாக்ஸிச-லெனினிச கட்சி உலகில் வேறு எங்குமே இல்லை. இந்தியாவுடன் இணைந்து இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வினைக் காண்பதை ஏற்றுக்கொள்ள இவர்களால் முடியவில்லை. அதேவேளை சிறீலங்காவை இரண்டாக உடைப்பதில் அமெரிக்காவிற்கு என்ன இலாபம் உள்ளது என்பதையும் இவர்களால் தெளிவுபடுத்த முடியவில்லை.

சரி வட-கிழக்கு தமிழர்களுக்காகத்தான் இவர்கள் பேசவில்லை. மலையகத்தில் வாழும் தமிழர்களுக்காவது ஏதாவது செய்தார்களா? அப்படியானால் தமிழர்களைப் பற்றிக் கவலைப்படாத சிங்கள இனவாத கட்சிதானே இவர்களும். சரி தொழிலாளர் அரசினால் எப்படி இப்பிரச்சினை தீர்க்கப்பட முடியும் என்பதையும் கூட இவர்கள் தெளிவு படுத்துகிறார்களில்லை. இவர்களது இனவாத எண்ணங்களின்படி ஸ்டாலின் அன்று ஜோர்ஜியாவில் கடைப்பிடித்த கொள்கைகளை இவர்களும் பின்பற்றலாம்

*ஜோர்ஜியாவின் பெரும்பான்மை மக்களை சிறுபான்மை மக்களாக்குவதற்காக ரஷ்யரை அங்கு பெருமளவில் குடியேற்றினார். அதேபோல் வடக்கு கிழக்கிலும் சிங்கள மக்களை பெருமளவில் குடியேற்றி சிங்கள பெரும்பான்மையைத் தோற்றுவித்து தமிழர்களை சிறுபான்மையினராக்கி வடக்குக் கிழக்குப் பிரச்சினையை இவர்கள் தீர்க்க யோசித்தாலும் ஆச்சரியமில்லை*

போல் தெரிகிறது. அதாவது ஜோர்ஜியாவின் பெரும்பான்மை மக்களை சிறுபான்மை மக்களாக்குவதற்காக ரஷ்யரை அங்கு பெருமளவில் குடியேற்றினார். அதேபோல் வடக்கு கிழக்கிலும் சிங்கள மக்களை பெருமளவில் குடியேற்றி சிங்கள பெரும்பான்மையைத் தோற்றுவித்து தமிழர்களை சிறுபான்மையினராக்கி வடக்குக் கிழக்குப் பிரச்சினையை இவர்கள் தீர்க்க யோசித்தாலும் ஆச்சரியமில்லை.

*(லக்பிமவில் வெளிவந்த கட்டுரையொன்றிலிருந்து)*



பத்திரிகையாளர்களை இப்படித்தான் எதிர்கொண்டார்கள்

# ம.தி.மு.க.வின் காஞ்சி மாநாட்டில் எதிரொலித்த செம்மணிப் புதைகுழிகள்

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில சுயாட்சி மாநாட்டின்போது செம்மணிப்புதைகுழிகள் தொடர்பான கருத்துக்களும் எதிரொலித்துள்ளன. கடந்த சனியன்று (24.07.99) ஆரம்பித்த இருநாள் மாநாட்டின் நிறைவுவிழா கடந்த 25-ம் திகதி ஞாயிறன்று மாலை இடம்பெற்றது. மாநாட்டின் நிறைவுரையினை வைகோ நிகழ்த்தினார். இம்மாநாட்டில் இந்திய உள்த்துறை அமைச்சர் அத்வானி, தமிழக முதல்வர் கருணாநிதி, பா.ம.க. தலைவர் ராமதாஸ் உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர். மாநாட்டின் முடிவில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சிறீலங்கா அரசின் மனித உரிமை மீறல்கள் குறித்த கண்டனமும், செம்மணிப் புதைகுழிகளின் அனைத்து விசாரணைகளும் சர்வதேச நீதிமன்றத்தினூடாக நடாத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதுடன், ஈழத் தமிழர்களைப் பாதுகாக்க ஐ. நா தக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்ற தீர்மானமும் அடங்குகிறது.

மாநாட்டில் நிறைவு உரையின்போது மிகநீண்ட உரையாற்றிய வைகோ 45 ஆண்டுகளாக காங்கிரசால் வஞ்சிக்கப்பட்ட சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றித் தருகிறேன் என்ற வாஜ்பாய்க்கு மீண்டும் வெற்றி கிடைக்கும் எனக் குறிப்பிட்டார். ஜெயலலிதாவினை கடுமையாகச் சாடிய வைகோ, தி.மு.க. ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சிக்கு ம.தி.மு.க. வும் வாஜ்பாயும் உடன்பாடில்லாத காரணத்தினால்தான் ஜெயலலிதா வாஜ்பாயின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக டெல்லிக்குச் சென்றார். ஆட்சியை அவரால் கவிழ்க்க முடிந்தாலும் மாற்று அரசை அவரால் அமைக்க முடியவில்லை. இன்று பலவீனமான ஒரு நிலைக்கு வாஜ்பாய் வருவதற்கு ஜெயலலிதா நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். ஆனால் ஆட்சியை எதிர்த்தவர்களெல்லாம் இன்று சிதறிக்கிடக்கின்றார்கள். நீண்டநாள் திராவிட இயக்கத்தையும் அ.தி.மு.க.வையும் பிரிப்பதற்கு ஜெயலலிதா நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் அதுவெல்லாம் அவரது பகல் கனவுதான். இன்றைய நிலையில் வாஜ்பாயைப் பிரதமராக்க முதல்வர் கலைஞரின் கட்டளையை ஏற்று நாம் அயராது பாடுபடுவோம். இவ்வாறு அவர் தனது உரையின்போது குறிப்பிட்டார்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் செம்மணிப் புதைகுழிகள் தொடர்பான தீர்மானம் ஐந்தாவதாக அமைந்துள்ளது. அத்தீர்மானத்தின் முழுமையான விபரங்கள் வருமாறு:

ஈழத்தமிழ் இனத்தை கருவறுக்கத் துடிக்கின்ற இலங்கை இராணுவம் கடந்த 25 ஆண்டுகளாக நடத்தி வருகின்ற படுகொலைகள் மனிதாபிமானமுள்ளவர்களை நடுநடுங்கச் செய்வதாகும். தமிழீழத்தை விட மிகச் சிறிய நிலப்பரப்பைக் கொண்ட யூகோஸ்லாவியாவின் கொசோவோ மாநிலத்தில் தனி நாடுகேட்டு போராடி வரும் அல்பேனிய இனத்தவர்கள் 70 பேரை செர்பிய இராணுவம் கொன்று புதைத்த கொடுமையை உலக நாடுகள் அனைத்தும் கண்டித்துள்ளன. ஐரோப்பிய கண்டத்தின் மத்தியில் அமைந்துள்ளதால் இந்த பிரச்சினை அனைத்து நாடுகளின் கவனத்தை ஈர்ந்துள்ளது.

ஆனால் அதேசமயம் இலங்கை தீவில் 400-க்கும் மேற்பட்ட அப்பாவி ஈழத்தமிழ் மக்களை இரக்கமின்றி படுகொலை செய்த இலங்கை இராணுவம் அவர்களை குழிதோண்டிப் புதைத்துள்ள இடம் தனக்கு தெரியுமென்று கொழும்பு நீதிமன்றத்தில் சிங்கள சிப்பாய் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து பல மாதங்களாகியும் அந்த இடத்தைத்தோண்டி எடுக்க இலங்கை அரசு எந்தவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளவில்லை. மாறாக இரவு நேரங்களில் அந்த குழிகளைத் தோண்டி எடுத்து பிணங்களை எரித்து தடயங்களை அழித்து வருகின்றது.

தற்போது செம்மணி புதைகுழிகளைத் தோண்டிப் பார்க்க ஐநா. மனித உரிமைகள் ஆணையம் முடிவெடுத்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மனித உரிமைகளை நாசம் செய்து இனப் படுகொலை நடத்திய கொடியோரை சர்வதேச நீதிமன்றத்தின் குற்றவாளி கூண்டில் நிறுத்தி உரிய தண்டனை கிடைக்கவும், ஈழத்தமிழ் மக்களை பாதுகாக்கவும் ஐக்கிய நாடுகள் மன்றம் தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இம்மாநாடு கேட்டுக் கொள்கின்றது.

# தி.மு.க.வின் தொகுதிப் பங்கீடு 28ல்

பா.ஜ.க.-தி.மு.க. கூட்டணியின் தொகுதிப் பங்கீடு 28-ம் திகதியன்று அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது குறித்து இரு கட்சிக்குழுக்களின் கூட்டம் கடந்த 25-ம் திகதியன்று அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. தி.மு.க. குழுவில் அமைச்சர்கள் ஆர்க்காடு வீரசாமி, துரைமுருகன், பொன்முடி ஆகியோரும் பா.ஜ.க. குழுவில் மத்திய அமைச்சர் ரங்கராஜா குமாரமங்கலம், மாநிலத் தலைவர் இலட்சுமணன், பொதுச் செயலர் இல.கணேசன் ஆகியோரும் பங்கேற்றனர். முரசொலி மாறனும் இப்பேச்சுக்களில் கலந்துகொண்டார்.

இதேவேளை பா.ம.க.-மதிமுக. ராஜீவ் காங்கிரஸ், எம் .ஜி. ஆர் கழகம் உள்ளிட்ட தோழமைக் கட்சிகளுடன் கடந்த 26, 27 ஆகிய தினங்களில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

# டெல்லி கொள்ளை தொடர்பாக 18 தமிழக வாலிபர்கள் கைது

தலைநகர் டெல்லியில் நடந்த பல கொள்ளைகள் தொடர்பாக திருச்சியைச் சேர்ந்த 18 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் 25 வயதிற்குட்பட்டவர்கள்.

சிறு சிறு கும்பலாகச் செயற்பட்ட இவர்கள் டெல்லியில் பல திருட்டுக்களிலும் கொள்ளைகளிலும் பங்கேற்றுக்கொண்டதாகவும் கிழக்கு டெல்லியில் மாதம் பத்தாயிரம் ரூபா வாடகையில் பங்களா ஒன்றினை எடுத்துத் தங்கியிருந்தாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# இந்திய - அமெரிக்க பேச்சுக்கள்

## இருதரப்பும் கூட்டாக தெரிவிப்பு

இந்திய-அமெரிக்க உறவுகளை மேம்படுத்துவதற்கான புதிய மாற்றங்களை ஏற்படுத்தப்போவதாக இரு தரப்பும் கூட்டாக தெரிவித்துள்ளது. கடந்த ஞாயிறன்று சிங்கப்பூரில் நடைபெற்ற இருதரப்பின் சந்திப்பின் பின்னர் இவ் உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மெடலின் ஒல்பிறைட், இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் யஸ்வந் சிங்குடன் பேச்சுக்களை நடாத்திய போது இந்திய எல்லைக்குள் நுழைந்து பயங்கரவாத்தில் ஈடுபடுவது குறித்து இந்தியாவின் கருத்திற்கு ஆதரவாக அமெரிக்க தரப்பும் கருத்தினை தெரிவித்துள்ளது.




# கார்கிலில் மீண்டும் மோதல்



இந்தியாவின் சர்ச்சைக்குரிய காஷ்மீர் கார்கில் பற்றாலிக் பகுதியில் மீண்டும் மோதல்கள் வெடித்துள்ளன. இம்மோதலில் 32 பாகிஸ்தானியத் துருப்புக்களும் இந்தியத் துருப்பினர் 10 பேரும் உயிரிழந்துள்ளனர். தாக்குதலில் இந்திய விமானப்படைப் போர்விமானங்களும் பயன்படுத்தப்பட்டன. ஆயினும் எல்லைக்கப்பால் இருந்து பாகிஸ்தானியத் துருப்புக்கள் இந்திய நிலைகள் மீது பீரங்கித்தாக்குதல்களை நடாத்திவருகின்றன. முஸ்கோ பகுதியில் உள்ள மும்முனைச் சந்திப்பு என்றழைக்கப்படும் சுலு சுபர் சிகரத்தை மீட்பதற்காக இந்தியத் துருப்புக்கள் கடுமையா்ன மோதல்களில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர். ஊடுருவல்காரார்கள் வெளியேறியபோது கண்ணிவெடிகளை புதைத்து விட்டுச் சென்றிருப்பதால் இந்தியத் துருப்பினரின் முன்னேற்றத்தில் சற்று மந்த நிலை ஏற்பட்டதாக இந்திய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. முன்னதாக இக்கண்ணிவெடிகளுக்கு ஆறு இந்தியச் சிப்பாய்கள் பலியாகியுள்ளனர்.

# ரவிசங்கருக்கு ஜேர்மன் அரசின் விருது

புகழ்பெற்ற சிதார் இசைக் கலைஞரான ரவிசங்கருக்கு இவ்வாண்டிற்கான ஜேர்மன் அரசின் திரைப்பட இசைக்கான சர்வதேச விருது வழங்கப்பட்டுள்ளது.

கடந்த சனி இரவு நடந்த இசை நிகழ்ச்சியின்போது இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. ஜேர்மனியின் கலை கண்காட்சி மையத்தினரே இந்தவிருதின் நிறுவனர்களாவர்.

**Lernen sie Deutsch**

Deutsch Für Tamilen-இலக்கணம் -10 DM

Deutsch-Tamil -Englisch Wörterbuch ஜேர்மன்-தமிழ்-ஆங்கில் அகராதி

**A-M - 15 Dm**

**N-Z - 15 Dm**

**P.THANGARAJAH**

**Neckar Str 1/2, 68766 Hockenheim**

**Tel + Fax: 06205 17412**

**Bank Nr.660 8327, Bez Sparkasse Hockenheim, BLZ 670 512 03**

# தமிழ்நாட்டில் இலங்கை அகதி முகாம்களின் நிலை என்ன ?

(21-07-99)

தமிழ்நாட்டு இலங்கை அகதி முகாம்களின் நிலை பற்றி தினமணி நாளேடு வெளியிட்டுள்ள செய்தி ஆய்வில் பல கவலை தரும் செய்திகள் அடங்கியுள்ளன. அவை வருமாறு:

இலங்கைப் பிரச்சனையை அடுத்து தமிழ்நாட்டில் அடைக்கலம் தேடிவந்துள்ள அகதிகள் பல்வேறு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மண்டபம் முகாம் பிரதான அகதிகள் முகாமாக விளங்குகின்றது. இலங்கையில் இருந்து வரும் புதிய அகதிகள் தங்குவதற்கு போதிய இடம் தேவை என்பதையடுத்து மண்டப முகாமில் இருந்து வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றப்பட்டனர். அவ்வகையில் இம்முகாமில் இருந்து அகதிகள் 14 குடும்பத்தினர் மூன்று ஆண்டுகளுக்கு முன் வேலூர் அருகே கண்ணமங்கலம் காட்டு நல்லூருக்கு அழைத்துவரப்பட்டனர். இவர்களை தங்கவைப்பதற்கு வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள முகாம்களில் இடமில்லாததால், கண்ணமங்கலம் காட்டுநல்லூரில் உள்ள ஊராட்சி திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டனர். அதிகபட்சம் இரண்டாயிரம் சதுர அடி உள்ள இந்த மண்டபத்தில் 14 குடும்பங்களையும் தங்குமாறு கூறினர். பத்து நாட்களில் வெளி முகாம்களில் இடவசதி தருவதாக அதிகாரிகள் உறுதியளித்தனர். ஆனால் மூன்றாண்டாகியும் இன்னும் அங்கிருந்த அகதிகளை மாற்றவில்லை. சிலவாரம் பொறுத்துப் பார்த்த அகதிகள், சேலைகளை மறைப்பாக கட்டி அறைகள் போல் தடுத்துக்கொண்டனர். அதிலேயே சமையல், அடுப்பு, பெட்டி படுக்கை, பூசைப்பொருட்கள் என எல்லாவற்றையும வைத்துள்ளனர். சில குடும்பங்களில் ஐந்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் இரவில் படுப்பதும் அந்த அறையில்தான். ஆனால் ஆண்கள் அந்த மண்டபத்தின் மொட்டை மாடியில் படுத்துக் கொள்கின்றனர் மழை வந்துவிட்டால் எல்லோருக்கும் சிரமம். போதிய காற்றோட்ட வசதியில்லாத அந்த மண்டபத்தில் பகலில் வெயில் காலங்களில் தங்குவது கஷ்டம். கழிப்பிட வசதியும் கிடையாது. பக்கத்து விவசாய நிலங்களுக்குப் பெண்கள் போனால் அனுமதிப்பது இல்லையாம். இரவு நேரங்களில் சாலை ஓரங்களுக்கு போக வேண்டியுள்ளது என்று பெண்கள் கூறுகின்றனர். எங்காவது புறம்போக்கு நிலத்தை ஒதுக்கித் கொடுத்தால் கொஞ்சம் காற்றோட்டமாக வசிக்க முடியும் என்று அதிகாரிகளிடமும் அரசியல்வாதிகளிடமும் மனு கொடுத்துள்ளனர். இதுவரை பிரச்சினை தீரவில்லை. ஆரணி அருகே வேலைப்பாடி கிராமத்தில் புதிதாக இருப்பிடம் கட்டி புதிய அகதிகளுக்கு ஒதுக்கத் திட்டமிடப்பட்டது. ஆனால் என்ன காரணத்தாலோ இன்னும் அத் திட்டம் தொடங்கவில்லை.

## தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் சர்வதேச அமைப்புக்கு தேர்வு!

(20-07-99)

ஏழை நாடுகளின் அமைப்பான தெற்கு மையத்தின் நிர்வாகக் குழுவிற்கு தமிழகத்தைச் சேர்ந்தவரும் விஞ்ஞானியுமான அசோக் பார்த்தசாரதி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் இந்திய மத்திய அரசின் செயலாளராகவும் இருந்து வருகின்றார். ஜெனிவாவில் உள்ள தெற்கு மையத்தின் பத்து உறுப்பினர்கள் கொண்ட நிர்வாகசபைக்கு தேர்ந்தெடுக்கப்படும் முதல் இந்தியர் இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

தன்சானியா நாட்டின் அதிபராக இருந்த ஜூலியஸ் நைரேரேயால் 1992-ல் தொடங்கப்பட்டது தெற்கு மையம். தெற்கு மையம் என்ற அமைப்பு பன்னாட்டு அமைப்பாகும். தொழில் வள நாடுகளுடன் வர்த்தக பேரம், உலக வர்த்தக அமைப்பில் தமக்குரிய பங்கை கோரிப் பெறுவது ஆகியவற்றில் ஏழை நாடுகளுக்கு வழிகாட்டும் அமைப்பாக இது செயல்படுகின்றது.

## தேர்தலில் புதுமுகங்கள் ஜெயலலிதா திட்டம் !

(21-07-99)

வரும் தேர்தலில் அதிமுக சார்பில் புதிய வேட்பாளர்களை நிறுத்த அக்கட்சியின் பொதுச் செயலர் ஜெயலலிதா திட்டமிட்டுள்ளார். கலைக்கப்பட்ட மக்களவையில் அதிமுக சார்பில் 18 உறுப்பினர்கள் இடம்பெற்றிருந்தனர். இவர்கள் 13 மாதங்களே மக்களவை உறுப்பினர்களாக இருந்தனர். இவர்கள் அனைவரும் தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவித்து, கட்சித் தலைமையிடம் தலா பத்தாயிரம் ரூபாக்களை செலுத்தியுள்ளனர்.

ஆனால் அவர்களில் பாதிப் பேருக்கு மேல் மீண்டும் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கிடைப்பது கடினம் என்று அதிமுக வட்டாரங்கள் தெரிவித்தன. கடந்த தேர்தலில் 22 இடங்களில் அதிமுக போட்டியிட்டு 18 இடங்களில் வெற்றி பெற்றது. தற்போது 23 தொகுதிகளில் அதிமுக போட்டியிடுகின்றது. எந்தெந்த தொகுதிகளில் அதிமுக போட்டியிடும் என்பதையும், பிரச்சார அறிக்கையை வரும் 23-ம் திகதி அவர் அறிவிக்கவுள்ளார்.

## ஜனதா தளம் உடைந்தது கர்நாடக சட்டப்பேரவை கலைக்கப்பட்டது !

(22-07-99)

பாஜக் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெறும் பிரச்சனை காரணமாக ஜனதா தளம் உடைந்தது. ஜனதா தளம் உள்ளிட்டதான தேசிய முன்னணி, முன்னர் இந்தியாவின் ஆட்சிபீடத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது. அதன் கட்சித் தலைவர் சரத் யாதவ் தலைமையில் ஓர் அணியும், முன்னாள் இந்தியப் பிரதமர் தேவகௌடா தலைமையில் மற்றோர் அணியுமாக அக்கட்சி பிளவுபட்டது. சரத் யாதவ் தலைமையிலான அணியில் இணைய, சமதா கட்சியும் லோக் சக்தியும் முடிவு செய்தன. இந்த அணி தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெறும்.

இந்நிலையில் ஜனதா தளம் ஆட்சியில் உள்ள கர்நாடக சட்டப்பேரவையிலும் நெருக்கடி தோன்றியுள்ளது. கர்நாடக முதல்வராக உள்ள பட்டேல், சரத்யாதவ் தலைமையிலான ஜனதா தளத்தில் உள்ளார். ஆனால் துணைமுதல்வர் தேவகௌடாவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார். இதனால் அமைச்சரவையில் பிளவு ஏற்பட்டது. ஆதலால் தனது ஆதரவு அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்திய பட்டேல், சட்டப்பேரவையை கலைக்க ஆளுநருக்கு சிபார்சு செய்வதாக தீர்மானித்தார். அதன்படி ஆளுநரை சந்தித்த முதல்வர், பேரவையை கலைப்பதற்கான பரிந்துரையை கொடுத்தார். பின்னர் அமைச்சரவையின் பரிந்துரையின் பேரில் வியாழக்கிழமை கர்நாடக சட்டப்பேரவை கலைக்கப்பட்டதாக ஆளுநர் மாளிகை அறிவித்தது.

## ராஜீவ் காந்தி கொலைச் சதி: விசாரணை அறிக்கையை தாக்கல் செய்ய நீதிமன்றம் உத்தரவு!

(23.07.99)

ராஜீவ் காந்தி படுகொலை பின்னணி குறித்து அடுத்த கட்ட விசாரணை அறிக்கையை ஒகஸ்ட் 20-ம் தேதி தாக்கல் செய்யுமாறு சிபிஐ. பல்நோக்கு கண்காணிப்பு குழுவிற்கு சென்னை சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ராஜீவ் காந்தி கொலையின் 'பின்னணிச் சதி குறித்து' ஆராய நீதிபதி ஜெயின் தலைமையில் ஒரு நபர் ஆணையம் அமைக்கப்பட்டது. இந்த ஆணையம் இந்திய அரசிடம் அளித்த நடவடிக்கை அறிக்கையில், மேலும் பலரிடம் விசாரிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது. இதனையடுத்து சென்னையில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் மேலும் விசாரணை நடத்த, சி.பி.ஐ. பல்நோக்கு கண்காணிப்புக் குழு அனுமதி பெற்றது. இதன் பின்னர் கண்காணிப்பு குழு இடைக்கால அறிக்கையை சிறப்பு நீதிமன்ற நீதிபதி முன்பு நேற்று சமர்ப்பித்தது.

இவ்வழக்கு தொடர்பான அடுத்தக்கட்ட விசாரணை அறிக்கையை அடுத்த மாதம் 20-ம் திகதி தாக்கல் செய்யுமாறு பல்நோக்கு கண்காணிப்பு குழுவிற்கு நீதிபதி உத்தரவிட்டார்..

## வடமாநிலங்களில் மழை பலியானோர் தொகை 251 ஆக உயர்வு

(23-07-99)

இந்தியாவின் வடக்கு மாநிலங்களான பீகார், அசாம், குஜராத், இமாசலபிரதேசம், உத்தர பிரதேசம், பஞ்சாப், கேரளா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் கடும் மழை பெய்து வருகின்றது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை, கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. ஏராளமானோர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர்.

மழைச்சாவும் அணையின் நீர்மட்டம் போல் உயர்ந்து வருகின்றது. பீகார் மாநிலத்தில்தான் மழைச்சாவு அதிகபட்சமாக உள்ளது. இதுவரை 108 பேர் பலியாகி உள்ளனர். இதற்கு அடுத்தபடியாக மராட்டிய மாநிலத்தில் 41 பேர் பலியாகி உள்ளனர்.

## சுதந்திர தினத்தன்று அரசியல் பேசாதீர் இந்திய தேர்தல் ஆணையம் கட்டளை !

(23-07-99)

இந்திய சுதந்திர தினத்தன்று அரசியல் பேசாதீர் என்று இந்தியப் பிரதமர், மற்றும் மாநில முதல்வர்களுக்கு இந்திய தேர்தல் ஆணையகம் உத்தரவிட்டுள்ளது. இது குறித்து தலைமைத் தேர்தல் ஆணையர் கில், டெல்லியில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

இந்திய சுதந்திர தின உரையின் போது பிரதமரும் மாநில முதல்வர்களும் நாட்டுக்காகப் பேச வேண்டும். கட்சி அரசியல் பேசக்கூடாது. கடந்த தேர்தலின் போது இந்தியக் கொடியை அதிகாரிகள்தான் ஏற்ற வேண்டும் என்று கோரப்பட்டது. அது ஏற்கத்தக்கதல்ல. மக்கள் பிரதிநிதிகள்தான் கொடியேற்ற வேண்டும் என்பதாகும்.

## எந்தக் கட்சிக்கும் ஆதரவில்லை – ரஜினிகாந்த்

(21-07-99)

வரும் மக்களவைத் தேர்தலில் எந்தக்கட்சிக்கும் என் ஆதரவு இல்லை என்று நடிகர் ரஜினிகாந்த் அறிவித்துள்ளார். என் படத்தை, பெயரை எந்தக் கட்சியும் இத்தேர்தலில் பயன்படுத்தக் கூடாது என்றும் கூறினார். சென்னையில் போயஸ் தோட்டத்தில் உள்ள தனது இல்லத்தில் நிருபர்களிடம் தனது அறிவிப்பு கொண்ட அறிக்கையை படித்தார். அறிக்கை விபரம் வருமாறு:-



மக்களவைத் தேர்தலில் திமுகவும் தமாகாவும் தனித்தனியே போட்டியிடும் சூழ்நிலையில் என் ஆதரவு யாருக்கு என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களிலும், மக்களின் மத்தியிலும், ரசிகர்களிடத்திலும் எழுந்துள்ளது. 1996-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஒரு பொதுக்காரணத்திற்காக திமுகவும் தமாகாவும் ஒன்று சேர்ந்தன. அதற்கு நானும் ஒரு காரணமாக இருந்தேன். அக் கூட்டணி தொடர்ந்த நிலையில் என் ஆதரவும் தொடர்ந்து இருந்தது.

திமுக-தமாக கூட்டணி இல்லாத சூழ்நிலையில் எக் கட்சிக்கும் ஆதரவு அளிக்க என் மனசாட்சி இடம் கொடுக்கவில்லை. நான் யாருக்கும் ஆதரவு அளிக்காத நிலையில், எந்த கட்சியும் என் பெயரையோ புகைப்படத்தையோ எந்த விதத்திலும் தேர்தல் பிரச்சாரங்களில் பயன்படுத்த வேண்டாம் எனக் கூறியுள்ளார்.




# மொறோக்கோ மன்னர் ஹசன் II 70வது வயதில் காலமானார்

## இறுதி நிகழ்வுகளில் உலகத் தலைவர்கள்

மொறோக்கோ மன்னர் ஹசன் II கடந்த வெள்ளியன்று காலை மருத்துவ மனையில் காலமானார். இவருக்கு இறக்கும் போது வயது 70 ஆகும். கடந்த யூலை 9ம் திகதி இவர் தனது 70-வது பிறந்தநாளைக் கொண் டாடியிருந்தார். மன்னர் ஹசன் நான்கு வருடங்களிற்கு முன்பும் நுரையீரல் பிரச்சினைகளுக்காக அமெரிக்காவில் சிகிச்சைபெற் றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. நீண்ட காலமாகவே இவருக்கு சுவாசப் பிரச்சினைகள் இருந்து வந்தன என்று மருத்துவ வட் டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரபு உலகின் மிக நீண்ட கால அரசாட்சியாளரான இவர், பல தடவைகள் சதிப்புரட்சிக ளையும் சந்தித்துள்ளார். மன்னர் ஹசன் 1961-ம் ஆண்டும் 71, 72-ம் ஆண்டுகளில் இராணுவ சதிப் புரட்சிகளிலிருந்தும் 73-ம் ஆண்டு இடதுசாரிகளின் சதியிலிருந்தும் தப்பினார். 1929-ம் ஆண்டு யூலை மாதம் 9-ம் திகதி பிறந்த இவருக்கு 2 ஆண்களும் 3 பெண் களுமாக 5 குழந்தைகள். இவர் களில் மூத்தவரான முகமட் அடுத்த மொறோக்கோ மன்ன ராக முடிசூட உள்ளார்.

இறந்த மன்னரின் ஈமச் சடங் குகளில் கலந்துகொள்ள உலகின் பல தலைவர்கள் மொறோக்கோ சென்றிருந்தனர். அமெரிக்க அதி பர் பில் கிளின்டன், பிரெஞ்சு அதிபர் ஜக் சிராக், தென்னா பிரிக்க அதிபர் ம்பெக்கி, மற்றும் பலஸ்தீன ஜனாதிபதி யாசிர் அரபாத், இஸ்ரேலிய பிரதமர் எகுட்பராக் போன்றவர்களும் அநேகமான மத்திய கிழக்குத்



தலைவர்களும் மன்னரின் ஈமச் சடங்குகளில் கலந்துகொண் டுள்ளனர்.

மன்னர் ஹசனின் இழப்பு மொறோக்கோ மக்களினால் மிகவும் சோகத்துடன் நினைவு கூரப்படுகின்றது. 29 மில்லியன் மக்களின் மனங்களில் இடம் பெற்றிருந்த மன்னர் ஹசன் காலமானது அறிவிக்கப்பட்டது டன், நாட்டின் தொலைக்காட் சிகள் உட்பட சகல செய்தியூட கங்கள் சோகமயமான நிகழ்வு களை ஒலிபரப்பின. வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு, சகல விசேட வைபவங்களும் இரத்துச் செய்யப்பட்டன. மொறோக்கோ நாட்டின் தலைநகர் றபாவில் பல்லாயிரக்கணக்கான மக்களின் துயரக்கண்ணீருக்கிடையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (25.07.99) அன்று மன்னரின் இறுதிச் சடங் குகள் நடைபெற்றன.

# பாஸ்க் தேசிய ஹெரி தலைவர்கள் விடுதலை

ஸ்பெயின் பாஸ்க் பிராந்தியத் திற்கு சுதந்திரம் வேண்டிப்போ ராடும் ETA அமைப்பின் அரசி யல் பிரிவென நம்பப்படும் அர சியல் கட்சியான ஹெரி பட்டா சூனாவின் 22 உயர் தலைவர்கள் கடந்தவாரம் ஸ்பானிய நீதி மன்ற ஆணையை அடுத்து விடு தலைசெய்யப்பட்டனர்.

ஸ்பானிய அரசினால் சட்ட விரோத அமைப்பு என தடை விதிக்கப்பட்ட ETA அமைப்பு டன் தொடர்பு வைத்திருந்தனர் எனக் குற்றம்சாட்டி 1997—ம் ஆண்டு மேற்கண்ட 22 பேரும் சிறையில் அடைக்கப்பட்டனர். இவர்களது சிறைத்தண்டனை சட்டவிரோதமானது என முறை யீடு செய்யப்பட்ட மனு மீது நடந்த விசாரணையின் இறுதியி லேயே இவ்விடுதலைத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதற்கிடையே கடந்த வரு டம் செப்டெம்பர் மாதம் முதல் ETA அமைப்பு ஒருதலைப்பட்ச போர்நிறுத்தம் ஒன்றினை செயல் படுத்திவருகின்றது. ஹெரி பட் டாசூனா தலைவர்களுக்கும் இந்த போர்நிறுத்தத்திற்கும் சம் பந்தம் இருக்குமா என்பதனை அறியமுடியாவிட்டாலும் பாஸ்க் பிராந்திய பிரச்சினைக்கு அரசி யல் ரீதியான தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தை ஸ்பானிய அரசு உணர்ந்துகொண் டதன் ஒரு வடிவம்தான் இந்த விடுதலை என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவர்களது விடுதலையை அடுத்து பாஸ்க் பிராந்தியத்தில் மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்ததாயும் பல ஆயிரம் மக் கள் ஊர்வலமாகச் சென்று விடு தலையடைந்தவர்களை வர் வேற்றதாயும் சொல்லப்படுகி றது.

# புதிய அமைதி நடவடிக்கையை ஆராய கபிலா தென்னாபிரிக்கா பயணம்

கொங்கோ ஜனநாயக குடிய ரசின் அதிபரான லோறன் கபிலா உத்தியோகபூர்வ விஜயமொன் றினை மேற்கொண்டு தென்னா பிரிக்கா பயணமானார். அங்கு கடந்தவாரம் ஆபிரிக்க ஒருமைப் பாட்டு அமைப்பு நாடுகளினால் தயாரிக்கப்பட்டு கைச்சாத்தி டப்பட்ட போர்நிறுத்த, அமைதி உடன்பாடுகள் குறித்த அடுத்த கட்ட பேச்சுக்களை தென்னா பிரிக்க புதிய அதிபர் ம்பெக்கி யுடன் மேற்கொள்வார் என அறி விக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் கொங்கோ பிரச்சினையில் தீர்வுகாணும்



வகையிலான ஆபிரிக்க நாடுக ளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு கொங்கோவில் அமைதிப்படை ஒன்று ஈடுபடுத்துவது என முடி வெடுக்கப்பட்டது. இதன்படி சாம்பியாவில் ஆபிரிக்க ஒரு மைப்பாட்டு அமைப்பின் அமை திப்படை தோற்றுவிக்கப்பட்டு அதற்கு அல்ஜீரியாவின் இராணு வத் தளபதியான லல்லி லஷீத் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள் ளார்.

கொங்கோ பிரச்சினையில் அமைதியான முறையில் தீர்வு காண்பதற்கான ஒப்பந்தத்தில் போராளிகள் தரப்பில் இதுவரை கையெழுத்து இடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வார இறுதியில் கொங்கோ விடுதலை அமைப்பும், கொங்கோ ஜனநாயக முன்னணியும் இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தலிபான்கள் பேச்சுக்களை ஆரம்பித்து அழிவினை தடுக்கவேண்டும் – ஐ.நா. விசேட தூதர்

ஆப்கானிஸ்தானின் தலிபான் ஆட்சியாளர்கள், எதிர்த்தரப்பி னருடன் உடனடியாகப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்றும், தலிபான்கள் திட்டமிட்டுள்ள புதிய இராணுவ நடவடிக்கைகளைக் கைவிட்டு அரசியல் ரீதியான பேச்சுக்க ளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றும் ஐநாவின் ஆப் கான் விசேட தூதுவர் லக்தர் இப்ராஹிமி பத்திரிகையாளர் களை சந்தித்தபோது தெரிவித் தார். மூன்று நாட்களாக தலை நகர் காமுவில் தலிபான்களுடன் நடத்திய பேச்சுக்களின் இறுதி யிலேயே இவ்வாறான கோரிக் கையை அவர் முன்வைத்துள் ளார்.

ஆப்கானிஸ்தான் முன்னாள் ஆட்சியாளர்களான ஆப்கான் கூட்டமைப்பின் தலைவரான அகமத்ஷா மசூத், அண்மையில் தாங்கள் எந்த ச்சந்தர்ப்பத்திலும் எந் நேரத்திலும் தலிபான்களு டன் பேச்சுக்களை நடத்த தயார் என அறிவித்திருந்தார். இதனை வரவேற்ற லக்தர் இப்ராஹிமி இந்த சந்தர்ப்பத்தை தலிபான் கள் பயன் படுத்திக்கொள்ள வேண்டும் என்றார். இதற்கி டையே கடந்தவாரம் இறுதியில் உஸ்பெகிஸ்தான் தலைநகர் தாஷ் கன்டில் அமெரிக்கா, ரஷ்யா உட்பட ஆப்கானிஸ்தானின் சுற் றுப்புற நாடுகள், ஆப்கானிஸ்தா னில் போரிடும் அமைப்புக்க ளுக்கு தமது நாடுகள் எந்தவித உதவிகளை புரிவதில்லை என் றும் இதற்கான உடன்பாடு ஒன் றிலும் கைச்சாத்திட்டுள்ளன என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

# ரஷ்யா–அமெரிக்கா பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பம்

ரஷ்யாவின் புதிய பிரதமர் சேர்செய் ஸ்டொஷின் தனது முதலாவது அமெரிக்க விஜயத் தினை இன்று ஆரம்பித்தார். கடந்த மே மாதம் பதவியேற்ற ஸ்டொஷின் தனது மூன்று நாள் அமெரிக்க விஜயத்தின் மூலம் கொசோவோ பிரச்சினை யின்பின் இரு நாடுகளுக்குமி டையே தோன்றியிருந்த முறுகல் நிலையினைத் தனித்து சுமூக சூழ்நிலையை ஏற்படுத்துவா ரென நம்பப்படுகிறது.

அமெரிக்காவில் இவர் தங்கி யிருக்கும் மூன்று தினங்களில் இருநாடுகளுக்குமிடையேயான அரசியல், பொருளாதார சிக்கல் களை தீர்ப்பதில் மாத்திரமன்றி ரஷ்யாவிற்கான புதிய கடன்கள்



பற்றி, ஏற்கனவே ஒப்புக் கொள்ளப்பட்டு முடக்கப்பட்ட கடன்கள் பற்றியும் பேச்சுவார்த் தைகளை மேற்கொள்வார் என ரஷ்ய வெளியுறவு வட்டாரங்கள் தெரிவித்தன.

அமெரிக்க உப ஜனாதிபதி அல்கோவுர்டன் முதலில் பேசும் ஸ்டொஷின் அமெரிக்க ஜனா திபதி பில்கிளின்டனையும் சந் திப்பார். அத்துடன் உலக வங் கித் தலைவர் மற்றும் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளுட னும் ரஷ்யாவிற்கான புதிய 4 பில்லியன் டொலர் கடன்பற்றிப் பேசுவார். நேட்டோ அமைப்பு டன் இணைந்து ரஷ்யப்படைக ளும் சில பிராந்தியங்களில் செயலாற்ற வேண்டும் என்ற அமெரிக்க கோரிக்கை பற்றியும் இவ்விஜயத்தின்போது ஆராயப் படும் என அமெரிக்கத் தரப் பில் கூறப்பட்டது.



30 வருடங்களுக்கு முன்னைய விண்வெளி வீரர்கள் தற்போது...

# சேர்பியர்களின் கொலைக்கு நேட்டோவே காரணம்

**- யூகோஸ்லாவியா**

கொசோவோ மாநிலத்தின் தலைநகரான பிறிஸ்ரினாவிற்கு சுற்றுப்புறத்தில் அமைந்துள்ள கிராமமொன்றில் 24-ம் திகதி காலை 14 சேர்பிய விவசாயிகள் கொலைசெய்யப்பட்டுள்ளனர்.




ஐ.நா.வின் கொசோவோ படைகளின் கனேடிய படைப்பிரிவில் கட்டுப்பாட்டில் உள்ள கிறாஸ்கோ எனும் கிராமத்திலேயே இப் படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. இக் கிராமத்தில் 80 சேர்பியர்களும் 2 அல்பேனியக் குடும்பங்களும் வசித்துவந்தன. சேர்பியர்களைப் பெரும்பான்மையாகக்கொண்ட இக் கிராமத்திற்குள் ஊடுருவிய அடையாளம் காணப்படாத ஆயுத நபர்கள், விவசாயத்தில் ஈடுபட்டிருந்த 14 சேர்பியர்களைச் சுற்றிவளைத்துச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து சேர்பிய மக்கள் தமது பாதுகாப்பிற்காக ஐநா. படைகள் சரியான நடவடிக்கையை எடுக்கவில்லை எனக் குற்றம் சுமத்தினர். நேட்டோவின் குண்டு வீச்சுக்கள் முடிவடைந்ததன் பின் அல்பேனிய மக்கள் கொசோவோவிற்குள் மீள வரத்தொடங்கியவுடன் அங்கிருந்த சிறுபான்மைச் சேர்பியர்கள் பாதுகாப்பிற்காக சேர்பியப் பெரும்பான்மைகொண்ட ஏனைய பிராந்தியங்களிற்கு இடம்பெயரத் தொடங்கினர். இந்நிலையில் ஐ.நா. அதிகாரிகளும் படைத்தளபதிகளும் சேர்பியர்களுக்கான பாதுகாப்பு வழங்கப்படுமெனக் கூறி, அவர்களை மீள கொசோவோவில் குடியேற உற்சாகப்படுத்தினர்.

ஆனால் அதன்பின்னரும் அல்பேனியர்களினால் சேர்பியர்கள் மீது பழிவாங்கல் தாக்குதல்கள் இடம்பெற்றன. தற்போதைய படுகொலை குண்டுவீச்சு நிறுத்தப்பட்டதன் பின் நடந்த மிகப்பெரும் படுகொலை எனச் சொல்லப்படுகிறது. சேர்பிய தரப்பில் கொசோவோ விடுதலை இராணுவத்தினர்தான் இக்கொலைக்குக் காரணமென குற்றம் சுமத்தப்பட்டபோதிலும் கொசோவோ விடுதலை இராணுவத்தின் பேச்சாளர் இச் சம்பவத்திற்கும் தமது அமைப்பிற்கும் தொடர்பில்லை என்றும் இதனைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளில் தங்களது பூரண ஒத்துழைப்புக் கிடைக்கும் என்றும் கூறியுள்ளார்.

இதற்கிடையே யூகோஸ்லாவியா இச் சம்பவம் பற்றி ஆராய ஐ.நாவின் பாதுகாப்புச் சபையை உடனடியாகக் கூடும்படி கோரியுள்ளது. நடந்த இச் சம்பவத்திற்கு ஐ.நாவின் விசேட பிரதிநிதி பேர்னாட் குஷ்னர் மற்றும் கொசோவோ படைகளுக்கான ஐ.நா.வின் தளபதி மைக்கல் ஜக்சன் போன்றோர் வருத்தம் தெரிவித்ததுடன், இனிமேலும் இப்படியான சம்பவங்கள் இடம்பெறாதவாறு கடுமையான கண்காணிப்பு இடம்பெறும் என்றும் உறுதிகூறியுள்ளனர்.

# ஜப்பானிய விமானக் கடத்தலில் விமானி கொலை



ஜப்பானின் ANA நிறுவனத்திற்குச் சொந்தமான போயிங் ரக விமானமொன்று கடந்த வெள்ளியன்று ரோக்கியோ விமான நிலையத்திலிருந்து வட பகுதி தீவான ஹொக்கைடோவிற்குப் பறந்துகொண்டிருந்த போது கத்தி ஏந்திய நபர் ஒருவரினால் கடத்தப்பட்டது. விமானம் புறப்பட்டு சிறிது நேரத்தில் இந்தக் கடத்தல்காரர் கத்தியுடன் விமானியின் அறைக்குள் புகுந்துள்ளார். அங்கிருந்த தலைமை விமானியைக் கத்தி முனையில் பயமுறுத்தி விமானத்தைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார். விமானத்தை ரோக்கியோவின் சுற்றுப்புறத்தில் அமைந்துள்ள அமெரிக்க விமானத்தளமான யுக்கோட்டாவிற்குத் திசை திருப்புமாறு கடத்தல்காரர் விமானியை வற்புறுத்தியுள்ளார். இதற்கு விமானி மறுத்தநிலையில் அவரது கழுத்தில் குத்திய கடத்தல்காரர், உதவி விமானிகளை மிரட்டியுள்ளார். ஆனால் திடீரென விமானத்தின் பறப்பு உயரத்தைக் குறைத்ததன் மூலம் விமானத்தில் ஆட்டத்தை ஏற்படுத்திய உதவி விமானிகள் கீழே விழுந்த கடத்தல்காரரை இறுகப்பற்றி விமானத்தை மீண்டும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர். அத்துடன் விமானம் மீண்டும் புறப்பட்ட இடத்திற்கு மீளத் திரும்பியது. காயமடைந்த நிலையில் தரையில் விமானம் இறங்கியவேளை தலைமை விமானி மரணமடைந்தார்.

இவ் விமானத்தில் 517 பயணிகள் பயணம்செய்துள்ளனர். ஆனால் யாருக்குமே எந்த ஆபத்தும் வரவில்லை என பாதுகாப்பு அதிகாரிகள் கூறியுள்ளனர். விமானத்தைக் கடத்த முயன்றவர் 28 வயதான வேலையற்ற ஒரு ரோக்கியோவாசியென அடையாளம் காணப்பட்டுள்ளது. இவர் ஏற்கனவே சில தடவைகள் மனநோய்ச் சிகிச்சைக்கு உள்ளானவர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன.

# அணு தளபாட பாகங்கள் பிரித்தானியாவில் பறிமுதல்

அணு ஆயுத தளபாடங்களைத் தயாரிப்பதற்கு பாவிக்கப்படும் உயர் ரக அலுமினியம் பெருந்தொகையில் ஏற்றுமதிக்குத் தயாராக இருந்த நிலையில் பிரித்தானியச் சுங்க அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டது. அமெரிக்காவில் இருந்து கடந்த மே மாத இறுதியில் தென் கிழக்கு இலண்டனுக்குக் கொண்டுவரப்பட்டதாகக்கூறப்படும் இந்த 20 தொன் அலுமினிய தகடுகள், கப்பல் ஒன்றின் மூலம் மத்திய கிழக்கிற்கு அனுப்பப்பட இருந்தன. இதற்கிடையே கப்பல் புறப்பட முன்பாகவே சுங்க அதிகாரிகள் இந்த அலுமினியத்தொகையை கைப்பற்றினர். இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பாகிஸ்தானிய பிரஜை ஒருவர் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடப்பட்டுள்ளார்.

பிரித்தானியாவில் கைப்பற்றப்பட்ட அலுமினியத்தொகை, மத்திய கிழக்கினூடாக பாகிஸ்தானின் கராச்சி துறைமுகத்திற்குக் கொண்டுசெல்லப்பட இருந்ததாக சந்தேகங்கள் எழுந்துள்ளது என சுங்க அதிகாரிகள் தரப்பில் சொல்லப்பட்டது.


## ‘வேருக்கு நீர் பாய்ச்சுவோம்’

*தமிழீழ விடுதலைப்புலிகள் சுவிஸ் பணியகத்தின் சுவிஸ் வாழ் தமிழீழ மக்களுக்கான அழைப்பு*

**அன்பான சுவிஸ் வாழ் தமிழீழ மக்களே!**

எமது தாயகத்தில் எமது உறவுகளுக்கு தோள் கொடுத்து, எமது வேருக்கு நீர்பாய்ச்சி உரம் சேர்க்க வேண்டியது எமது கடமையல்லவா!

இக் கடமையினை காலம் வேண்டிநிற்கும் வேகத்துடன் முன்னெடுக்க நாம் ஒன்றாய் இணைந்து எமது சக்தியினை வலுப்படுத்துவோம்!!

இப் பணியினைச் சிறப்பாக ஆற்றத் துணைபுரியும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் சுவிஸ் பணியகத்தின் பிரதிநிதிகள் இம்மாதம் 9ம் திகதி முதல் ஒகஸ்ட் மாதம் 9ம் திகதி வரையிலான காலப்பகுதியில் ‘விசேட மக்கள் உறவுத் திட்டம்’ ஒன்றுடன் உங்கள் வீடுதேடி வருகிறார்கள்.

1. உங்கள் வீடு தேடி வரும் சுவிஸ் பணியகப் பிரதிநிதிகளை வரவேற்று உங்கள் ஒத்துழைப்பினை நல்குங்கள்.
2. உங்களை சுவிஸ் பணியகத்தின் செயற்பாடுகளுடன் இணைத்துக்கொள்ள விரும்புபவர்கள் உங்கள் பெயர் விபரங்களையும், தாங்கள் இணைந்து பணியாற்ற விரும்பும் துறை பற்றிய விபரங்களையும் பதிவுசெய்து கொள்ளுங்கள்.
3. பணியகத்தின் வளர்ச்சிக்கும் சிறப்பான செயற்பாடுகளுக்கும் தங்கள் ஆலோசனைகளை வழங்குங்கள்.
4. தங்கள் பங்களிப்புக்களை வழங்கி எமது வேருக்கு நீர் பாய்ச்சுங்கள்.
5. ஓகஸ்ட் 9ம் திகதி நடைபெறவிருக்கும் ஜெனிவாப் பேரணியில் கலந்துகொள்வதற்கு உங்கள் பெயர்களைப் பதிவுசெய்துகொள்ளுங்கள்.

**எமது கைகள் ஒன்றாய் இணையட்டும்!**
**எமது பலம் மேலும் வலுக்கட்டும்!!**

**மேலதிக தொடர்புகளுக்கு: சுவிஸ் பணியகம்**
**தொலைபேசி இலக்கங்கள்:**
**01/273 34 07 / 079/604 09 55**


# அல்பிரட் இல்லாத பாரிஸ் விமான நிலையம்

‘அல்பிரட்’ இது பாரிஸ் விமான நிலையத்தின் வர்த்தகர்கள் கரீம் நசார் மீரானுக்கு இட்ட பெயர். அண்மையில் இந்த அல்பிரட்டிற்கு பெல்ஜிய நாட்டின் வதிவிட உரிமை கிடைத்துள்ளது.

ஈரானைப் பிறப்பிடமாகக் கொண்ட கரீம் நசார் மீரான், தனது தாயார் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்தவர் என உறுதியாக நம்பினார். 1974-ம் ஆண்டு இங்கிலாந்துக்குச் சென்றவர் தனது தாயாரை இறுதியாகச் சந்தித்தார். பின்னர் ஈரானுக்குத் திரும்பிச் சென்றபோது தான் செய்த பிழை என்ன என அறிய முடியாத நிலையில் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார். பின் பிரஜா உரிமையை அரசு பறித்துக்கொண்டது. சரியான அடையாள அட்டையில்லாத நிலையில் அவர் நாடு மாறத் தீர்மானித்தார்.

ஒவ்வொரு நாட்டிற்குச் சென்றபோதும் திருப்பி அனுப்பப்பட்டார். இறுதியாக பெல்ஜியம் தங்க அனுமதித்தது. அங்கு ஐந்து வருடங்கள் வாழ்ந்த அவர் ஒரு வழியாக இங்கிலாந்தின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டார். ஆனால் பெல்ஜிய அரசிடம் தனது வதிவிட உரிமைக்காக காத்திருந்ததால் அதனைப் பெற்றுக்கொள்ளவில்லை.

ஆனால் அவரை ஏற்றுக் கொள்ள பெல்ஜியம் தயாராக இல்லை. இந்நிலையில் பிரான்சின் விமான நிலையத்தினூடாக செல்லமுயன்ற அவர் விமான நிலயத்திலேயே தங்கிக்கொண்டார்.

பாரிசின் `Roissy' விமான நிலையத்தின் பகுதியில் கடந்த பதினொரு வருடங்களாக இவர் தங்கியிருந்தார். பிரெஞ்சு தொலைக்காட்சி முதல் பலவெளிநாட்டு தொலைக்காட்சி நிறுவனங்களும் இவர் தொடர்பான விவரணங்களை ஒளிபரப்பியுள்ளன. இவருக்கு வரும் கடிதங்கள் விமான நிலையத்தின் தபால் நிலைய விலாசத்திற்கே வருவதுண்டு. பிரெஞ்சுத் தபால்த்துறையினரும் பதினொரு வருடங்களாக அவற்றை வழங்கி வந்தனர்.

அல்பிரட் தனது அனுபவங்களை எழுதி ஏராளமான பத்திரிகைகள் சஞ்சிகைகளுக்கு அனுப்பியுள்ளார். அத்துடன் தபால் மூலமான கல்வியையும் கற்றுள்ளார். பெல்ஜிய வதிவிட உரிமையை விமான நிலைய உத்தியோகத்தர்களினதும், வர்த்தகர்களினதும் இடைவிடாத முயற்சியினால் இவர் பெற்றுக்கொண்டு அல்பிரட் விமான நிலையத்தைவிட்டு வெளியேறுகிறார்.

ஆனால் கடந்த பதினொரு வருடங்களாகத் தினசரி பழகி வந்த அல்பிரட்டை இழக்கும் விமான நிலயத்தினர் உண்மையான ஒரு நட்பின் பிரிவை எப்படிச் சமாளிக்கப் போகிறார்களோ!

**நித்தி வாகன சேவை**

உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய 20M³ வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் ஹோர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

நித்தி:



0148050214
0613342518
0607348051 / 0148385825

Pub Fr 23032

**ஈழமுரசு** Eelamurasu Weekly

ஐரோப்பிய வணிக சேவை

உங்கள் அன்புக்குரியவர்களின்

★ பிறந்த நாள் வாழ்த்துக்கள்
★ திருமண அழைப்பிதழ்கள்
★ நிகழ்ச்சி அரங்கேற்றங்கள்
★ அறிவித்தல்கள் - நினைவஞ்சலிகள்

என்பவற்றை வரலாற்றுப் பதிவாக்க நாங்கள் தயாராக உள்ளோம்

நீங்கள் ஈழமுரசிற்கு சந்தா செலுத்துவதன் மூலம் 20% இலாபம் அடைகின்றீர்கள் என்பதனை அறிவீர்களா?

**ரவி வாகன சேவை**

உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கும் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது



தொலைபேசி:
0148765190
0607622689

Pub Fr 23034

உத்தியோகபூர்வ

**மொழிபெயர்ப்பு சேவை**

கிருஷ்ணபிள்ளை மாயவன்
15 ஆண்டுகளாக அரச அங்கிகாரம் பெற்று சட்ட ஆலோசனைகள் மொழிபெயர்ப்புகள் சேவையாற்றிவருகிறோம்

39, bd de la Chapelle
75010 Paris
M°: LA CHAPELLE OU GARE DU NORD
TEL/FAX: 0140345341

எம்.ஜி.ஆர் மீடியா & ரெக்ரைல்ஸ் நிறுவனத்தின் உள்ளே

Pub Fr 23035

**P.S வாகன சேவை**

உங்கள் தேவைகளுக்கு
24 மணி நேர சேவை
தொடர்புகட்கு:

ஜேர்மன் - T.P: 01717489297
பிரான்ஸ் - T.P: 0164721143
கொர்னலியூஸ் (Cornelius)
குமார்



Pub Fr 23037

**தென்றல் இல்லம்**

உங்கள் இல்லங்களில் நடைபெறும் வைபவங்களுக்கு வேண்டிய அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்வதுடன், சுவை மணம் குன்றாத உடன் கோப்பித்தூளும் பெற்றுக்கொள்ள

60, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle
Tel: 01 42 09 36 09

Pub Gra.

**Lune** ELECTRONIQUE INFORMATIQUE

LUNE



3590F

Processeur CYRIX 300
Carte Mère TX PRO II
Disque Dur 3,2 Go Ultra DMA
SDRAM 32 Mo Pc 100
Carte Video 4 Mo AGP
Carte Son 16 Bits PCI
Lecteur CD ROM 40X
Lecteur Disquette 3,5"
Ecran 15" MPR II
HP PMPO 160 W
Clavier 105 Touches PS/2
Souris PS/2
Botier Alim Moyan Tour ATX

GARANTIE 2 ANS

**உங்கள் வீடுகள், வர்த்தக நிலையங்களில் சகல விதமான திருத்த வேலைகளுக்கும் காத்திருக்கின்றார்கள்.**

**`VICTOR SARL'**

கட்டட, மின்சார, தண்ணீர், கழிப்பறை திருத்த வேலைகளை மிகக் குறைந்த கட்டணத்துடன் திறமையான தொழிலாளர்களைக்கொண்டு அமைத்துக்கொள்ள

**VICTOR SARL**

43, Rue de la Reunion, 75020 Paris
Tel: 01 44 93 90 30

**சிவாசினி வாகன சேவை**

*Chivashini Transport*

**வாகன தேவைகளுக்கு 24 மணி சேவை**

தொடர்புகட்கு:சிவாஜினி வீடியோ



06 14 61 69 84
01 42 09 23 59
01 49 37 26 03
01 42 05 44 04

Pub Fr 23036




*Réseau*

**WWA**

உலகம் உங்கள் கைகளில்




# மீண்டும் அதிகரித்த நிமிடங்களுடன் உங்கள் சேவையில்!

**KING Telecom**

92, Rue de Bellville,
75020 Paris.
(M°: Pyrénées)
Tél.: 01 44 62 93 96
Fax: 01 44 62 94 96

**WWA**

86, Rue de Bellville,
75020 Paris.
(M°: Pyrénées)

**KING Telecom**

33, Place de Général de Gaulle
60100 Creil.
(Place de la Gare)
Tél:03 44 55 41 59
Fax: 03 44 55 42 51

அனைத்துத் தொடர்புகளுக்கும்: 01 43 15 17 17
விற்பனையின் பின்னான சேவைகளுக்கு: 01 43 15 17 18

Pub.



ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# சுதந்திரச் செயற்பாடு – பக்கச் சார்பின்மை – நடுநிலைமை இதுதானா?

சுதந்திரச் செயற்பாடு - பக்கச் சார்பின்மை - நடுநிலைமை ஆகிய விடயங்களைக் கொண்ட தளத்தில் இருந்துதான் தாம் இயங்குவதாக சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் கூறிக்கொள்வதுண்டு. சர்வதேச ரீதியில் அதன் அறிக்கைகளில்கூட இவ்விடயங்கள் காத்திரமாகச் சுட்டிக்காட்டப்படுவதுண்டு. ஆனால் வன்னியின் பாதைதிறப்பு விடயத்திலும் அல்லல்படும் மக்களுக்கு உதவிக்கரம் நீட்டும் விடயத்திலும் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் காட்டும் அசமந்தத்தனமான போக்கு சங்கத்தின் மேற்குறிப்பிட்ட கொள்கைகளில் சந்தேகத்தினை ஏற்படுத்தியுள்ளது.

40 நாட்களிற்கு மேலாக சிறீலங்கா அரசின் இராணுவ மேலாதிக்கப்போக்கினால் தனது பாதைத்தொடர்பினை துண்டாடிய வன்னிமண்ணின் அவலங்களை சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் இதுவரை உணர்ந்திருந்தும் எவ்விதமான காத்திரமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாதமை கசப்பானது. ஆனால் உண்மையானது. சர்வதேச ரீதியில் பாரிய தளத்தினைக்கொண்ட இவ் அமைப்பு, சிறிய வன்னி நிலப்பரப்பிற்கு நீதியைக் கிடைக்கச்செய்வதில் ஏன்தான் பாராமுகமாக இருக்கின்றது என்றது மனித நேயத்தில் எழும் ஒரு கேள்வியாகும். தமது உயிர்வாழ்தலுக்கு மணித்துளிகளை எண்ணியபடி 90 அவசர நோயாளர்கள் சாவின் பிடியில் தத்தளித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்பாடுகள் எல்லாம் எங்குதான் போனது என்பதனைக்கூட வன்னி மக்கள் மிகத் தெளிவாகக் கேட்டிருக்கின்றனர்.

ஒப்புக்காக வேண்டுமானால், இருதரப்பினரும் விட்டுக் கொடுக்கின்றார்களில்லை, அதனால் நாம் ஒன்றும் செய்ய முடியாது என்ற பதிலை செஞ்சிலுவைச் சங்கம் தெரிவிக்கலாம். ஆனால் இராணுவதரப்பு பாதைதிறப்பு விடயத்தில் தனது இராணுவ யுத்திகளை கருத்திற்கொண்டு நிபந்தனைகளை விதிப்பது செஞ்சிலுவைச் சங்கத்திற்கு ஒன்றும் விளங்காத விடயமல்ல. ஆயினும் இராணுவத் தரப்பின் கருத்துக்களை 'ஊமைக்கோட்டான்கள்' போல செவிமடுப்பது சர்வதேசத்தில் அது பெற்றிருக்கும் கீர்த்திக்கும் புகழ் சேர்க்கப்போவதில்லை. செஞ்சிலுவைச் சங்கம் தாமதிக்கும் ஒவ்வொரு விநாடியும் வன்னியில் பல மரணங்கள் நேரிட்டு வருகின்றன. நாளைக்கு எமக்கு என்ன கதி என்பது பட்டினியாய் வாழும் உயிர்களுக்கும் தெரியவில்லை. விதியை நொந்தபடி தம் காலத்தைக் கழிக்கின்றார்கள். விடுதலைப் புலிகள் மக்களின் அவலங்கள் குறித்து சர்வதேச அரங்கில் வெளிப்படுத்தியபோதிலும் வன்னியில் நிலைகொண்டுள்ள செஞ்சிலுவைச் சங்கத்திற்கு இது புரியாமற்போனது துரதிஷ்டமானது. இன்று வன்னியில் மக்கள் சர்வதேசத்தொண்டர் நிறுவனங்களின் அசமந்தப்போக்குக் குறித்து கொதிப்படைந்துள்ளார்கள். அது நியாயமானது. தனது வாழ்வியலுக்காக போராடும் இம் மக்களின் உள்ளக் குமுறல்களுக்கு உடனடியாகச் செவிசாய்க்க வேண்டியது சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் குறிப்பாக செஞ்சிலுவைச் சங்கத்தின் தலையாய பொறுப்பாகும்.

# கெட்டித்தனமல்ல கொடூரம்

### பார்வை

வன்னிக்கான உணவு மருத்துவத் தடை இறுக்கப்பட்டு சிங்கள இராணுவத் தளபதிகளும் அரசும் அடுத்த கட்ட போருக்கான முன் முயற்சிகளில் இறங்கி உள்ளனர். வன்னியில் 'சிக்குண்டு' போயுள்ள இராணுவ நலன்களையும் சிக்கல்களையும் கொடூரமான நடவடிக்கைகள் ஊடாக தீர்த்துவிட சிங்களம் முயல்கின்றது.

இது ஒரு ஒன்றிணைக்கப்பட்ட நடவடிக்கை. வன்னிக்கான உணவு மருத்துவப் பாதையை ரணகோசாவைக் காரணம் காட்டி இராணுவம் தடுத்து நிறுத்தியது. வன்னியில் இடம்பெறும் புலிகளின் பெரும் திட்டமிடல் பயிற்சிகளாலும், மக்களின் பயிற்சி நடவடிக்கைகளாலும் மிரண்டு போயிருந்த சிறீலங்காவுக்கு மக்களை முற்று முழுதாக தாக்கும் போர் உத்தி தேவைப்பட்டது. இராணுவ நடவடிக்கை ஊடாக சாதிக்க முடியாத ஒன்றை உணவு மருத்துவத் தடை ஊடாக சாதித்துவிட அரசு முயன்றது. ஏற்பட்டுவரும் போரெழுச்சியை பட்டினி போட்டுத் தடுக்கும் முயற்சி.

**வன்னி இன்று உணவு மருத்துவ விநியோகம் ஊடான தொடர்பை மட்டுமே சிங்களத்துடன் கொண்டிருந்தது. இதனை துண்டிப்பதால் உலக விதிகளின் பிரகாரம் தமிழர்கள் தம்மைத்தாமே ஆளுவதற்கான உரிமையை நடைமுறைப்படுத்தத் தொடங்கிவிடுவர். சிங்களத்தைப் பொறுத்தவரை அதனது அரசியல் இராஜதந்திர நிலவரங்களுக்கு இது பாதகமானதொரு அம்சமாகும். இதனால்தான், முற்றாக உணவைத் துண்டிக்காது சிங்களம் செயற்பட்டது. இராணுவ நலன்களுடன் சமரசம் செய்யக் கூடிய உணவு மருத்துவ விநியோகத்தை மேற்கொண்ட அரசு, தற்போது இராணுவ நலன்கள் மிக மோசமாக அச்சுறுத்தப்படுகின்றது என்ற நிலையில் நீடித்த துண்டிப்புக்கு முற்படுகின்றது.**

இன்று உணவு மருத்துவ விநியோகப் பாதையை துண்டிப்பதற்கான நடவடிக்கையை உற்று நோக்கின் எவ்வாறு சிங்கள இயந்திரம் சாதுரியமாக நடந்து கொள்ள முற்படுகின்றது என்பது புலப்படும். அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் பணிமனை இவ் விநியோகங்களை மேற்பார்வை இடுகின்றது. வவுனியா அரச அதிபரும் வன்னிக்கான ஒருங்கிணைப்பாளருமான திரு.கணேஸ் இவ் நடவடிக்கைகளைச் செய்கின்றார். இராணுவ அமைச்சின் செயலாளர், விநியோகம் தொடர்பான கட்டுப்பாட்டை கொண்டுள்ளார். வன்னிக்கான சிங்களத் தளபதி பலகெல, உணவை விடுவதா இல்லையா எனத் தீர்மானிப்பார். இங்கு ஏதாவதொரு இடத்தில் முட்டுக்கட்டையை போட்டுவிட்டால் விநியோகம் தடைபடும். இராணுவத்தின் மீது பழியைப் போடாது உணவை நிறுத்த பல்வேறு காரணங்களை கடந்த காலங்களில் அரசு கண்டுபிடித்தது. உணவு வழங்க போதிய பணமில்லை என்று ஒரு தடவை சந்திரிகா காரணம் கூறியிருந்தார். இது 'கவனமாக உள்நோக்கை மறைக்கும்' நடவடிக்கை மட்டுமல்ல, உலகின் கண்டனத்திலிருந்து சாதுரியமாகத் தப்பிக்கும் நடவடிக்கையுமாகும்.

**தற்போது தீவிரமான உணவு மருத்துவத் தேவை எனப்பட்டபோது, உணவையும் மறித்து புலிகளின் தலையில் அதற்கான பழியைப் போடும் நுட்பத்தை சிங்களம் முயற்சிக்கின்றது. சிங்கள இராணுவத்தில் தன்னை புத்திஜீவி அதிகாரியாகக் காட்டிக் கொள்ள, பல பத்திரிகைப் பேட்டிகளை சளைக்காமல் கொடுத்து சந்திரிகாவின் நம்பிக்கையை பெற்ற மேஜர் ஜெனரல் பலகெல, இன்று உணவுப்பாதையை மூடும் நடவடிக்கைக்கு 'பொலிடிக்கல்' வடிவம் கொடுக்கின்றார்.**

5 கி.மீ. தூரத்திற்கு மக்களிற்கு பாதுகாப்பான பாதையை தனது இராணுவம் திறக்க முயல்வதாக கதைவிட்ட பலகெல, இதற்காக புலிகள் மாங்குளத்தினை நோக்கி அமைத்திருந்த முன்னரங்கை விட்டு வெளியேறி சாப்பாடு அனுப்புவதற்காக பின்செல்ல வேண்டும் எனக் கூறுகிறார். தமிழ் மக்களின் அரசியல் இராணுவ தொலை நோக்கைப் பற்றிய 'ஏளனமான பார்வையை' பலகெல கொண்டுள்ளார். ஒரு மைலை கடக்க ஏராளமான உயிர்ப் பலிகளைக் கொடுத்த சிங்களப் படை உணவைக்காட்டி இடத்தைப் பிடிக்கலாம் என எண்ணியது.

பலகெலவின் கெடுபிடிகளுக்கு தலை சாய்க்க புலிகள் தயாராகவில்லை. 250 மீற்றர் விஸ்தீரணமுள்ள பாதையொன்றை திறக்குமாறு அல்லது பழைய உயிலங்குளத்தை திறக்குமாறு புலிகள் அறிவித்தமை, பலகெலவின் நுட்பமான 'பரப்புரைக் கதைகளை' சவாலுக்கு அழைத்துள்ளது. புலிகள் பின்வாங்கி பாதை திறக்க சம்மதிக்காது விட்டால், மக்கள் புலிகளுக்கு எதிராகத் திரும்புவர் என்ற பலகெலவின் கணிப்பு, காலத்தைக் கணிப்பிடாத முயற்சியாகும்.

**இன்று தமிழர்கள் தெளிவானவர்கள். தமது அரசியல் உரிமைகள் பற்றி தெரிந்தவர்கள். உணவுப் பாதையை உரிமையாகக் கருதுபவர்கள். அது மறுக்கப்படுவதை சர்வதேச விதிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கத் தெரிந்தவர்கள்.**

இன்று ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் ஆணைக்குழு பணிமனை மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கங்களின் பணிமனைகள் முன்பு தமிழர்கள் நடாத்தும் தொடர் போராட்டங்களும் தென் தமிழீழத்தில் இடம்பெறும் இவ் உணவுத் தடைக்கு எதிரான மக்களின் கொந்தளிப்பும், தமது உரிமைகள் பற்றி 'தெரிந்த' மக்கள் சமூகத்தின் நடவடிக்கைகள் ஆகும்.

பலகெல தனது பாடநூல்களில் படித்த மக்களின் மனதை வெல்லும் போர் உத்திகளில் ஒன்றாக அல்லது மனோவியல் போர் நடவடிக்கையாக தடையைப் பயன்படுத்தலாம் ஆனல் புலிகள் இயக்கமும் தமிழ் மக்களும் எதிரியின் சூட்சுமம் புரிந்தவர்கள்.

–ராஜா

# எதிரொலிகள்

ஆசிரியர்கட்கு,

சென்றவார 'ஈழமுரசு' (22-28/07/99) இதழில் 13-ம் பக்கத்தில் பஸ்தில்வெடியோசை - லாச்சப்பல் வெடிக்கலகம்' எனும் தலைப்புடன் கூடிய விடயம்கண்டு மிகவும் கவலைதான் ஏற்பட்டது. நம்மவர்கள் லாச்சபலில் ஏன்தான் இவ்வாறு செயற்படுகிறார்களோ தெரியவில்லை. எத்தனை தரம்தான் 'ஈழமுரசு' இடித்துரைத்தாலும் நாய் வாலை நிமித்தமுடியாதது மாதிரி நம்மவர்களை எவ்வழியிலும் திருத்த முடியாது. இது ஈழத்தமிழினத்தின் சாபக்கேடோ என்னவோ?

எந்நேரம் பார்த்தாலும் லாச்சப்பலில் நம்மவர்கள் கூட்டம் கூட்டமாக நின்று அரட்டை அடிப்பதும் சோடாப்போத்தல்களுடன் நிற்பதையும் பார்த்தால் மனதிற்குச் சங்கடமாகத்தான் இருக்கின்றது. நம்மவர்களின் நடத்தைகளினால் நம்மவர்களும் நம் கலாச்சாரமும் வேற்று இனத்தவர்களுக்கு ஒரு வேடிக்கையும் வினோதமுமாகத்தான் தென்படுகின்றது. இது ஒரு ஆரோக்கியமான செயலாகத் தெரியவில்லை.

ஐ.ஜெகதீசன்
பாரிஸ்

சிறு கதை

நீண்டகாலமாய்த் துருப்பிடித்துப் போயிருந்த தண்டவாளங்களில் மீண்டும் புதிதாய்ப் பரபரப்பு: சுறுசுறுப்பு! ஒருநாளில் இரு தடவைகள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி ஓடும் ரயில் வண்டிகளின் சத்தங்கள்! ஜனங்கள் அவசரம் அவசரமாய்க் கூடிப்பிரியும் குட்டிக் குட்டிக் காட்சிகள்! சத்தங்கள் யாவும் ஓய்கிறபோது. பழையபடி எல்லாவற்றையும் மீறிக் கொண்டு வரும் கடலை நெய்யின் கமறலும், பூட்ஸ்களின் தோல் மணமும்! சிலசமயம் வயிற்றைக் குமட்டும்; பல சமயங்களில் அடி வயிற்றுக்குள் அப்பிக் கொண்டுவிடும் அச்சமோ என்று புரியாத ஒரு நெருடல் பந்தாக உருண்டு கொண்டே கிடக்கும்!

சூரியன் அஸ்தமிக்கும் பொழுதுகளில், ஓரமாய் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும், பொதிகளற்ற வெற்று 'ரயில்' பெட்டிகளினுள்ளேயிருந்து 'ஐயோ... அம்மா...!' என்ற மரண ஓலம் எதிரொலியாய் விட்டுவிட்டுக்கேட்கும்!

சில நிமிடங்களிற்கு எங்களின் தொண்டைக்குழிகள் அடைத்துப் போகும்! வீடு அசாதாரண அமைதியில் மூழ்கிக் கிடக்கும்!

ஆனால் நாம் பயப்படவே தேவையில்லை! அப்படித்தான் அறிவு சொல்லியது. எத்தனை நம்பிக்கை, அவர்களுக்கு எங்கள் மேலிருந்தது. ரெயில்வே ஸ்ரேசனின் பெரிய பெரிய கட்டடப்பகுதிகளை இணைத்து, பிரதான முகாமாக்கியிருந்த அந்த இந்திய 'சிங்'குகளுக்கு, நிலையத்தின் தலைமை அதிபரான அப்பாவில் மட்டும் நிறைய மரியாதை!

தண்டவாளங்களோடு ஒட்டியிருந்த எங்கள் ரெயில்வே குவாட்டர்ஸ் மிகவும் அழகானது. வசதியானது! ஸ்ரான்லி வீதிப்பக்கமாயிருந்த, வீட்டின் முன்புறத்தில், முல்லையும் அடுக்கு மல்லிகையும் பந்தலிட்டு நின்றன. மணல் பரவிய நீண்ட முற்றம். இருபுறமும் பச்சைப் புற்கள். வேலி முழுவதும் பின்னிப்படர்ந்திருக்கும் பூங்கொடிகள்; அவை பெரிய பெரிய இலைகளைப் பரப்பி, வேலிக்கு மிகவும் பாதுகாப்பாய் இருந்தன. அவை 'ரெயில்வே குவாட்டர்ஸ்'க்கே உரியவை போல, தனித்துவமாயிருக்கும்! றோஜா நிறத்தில் கொத்துக் கொத்தாய்ப் பூத்துக்குலுங்கும்! ஆனால் வாசனையற்றவை! அவை சிங்களப் பகுதியிலிருந்துகொண்டு வரப்பட்டதால் 'சிங்களக்கொடி' என்று பெயர் சூட்டியிருந்தோம்.

வீட்டின் இடதுபுறமிருந்த நீளமான பெரிய வளவில், நெடு நெடுவென்று வளர்ந்த பத்துப்பன்னிரண்டு பனைமரங்களும், ஓரமாய் இரண்டு முருங்கை மரங்களும்! முருங்கைகள் ஏராளமாய்க் காய்க்கும்! வீட்டின் வலது பக்கமிருந்த சிறிய வளவிலும், பின் வளவிலும் இதரை வாழைகள், தென்னைகள், தூதுவளை, துளசி, பயிற்றங்கொடி, கரும்பு.... என்று பசுமையில் நிலம் செழித்துக் கிடந்தது!

இவற்றிற்கு நீர் பாய்ச்சுவதற்காய், நான் நீண்டநேரம் நீராடுவது வேறு விடயம்.

பனைமரங்கள் எப்பவும் பேரிரைச்சலுடன் கம்பீரமாய் அசைந்து அசைந்து சலசலத்துக்கொண்டேயிருக்கும்.

படுக்கையறையின் விசாலமான ஜன்னலினூடாய் பனம்பூக்கள் பறந்து வந்து வாசனையோடு சிதறும்! வீட்டின் ஓரமெங்கும் மஞ்சள் பூப்பந்துகள் திரள் திரளாய் ஒதுங்கிக் கிடக்கும். வளவைப் பார்க்கப் பார்க்க எப்பவும் எனக்குப் பெருமையாயிருக்கும்!

பின்னால், ரெயில்வே ஸ்ரேசன் வளவில், எமது வீட்டு வேலியோடு ஒட்டியவாறு உயரமான ஒரு 'சென்றிப் பொயின்ற்'! பனங்கொட்டுகளும் மண்மூட்டைகளும் போட்டு வசதியாக அமைத்திருந்த 'சென்றிப் பொயின்ற்'!

அவர்கள் வெளியில் 'சென்றி'யில் ஈடுபடுவதைவிட, வேலிக்கு மேலால், எமது வீட்டிற்குள் கண்மேய்ச்சல் விடுவதே அதிகம். கங்கு மட்டை, காய்ந்த ஓலை, பனங்காய், பன்னாடை என்று சடசடத்து விழும்போதெல்லாம், ஆரம்பத்தில் துடிதுடித்துப் பதைத்து வெற்றுவேட்டு வைத்து, கூச்சல்களோடும் அதட்டல்களோடும் பத்துப்பதினைந்து பச்சைத் தலைகள் வேலியின் மேலால் எட்டிப்பார்த்து ஆராயும்! போகப் போக, அது அவர்களுக்குப் பழக்கமாகி விட்டதால், பனைகளுக்குப் பாரிய பிரச்சினையேதும் ஏற்படவில்லை.

தண்டவாளங்களை நோக்கித் திறபடும் எமது பின்புறப் படலையை சங்கிலி போட்டுப் பூட்டக்கூடாது என்பது அவர்கள் கட்டளை! சாட்டாக, நினைத்த நேரத்தில் உள்ளிட்டு விடுவார்களோ என்ற பயம் நமக்கு! ஆனால் அநாவசியமாக அவர்கள் உள்ளிட்டதில்லை என்பது 'நம்பமுடியாத' உண்மை!

அப்பாவிற்கு, பின் படலையால் வேலைக்குப் போய்வருவது பெரிய சௌகரியமாய் இருந்தது. நேரம் கிடைக்கும் நேரங்களில் வந்து, தேநீர் அருந்தி, நொறுக்குத் தீனி சாப்பிட்டுவிட்டுப்போவார்.



சில சமயங்களில் அப்பாவுடன் சேர்ந்து 'கேர்ணல்', 'மேஜர்' என்று அலங்காரப் பட்டியல்களுடன் ஹிந்திப்பட்டாளங்களும் வருவதுண்டு! அப்பா எச்சிலை மென்று விழுங்கியபடி இழுபட்டுக்கொண்டு வருவது எனக்கு விளங்கும். அவர்கள் கதையோடு கதையாய் வீடுமுழுவதும் கண்களால் கணக்கெடுத்துக்கொண்டு போவார்கள். போகும்போது நட்பாக விடைபெறுவார்கள்.

'இங்கு எல்லோருக்கும் பெரிய பெரிய வீடுகள் இருக்கிறது;

நிறையத் தண்ணீர் வசதியிருக்கிறது; இதைவிட வேறென்ன வேணும் உங்களுக்கு? எதுக்காக சண்டை போடுகிறார்கள்...' என்று ஒரு இந்தியக் 'கேர்ணல்' அப்பாவிடம் கேட்டானாம். அவன் ராஜஸ்தானைச் சேர்ந்தவன்.

'விளக்கம் கொடுக்கவேண்டியவினாதான்! ஆனால் இவன்களுக்கு இதெல்லாம் விளங்குமா? இந்தியப் பெரும்பான்மையினக் குடிமகன் இவன்!- இந்தச் சிறுபான்மையின் இலங்கைத் தமிழனின் உரிமைப் பிரச்சினைகள், அரசியல் துரோகங்கள், நிரந்தர இழப்புகள், பரிதாபங்கள், ஏக்கங்கள்... எல்லாம் சொன்னாலும்தான் இவனுக்குப் புரியுமா?' - அப்படித்தான் அப்பா உடனே யோசித்தாராம். யோசனையின் விளிம்பிற்கு வரமுன்பே, அவன் இந்த மண்ணின் நாணம் மிக்க பெண்களைப் பற்றிச் சிலாகிக்கத் தொடங்கிவிட்டானாம். அதன் பின்னர் அவன் பதில் சொல்லக்கூடிய கேள்வியெதுவுமே கேட்கவில்லையாம்.

வீட்டு வளவுக்குள் கள்ளுச்சீவ வருபவன், வேலியோடு 'சென்றிப்பொயின்ற்' வந்ததிலிருந்து பனையில் ஏறமாட்டேன் என்று பிடிவாதமாக நின்றுவிட்டான். ஒரு பனையில் அவன் கட்டிவிட்ட முட்டி கவிண்டபடி அப்படியே கிடந்தது. அதிலிருந்து கள்ளு நிரம்பி வழிகிறதோ என்று குமரியாகி நிற்கும் என் குட்டித் தங்கை. பனையோடு ஒட்டிநின்று அடிக்கடி அண்ணாந்து பார்ப்பாள். அவள் பனைமரங்களருகே போனால், 'சென்றிப் பொயின்ற்'றிலிருந்து மெல்லிய விசிலடிப்பும் இனிமையான பாடலிசையும் மாறிமாறிக் கேட்கும்! அதனால் பனைகளருகே நின்று நாம் அனுபவிக்கும் சுகம் படிப்படியாகக் குறைந்துகொண்டே போனது!

அலுவலகத்திலிருந்து வீடு திரும்பியதும் ஆசை தீர அள்ளிக்குளித்துவிட்டு, சின்னத் தூக்கத்திற்காய் படுக்கையறைக்குள் நுழைந்தால், முகாமிலிருந்து வரும் மும்முரமான சத்தங்கள் தூக்கத்தைக் கெடுக்கும்! அச்சமயங்களிலெல்லாம், ஜன்னலினூடாய், கரும்பனைகளில் சிதறிக்கிடக்கும் சின்னச் சின்னக் குழிகளையெல்லாம் ஏகாந்தமாய் எண்ணிப்பார்த்துக்கொண்டு படுக்கையில் கிடப்பேன். அவர்கள் யாழ்ப்பாணத்திற்குள் நுழைந்த சிலநாட்களில் வெறித்தனமாக ஏற்படுத்திய பேரழிவின் சிறு வடுக்கள் மட்டுமே இவை! இந்த வளவிற்குள் எந்தப் பனையும் இதனால் சாய்ந்து விழுந்துவிடவில்லை! நிறைந்த வடுக்களோடும் நெடு நெடுவென்று கம்பீரமாய்த்தான் நிற்கிறது! முன் 'கேற்'றால் வீட்டினுள் நுழைபவர்களை 'சென்றிப் பொயின்ற்'ல் இருப்பவன் முழுமையாகக் காணமுடியாது. ஆனால் வருபவர் வீட்டின் நடு 'ஹோலி'னுள் நுழைந்துவிட்டால், பின் வாசலூடாய் பைனாகுலர் மூலம் மிகத் தெளிவாய்க் காணலாம்.

என் சிநேகிதி அபி, பெரிய ஓலைத்தொப்பியும் கவர்ச்சியான உடையும் அணிந்துகொண்டு அழகான சைக்கிளில் வந்திறங்கிக் கதைத்துவிட்டுப் போவாள். அவளின் கைப்பையினுள் ஏகப்பட்ட கடுதாசிகள், குறிப்புகள் இருக்கும். உடம்பின் ஒரு பகுதியில் 'சயனைட்' குப்பி இருக்கும்! பின்புறம் சமையலறைப் பக்கமாய் அவள் வரும்போது 'சென்றிப் பொயின்ற்'ல் இருப்பவன் தலையை வெளியே நீட்டி கண்ணடித்துச் சிரிப்பான்; களிப்பில் கையசைப்பான்!

எனக்கு இதயம் படபடத்துக் கொண்டேயிருக்கும்! அவள் வெகு சாதாரணமாய், அண்ணரின் கதையிலிருந்து ஆஸ்பத்திரிக்கதைவரை பரிமாறிவிட்டு, தேவையானவற்றை சேகரித்துக்கொண்டு சிரித்தவாறே போய்விடுவாள்! 'போகிறாளே' என்று மனதிற்குள் ஏக்கமாயும் இருக்கும்; போனபின் ஏனோ ஆறுதலாயும் இருக்கும்.

வீடு வீடாகச் சோதனை நடக்கிறபோதும் இந்த ரெயில்வே பகுதிக்குள் மட்டும் யாரும் சோதனை போட் வருவதில்லை என்று இறுமாப்புடன் இருந்த எமக்கு ஒருநாள் காத்திருந்தது!

அது ஒரு சுட்டெரிக்கும் வெயில்நாள்! 'சென்றிப்பொயின்ற்' நோக்கி யாரோ உற்றுப் பார்த்திருக்கிறார்கள். அடுத்த நிமிடம் அதற்கருகாக 'கிறனைற்' குண்டொன்று வெடித்திருக்கிறது! வந்தவனின் குறி தப்பிவிட்டது! வேலியோடு நின்ற சீனிப்புளி மரத்தின் கிளைகளுக்கு மட்டும்தான் சேதம்! ஸ்ரேசன் பகுதி முழுவதும் மிருகத்தனம் தலைதூக்குவதற்கு இது ஒன்று போதுமே! 'திபு திபு' வென்று எமது பனம் வளவிற்குள் பச்சைப்புழுக்களாய் அவர்கள்! 'சட சட' வென்று காற்றைக் கிழிக்கும் இரைச்சலுடன் துப்பாக்கி வேட்டுக்கள்! வீதியால் போய்க் கொண்டிருந்த அப்பாவிகள் பச்சை உடைக்காரரால் பன்னாடையாக்கப்படும் அகோரம், ஈனஸ்வரமாய் நீண்ட நேரம் கேட்டுக்கொண்டிருந்தது!

எல்லாம் ஓய்ந்தபின், ஜன்னலினூடாய் வளவைப் பார்த்தேன். மருந்துவெடி வீசியது! அடிவயிற்றுக்குள் இன்னமும் அச்சம் அப்பிக்கிடப்பதான உணர்வு! கரும் பனைகளில் புதிய குழிகள் தோன்றியிருந்தன. சன்னங்களின் பல வெற்றுக்கவசங்கள் மரங்களின் அடியில் ஆங்காங்கே சிதறியபடி, ஆயினும் அழகிய் விசிறிகளென, வளவு முழுவதும் பசுமையாய்ப் போர்த்தியிருக்கும் பனைகள் எல்லாம் கெக்கலித்துச் சிரிப்பதுபோல் காற்றில் அழகாய் அசைந்து கொண்டுதானிருந்தன!

ஒரு உற்சாகமான வார இறுதிநாள், ரெயில்வே தொழிலாளிகளை அப்பா அழைத்திருந்தார். அவர்கள் புற்கள் நிறைந்த வளவைத் துப்பரவாக்கத் தொடங்கிவிட்டார்கள். வீடு முழுவதும் பச்சைப்புற்களினதும் காயம்பட்ட வடலி இலைகளினதும் மணம் பொங்கிப் பரவிக்கொண்டிருந்தது.

மேஜர் முக்தயர், ஏணிப்படிகளில் ஏறி நின்றவாறே வளவிற்குள் நின்ற அப்பாவுடன் வெகு சந்தோஷமாய் கதைத்துக் கொண்டிருந்தான். அப்பா, வளவைத் துப்பரவு செய்விப்பது அவனுக்குப் பெருமகிழ்ச்சி என்று விளங்கியது. புற்களினூடாக வேலிவரை யாராவது தவழ்ந்து வந்து விடுவார்களோ என உள்ளூர ஊறிக்கிடந்த அச்சத்திற்கு, அது பெரிய ஆறுதல்தானே.

துப்பரவு செய்யப்பட்ட வளவிற்குள், நிறையப் பனங்கொட்டைகள் ஆங்காங்கே புதைந்து, புதிதுபுதிதாய் முளை விட்டிருப்பது தெரிந்தது. அப்பா, அவற்றைப் பிடுங்கி எடுக்கச் சொல்லவில்லை. அவை நெடும் பனையாகும் அழகைக் கற்பனையில் நான் அடிக்கடி கண்டு களிப்பேன்.

வைகாசி மாதத்து முதல் நாள், நல்ல வெயிலும் கூடவே சுழன்றடிக்கிற காற்றுமாயிருந்தது. சைக்கிள் 'றிம்' இல் சுரீர்சுரீரென்று மணற்புழுதி வந்து மோதிக் கொண்டிருந்தது. நான் அலுவலகத்தில் 'ரைப்' செய்ய வேண்ணையிருந்த அனைத்துப் பிரதிகளையும் முழுமையாகச் செய்து முடித்துவிட்ட திருப்தியுடன், ஆசுவாசமாய் சைக்கிளில் வந்திறங்கினேன். வீட்டினுள் பரபரப்பாக ஆளரவம்! வல்லைவெளி தாண்டி வந்த வடமராட்சி உறவினர்கள் சிலர் என்னைக் கண்டதும் எட்டிப் பார்க்கிறார்கள். ஏதோ வித்தியாசமாய்த்தான் இருந்தது!

அம்மா அழுத கண்ணீருடன் படியிறங்கி ஓடி வந்தா.

'தேவகி... தேவகி...' என்ற விம்மலுடன் என்னைக் கட்டியணைத்து ஓசையை அடக்கி ஒப்பாரி வைத்தா. எனக்கு எல்லாம் விளங்கிவிட்டது!

'ஊரில் என் தம்பி போரிட்டு மாண்டான்...' என்று மார்தட்டிப் புலம்பவோ, தலையைப் பிசைந்து குழறவோ

(தொடர்ச்சி 20–ம் பக்கம்)

சந்திரா ரவீந்திரன்

# தலைவரின் செவ்விகள்

(12)

## முரசின் சிறப்பு ஆவணம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

கேள்வி: ஆனால் விடுதலைப் புலிகளின் இயக்கம் ஒரு இராணுவ அமைப்பு அல்லவா?

பதில்: இன்று, விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு வெகுசன அமைப்பாக உருவாக்கம் பெற்றுள்ளது. எமது மேதின எழுச்சிப் பேரணியிலிருந்து இந்த உண்மை உங்களுக்குப் புரிந்திருக்கும். ஒரு போர்ச் சூழ்நிலை



யில், சிங்கள இராணுவ அச்சுறுத்தல்களையும் மீறி, கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் மக்கள் கொடும் வெய்யிலையும் பாராது அணிதிரண்ட நிகழ்வு எதைக் காட்டுகிறது? மக்கள் எமது இயக்கத்திற்குப் பின்னால் அணிதிரண்டு நிற்கிறார்கள் என்பதை அல்லவா காட்டுகிறது! நாம் ஒரு வெகுசன இயக்கமாக, மக்கள் இயக்கமாக பலம்பெற்று வளர்ந்து வருகிறோம். நாம் ஒரு இராணுவ அமைப்பாக மட்டும் இயங்கினால், இப்படிப் பெரும் திரளாக மக்கள் எமது மேதினக் கூட்டத்திற்கு அணிதிரளமாட்டார்கள் அல்லவா?

கேள்வி: தேர்தல் நடைபெறப் போகிறது. அரசியல் கட்சிகள் மத்தியில் போட்டிகள் எழப்போகின்றன. இப்படியான ஒரு அரசியல் முறையில் எத்தகைய பிரச்சினைகள் உங்களுக்கு ஏற்படுமென நினைக்கிறீர்கள்?

பதில்: அரசியல் போட்டிகளை எதிர்கொள்ளும் ஆற்றலும் அனுபவமும் எமக்குண்டு. தாம் விரும்பியவர்களை மக்களே தெரிவுசெய்யட்டும். தமக்கு உகந்த தலைவர்களையும் மக்களே தேர்ந்தெடுக்கட்டும்.

★ ★ ★

### எமது விடுதலைப் போராட்டத்தின் ஓர் இருண்ட அத்தியாயம்

கொழும்பில் வெளியாகும் ஆங்கில வார இதழான 'சண்டே ரைம்ஸ்' ஏட்டிற்கு தலைவர் பிரபாகரன் அளித்த பேட்டியை இங்கு பிரசுரிக்கிறோம். இந்தப்பேட்டி 08.04.1990 இதழில் வெளியாகியது.

கேள்வி: இந்த யுத்தத்தில் நீங்கள் வெற்றி பெற்றுவிட்டீர்கள் என்றுதான் கருத வேண்டும். இந்த வெற்றி பற்றி உங்களது உணர்வலைகளை விபரிக்க முடியுமா?

பதில்: எனது மக்கள் பற்றியும், எனது தேசம் பற்றியும், எனது இயக்கம் பற்றியும் நான் பெருமிதம் கொள்கிறேன்.

கேள்வி: நீங்கள் தேர்தலில் பங்கு கொள்வீர்களா?

பதில்: இல்லை! நான் தேர்தலில் பங்குகொள்ளப்போவதுமில்லை. நிர்வாக அமைப்பில் பதவி, பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளப்போவதுமில்லை.

கேள்வி: உங்களது போராட்ட வரலாற்றில் ஒரு இருண்ட நாளாக எதைக் கருதுகிறீர்கள்?

பதில்: இந்திய இராணுவம் எமது தாயக மண்ணில் காலடி எடுத்துவைத்த தினத்தையே எமது போராட்டத்தின் இருண்ட நாளாக நான் கருதுகிறேன். எமது போராட்டத்தில் இந்திய இராணுவம் தலையீடு செய்தது ஒரு இருண்ட அத்தியாயம் என்றே சொல்லவேண்டும்.

கேள்வி: இந்தியத் தலையீட்டிற்கு நீங்கள் தயாராக இருந்தீர்களா? அல்லது அதனால் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தீர்களா?

பதில்: இந்திய இராணுவத் தலையீடு குறித்து நாம் அதிர்ச்சியும் அடையவில்லை, ஆச்சரியமும் கொள்ளவில்லை. இந்தியா இப்படியான தலையீட்டில் இறங்குமென நாம் எதிர்பார்த்தோம். இந்தியாவின் பூகோள - கேந்திர குறிக்கோள்கள் என்னவென்பதை நாம் நன்கு அறிவோம். இந்தியாவின் நோக்குகள் பற்றி நாம் முன்பே அறிந்து கொண்டதால்தான் இந்தியாவின் சவாலை நாம் எதிர்கொள்ள முடிந்தது.

கேள்வி: மிகவும் இறுக்கமான, மிகவும் கட்டுப்பாடான இராணுவ அமைப்பாக இயங்கிவந்த உங்களது இயக்கம் நெகிழ்ச்சியுடைய அரசியல் இயக்கமாக மாற்றமடையப் போவதில் ஏதாவது பிரச்சினைகள் எழலாம் என நீங்கள் கருதுகிறீர்களா?

பதில்: எமது இராணுவ அமைப்பு உருவாக்கம் பெற்றதற்கு அரசியல் புறநிலைகள் தான் காரணம். நாம் ஒரு அரசியல் இலட்சியத்திற்காகவே ஆயுதம் ஏந்திப்போராடுகிறோம். எனவே, அரசியலுக்கும் இராணுவத்திற்கும் மத்தியில் வேறுபாட்டை நாம் காண்பதில்லை. எமது அரசியல் இலட்சியத்தை நாம் அடைந்தபின்னர் இராணுவப் போராட்டம் ஒரு முடிவுக்கு வரும். அதனையடுத்து இராணுவ அமைப்பு தன்னிச்சையாகவே செயலிழந்து கலைந்துவிடும்.

கேள்வி: வட - கிழக்கில், உங்கள் மக்கள் மத்தியிலும், போராளிகள் மத்தியிலும் நீங்கள் ஒரு வீர புருஷனாக மதிக்கப்படுகிறீர்கள். உங்களைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: நான் எனது மக்களுக்காகப் போராடும் ஒரு விடுதலைப்போராளி.

# இந்திய இராணுவத்தின் பலம் என்ன? பலவீனம் என்ன?

★ ★ ★

### அபாரமான தன்னம்பிக்கையே எம்மிடமுள்ள பலமும் . பலவீனமும்

பிரபல சர்வதேச அரசியல் சஞ்சிகையான 'டைம்ஸ்' இதழுக்கு தலைவர் பிரபாகரன் அளித்த பேட்டியை இங்கு தருகிறோம். 09.04.1990 இதழில் இப்பேட்டி வெளியாகியது. பிரபல இந்தியப் பத்திரிகையாளரான அனிதா பிரதாப் முல்லைத்தீவுக் காட்டில் தலைவரைச் சந்தித்து இப்பேட்டியைக் கண்டார்.

கேள்வி: உலகத்தின் மூன்றாவது மிகப் பெரிய இராணுவத்தை எதிர்கொண்டு போராட உங்களுக்கு துணிவு பிறந்தது எப்படி?

பதில்: சிங்கள ஆயுதப் படைகள் கைது செய்த எமது தளபதிகளைவிடுதலை செய்ய, இந்தியா தவறிவிட்டதால் அவர்கள் தற்கொலைசெய்து மரணித்தார்கள். 'அவர்களது சாவால் பிறந்த வைராக்கியமே' என்னிடம் இந்திய இராணுவத்துடன் மோதும் துணிவை பிறப்பித்தது.

கேள்வி: இதிலிருந்து இந்தியா ஏதாவது பாடத்தைக் கற்றுக்கொண்டுள்ளது என நினைக்கிறீர்களா?

பதில்: எந்தவொரு பலம் வாய்ந்த இராணுவ சக்தியாக இருப்பினும், ஒரு மக்கள் இனத்தின் 'விருப்பிற்கு மாறாக' எதையும் பலவந்தமாக திணித்துவிட முடியாது என்ற பாடத்தை இந்தியா கற்றிருக்கலாம்.

கேள்வி: இந்த யுத்தத்தில் எவ்வகையான கெரில்லா யுக்திகள் உங்களுக்கு மிகவும் பயனை அளித்தது என்று சொல்லமுடியுமா?

பதில்: நாம் பாவித்த நிலக்கண்ணிகள் பெரும் வெற்றிகளைத் தந்தன. இதனால் இந்திய இராணுவம் பெரும் உயிர்ச் சேதத்தைச் சந்தித்தது.

கேள்வி: உங்களது கணிப்பீட்டில் இந்திய இராணுவத்தின் பலம் என்ன? பலவீனம் என்ன?

பதில்: அவர்களது பிரமாண்டமான ஆட்பலம்தான் அவர்களது பலமாகவும், பலவீனமாகவும் அமைந்தது. இந்திய இராணுவத்தின் ஆட்பலத்தால் எமக்கு பல சிக்கல்கள் எழுந்தன. எமது நடமாட்டம் பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டது. ஆனால் அதேவேளை, அவர்கள் பெரும் தொகையில் நகர்ந்ததால் அவர்களுக்குப் பெரிய அளவில் உயிர்ச் சேதம் ஏற்பட்டது. அத்துடன் பெரும் தொகையானபடையினருக்கு விநியோகம் செய்வதில் அவர்களுக்கு பெருமளவு நேரமும், பணமும், சக்தியும் விரயமாகியது. அத்துடன் இந்திய இராணுவத்திற்குப் போராடும் உறுதி இருக்கவில்லை. இதுவே அவர்களது இன்னொரு பெரிய பலவீனம். எதற்காக சண்டையிடுகிறோம் என இந்திய சிப்பாய்களுக்குப் புரியவில்லை. இவ்விடயத்தில் அவர்களுக்குப் பெரும் குழப்பம் இருந்தது. அவர்கள் தமிழர்களைப் பாதுகாக்க வந்தார்கள். பின்னர் தமிழர்களையே கொல்லும்படி பணிக்கப்பட்டார்கள். இது அவர்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தியது.

கேள்வி: விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பலம், பலவீனம்பற்றி உங்களது மதிப்பீடு என்ன?

பதில்: அதீத தன்னம்பிக்கைதான் எமது பலமும் பலவீனமாகவும் அமைந்தது. எமது போராளிகள் அதீத துணிச்சலுடன் மிகவும் ஆபத்தான செயற்பாடுகளில் இறங்கினார்கள். உதாரணமாக, தப்பிச்செல்ல வழிகள் இல்லாதபோதும் இந்தியப் படையணிகளை ஒழித்திருந்து தாக்கினார்கள். இத்தகைய நடவடிக்கைகளால் எமக்குப் பெரிய உயிர்ச்சேதம் ஏற்பட்டது. ஆனால் அதேவேளை, மிகவும் அபாரமான தன்னம்பிக்கையுடன் எமது போராளிகள் வியக்கத்தக்க வீர சாதனைகளையும் புரிந்திருக்கிறார்கள்.

கேள்வி: இப்பொழுது இந்திய இராணுவம் உங்களது மண்ணிலிருந்து வெளியேறிவிட்டது. ஆகவே மீண்டும் உங்களது வரலாற்று எதிரியான சிங்கள அரசுடன் நீங்கள் மோதுவது தவிர்க்க முடியாதது எனப் பலர் கருதுகிறார்கள். உங்கள் கருத்து என்ன?

பதில்: எமது மக்களுக்கு எதிரான அரச . ஒடுக்குமுறையானது நீண்ட வரலாற்றைக் கொண்டது. முன்பு தமிழர்கள் பேச்சுக்களை நடத்தினார்கள். ஆனால் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டார்கள். இந்தத் துரோகத் தனத்தின் விளைவாகவே தமிழரின் ஆயுதப்போரர்ட்டம் பிறந்தது. தமிழ் மக்களுக்கு எதிராக சிறீலங்கா அரசு மீண்டும் ஒடுக்குமுறையை ஆரம்பித்தால் நாம் மீண்டும் போராடத் தயங்கமாட்டோம். ஆயினும் இன்றைய சமாதான சூழ்நிலை தொடரும் என்றே நாம் நம்புகிறோம்.

(தொடரும்)

# கால நதிக்கரையில் மீள நினைக்கிறேன்

**1994 சித்திரை–வைகாசி மாத வெளியீடான 'வெளிச்சம்' வெள்ளி இதழில் 'கால நதிக்கரையில் மீள நினைக்கிறேன்' என்ற தலைப்பில் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களால் வழங்கப்பட்ட சிறப்புப் பேட்டி.**

கேள்வி: எமது தேசத்தில் இன்று நிலவும் விடுதலைப் போராட்டச் சூழலில் கலை இலக்கியத்தின் பங்கு எவ்வாறு அமைய வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

பதில்: கலை, இலக்கியங்கள் இன்றைய போராட்ட வாழ்வைச் சித்தரிப்பதாக அமையவேண்டும். இன்றைய காலத்தை உருவகிப்பதாக அமைய வேண்டும். இன்றைய வரலாற்றுப்போக்கை பதிவுசெய்வதாக இருக்கவேண்டும்.

கலையும், இலக்கியமும் வாழ்க்கையை கருப்பொருளாகக் கொண்டவை. வாழ்க்கையைத் தரிசித்து நிற்பவை. வாழ்வனுபவத்தைக் குறியீடு செய்பவை. இன்று எமது வாழ்வும், வாழ்வனுபவமும், விடுதலை வேண்டிய ஒரு போராட்டத்துடன் பிணைந்து நிற்கிறது. இந்தப் போராட்டச் சூழ்நிலையே எமது வாழ்வை நிர்ணயிப்பதாகவும் அமைந்துவிட்டது. எனவே, எமது கலை, இலக்கியங்கள் இந்தப் போராட்ட வாழ்வின் தன்மைகளை, அந்த வாழ்வில் பிறக்கும் ஆழமான அனுபவத் தழும்புகளை, உணர்வுகளை சித்தரித்துக் காட்டவேண்டும். அதேவேளை விடுதலை என்ற உன்னதம் பற்றி விழிப்புணர்ச்சியைத் தோற்றுவிப்பதாக அமையும்போது அவை சிறப்புப் பெறுகின்றன. மானிட விழுமியங்களை வலியுறுத்தி, மனித மேம்பாட்டைக் குறிக்கோளாகக்கொண்ட படைப்புக்களே சிகரத்தை எட்டுகின்றன. தமிழீழப்போராட்டச் சூழலில் இன்று மையம் கொண்டிருக்கும் இலக்கிய எழுச்சி, எதிர்காலத்தில் அதியுன்னதமான ஆக்க இலக்கியங்களைப் படைத்து உச்சங்களைத்தொடும் என்று திடமாக நம்புகின்றேன்.

(தொடரும்)

இவ் வாரம் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடும் **செல்வி அரிச்சந்திரன் திவ்யாவை** பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.




## கவிதை முற்றம்

### பூனையார்



பந்தை உருட்டி ஓடுவார்
பக்கம் வந்தே தூங்குவார்
வந்து காலை நக்குவார்
வாலைச் சுழற்றிக் குந்துவார்

மரத்தின் மேலே ஏறுவார்
மெல்லக் குதித்து இறங்குவார்
குரங்கு போலும் தாவுவார்
குழந்தைபோலும் கத்துவார்



கோபம் வந்தால் சீறுவார்
கொதியில் நகத்தால் கீறுவார்
பார்த்து இருந்து பாய்வதில்
புலிக்குத் தம்பி இவரல்லோ!

- அசலை

## அறிவியல் முற்றம்

**சொற்சிதறல் எண் - 40**

பிள்ளைகளே! சொற்களைக் கண்டுபிடிக்க முயன்றுபாருங்கள். முடியாவிட்டால் விடை அடுத்தவாரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 (X) | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 (X) |
| 11 (X) | 12 (X) | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 (X) | 22 | 23 | 24 | 25 |

**இடமிருந்து வலம்**

1. 1-2 மிகப்பெரிய இலையுடைய மரம். இனிமையான கனியும் தரும்.
2. 4-5 ஒரு பறவையினம். இதில் வெள்ளை நிறம், சமாதானத்தின் சின்னமாகக் கொள்ளப்படுகின்றது.
3. 6-9 அதிக வாசனை தரும் ஒரு மலர். வெள்ளையாக இருக்கும். இங்கு எழுத்துக்கள் குழம்பியுள்ளன.
4. 13-15 குழந்தை என்றும் சொல்லலாம்.
5. 16-20 போட்டி என்றும் சொல்லலாம். இங்கு எழுத்துக்கள் குழம்பியுள்ளன.
6. 22-25 அதிக விசமுள்ள ஒரு பாம்பு. இங்கு எழுத்துக்கள் வலமிருந்து இடமாக உள்ளன.

**மேலிருந்து கீழ்**

7. 1-6 ஒரு மரம். இது வெற்றியோடு இணைந்து வரும்.
8. 2-7 இதை வானம் பொழியும். இங்கு எழுத்துக்கள் தலைகீழாக உள்ளன.
9. 8-18 கடிதம் என்றும் சொல்லலாம். இதை எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்ப்பர். இங்கு எழுத்துக்கள் தலைகீழாக உள்ளன.
10. 4-24 தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காக வீரமுடன் போராடும் படை.
11. 15-25 இது என்றால் படையும் நடுங்கும்.

**சொற்சிதறல் எண் முப்பத்தி ஒன்பதின் விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| ந | தி | | அ | வை |
| பி | ஞ் | சு | மே | சை |
| | | த் | ச | து |
| ப | ர | த | ன் | ந் |
| றை | | ம் | ண | ப |

## அறிஞர் முற்றம்

### விஞ்ஞானி நியூற்றன்

இங்கிலாந்து நாட்டிலே நியூற்றன் என்ற பெயருடைய சிறுவன் ஒருவன் இருந்தான். அவனது தந்தை இறந்துவிடவே, தாயாருடன் வாழ்ந்து வந்தான்.

இளமையில் அவனுக்கு கல்வியில் அதிக நாட்டம் இருக்கவில்லை. பட்டம், காற்றாடி இயந்திரம் ஆகியவற்றைச் செய்து விளையாடினான், அத்துடன் சித்திரங்களும் நன்றாக வரைந்தான்.

அவனது தாயாரிடம் தோட்டம் ஒன்று இருந்தது. அங்கு வேலை செய்யவும் அவனுக்கு விருப்பமில்லை. எனவே, அவனது தாயார் அவனை மேற்படிப்புக்கு அனுப்பினார்.

வளர்ந்துவிட்ட நியூற்றன் மேற்படிப்பில் கணிதத்தை விரும்பிக் கற்றார்.

அவர் விடுமுறையில் வீட்டிற்கு வந்தபோது, ஒருநாள் தோட்டத்திற்குச் சென்றார். வெயில் கடுமையாக இருந்ததால், அங்கே அப்பிள் மரம் ஒன்றின் நிழலில் படுத்தார். அப்பொழுது, அப்பிள் பழம் ஒன்று அவரது தலையில் விழுந்தது.

அவர் சிந்திக்கத் தொடங்கினார்.



'இந்த அப்பிள் பழம் ஏன் கீழே விழுந்தது, மேலே போயிருக்கலாமே, இது எவ்வாறு நிகழ்கிறது' - என்று அவர் யோசித்தார்.

இதற்குக் காரணம் பூமியின் ஈர்ப்புச் சக்தியே என்பதைக் கண்டுபிடித்தார்.

இந்தக் கண்டுபிடிப்பினாலே விஞ்ஞானம் வளர்ந்தது. அவர் சேர் ஐசாக் நியூற்றன் என்று புகழ் பெற்றார். பெரிய விஞ்ஞானி ஆனார்.

பிள்ளைகளே, நியூற்றனின் சிந்தனையால் கிடைத்த பரிசைப் பார்த்தீர்களா?

நாமும் அவ்வாறு சிந்திக்கப்பழகவேண்டும். எல்லாவற்றையும் ஏன், எதற்கு, எவ்வாறு என ஆராய வேண்டும். அப்படிச் செய்தால் நாமும் முன்னேறலாம். பரிசும் புகழும் பெறலாம்.

## கடித முற்றம்



**சு. சாருஜா**
*தமிழ்ச்சோலை ஸ்ராஸ்பூர்க், பிரான்ஸ்*

அன்புள்ள அம்மப்பா, அம்மம்மா ஆகியோருக்கு, நாங்கள் நலம், உங்கள் நலனுக்கு இறைவனை வேண்டுகிறேன்.

மேலும் இத்துடன் படம் அனுப்புகின்றேன் பார்க்கவும். அம்மம்மாவின் பிறந்தநாளுக்குத் தொலைபேசி கதைத்தபடியால் எழுதுவதற்கு ஒன்றும் இல்லை. நீங்கள் இக்கடிதத்திற்குப் பதில் போட்டால்த்தான் நான் திரும்பவும் கடிதம் எழுதுவேன். நான் தமிழும் படிக்கப்போகிறேன்.

இங்கு அப்பா அம்மா தனுஜா ஆகியோர் சுகமாக இருக்கிறார்கள். இத்துடன் முடிக்கிறேன்.

உடன் பதில் போடவும். உங்கள் அன்புப் பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அன்புப் பேத்தி.

**செல்வன் ஜெ.ஜெனார்த்தன்**
**இடம்: நோர்வே**
**வயது: 13**

சிறுகதை படிப்போம்

நான்கு எருதுகள் இருந்தன.
மிகவும் ஒற்றுமையாய் வாழ்ந்தன.
அங்கே சிங்கம் ஒன்று வந்தது
எருதுகள் எதிர்த்துச் சிங்கத்தைத் துரத்தி
பல நாள்கள் கடந்து சென்றன.
எருதுகள் பகைத்துக் கொண்டன.
மறுமுறை சிங்கம் வந்தது
எருதுகளை ஒவ்வொன்றாகக் கொன்றது.
ஒற்றுமையே உயர்வு தரும்

சேர்ந்து வாசிப்போம்

குமரன் காலையில் பாடசாலைக்குச் சென்றான்
வீதியில் பெரிய மரம் ஒன்று நின்றது.
மரத்தின் கீழ் முதியவர் ஒருவர் இருந்தார்.
அவர் கண் தெரியாத குருடர்.
குருடர் தெருவைக் கடக்க விரும்பினார்.
குமரன் அவருக்கு உதவி செய்தான்.
குருடர் குமரனைப் புகழ்ந்தார் நன்றி கூறினார்.

**செல்வன் ஜெ.ஜெகன்**
**இடம்: நோர்வே**
**வயது: 13**

## மணலாறு




# விமானப் படையின் பெரும் தாக்குதல் இலக்காகிய சதீஸ் முகாம்

கஞ்சிக்கொடியாறு பகுதியில் காலையிலேயே மோதல் உக்கிரமாக தொடங்கிவிட்டிருந்தது. வீரச்சாவை தழுவிக்கொண்ட போராளிகள் சிலரின் உடல்கள் அப்பகுதியில் கிடந்தன. அவற்றை கைப்பற்ற படையினர் முயற்சித்துக் கொண்டிருக்க, படையினர் கைகளில் அவ் வீரர்களின் உடல்கள் அகப்பட்டுவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்த போராளிகள், படையினரை மிகவும் நெருங்கிச்சென்று அதிர்ச்சியூட்டும் சண்டை ஒன்றை ஏற்படுத்தியிருந்தனர். ஒரு கைகலப்பு சண்டைபோன்று ஒரு சில யார் இடைவெளிகளுக்குள் நின்று போராளிகள் படையினர், மீது தாக்குதலை தொடுத்தனர். இவ் அதிர்ச்சியூட்டும் தாக்குதலினால் நிலைகுலைந்த படையினர் சிங்களத்தில் கத்தியபடியே சிப்பாய்களை இழந்த நிலையில் பின்வாங்கி ஓடத் தொடங்கினர். படையினரை அடித்துவிரட்டி தமது சக போராளிகளின் உடல்களை மீட்டெடுக்கும் பணியில் தீரத்துடன் போராடிய லெப். அப்பி (முத்தையா கணேஷ் - முருங்கன் மன்னார்) இம் மோதலில் வீரச்சாவை தழுவிக் கொண்டார். செப்டெம்பர்-6ம் திகதி வரை படையினரை காட்டினுள் நுழையவிடாது தடுத்துநிறுத்திப் போராடிய சண்டைகளில் சஞ்சித்குமார் (நல்லதம்பி பாலகுமார்- 3ம் வட்டாரம் புங்குடுதீவு யாழ்.), 2ம் லெப். பிரேம்குமார் (கந்தையா தயாபரன்- கரவெட்டி யாழ்.), ஜமால் (பவித்துரை பாலசிங்கம்- பன்குடாவெளி மட்டக்களப்பு), நிதி (காத்தமுத்து சிவகுமாரன்- இலுப்பையடிச்சேனை, மட்டக்களப்பு) ஆகிய போராளிகள் மணலாற்றை காத்துநின்று வீரச்சாவை தழுவிக்கொண்டனர்.

மின்னல் எதிர்ச்சமரில் பெண் போராளிகளின் அணியும் தமக்கு வழங்கப்பட்ட பகுதிகளில் தாக்குதல்களை திறம்பட நடாத்திக் கொண்டிருந்தனர். இவர்களுக்கு உதவிவழங்கும் அணிக்கு பொறுப்பாக லெப்சிங்கர் (கந்தசாமி ஓவியராஜ்- கிரான் மட்டக்களப்பு) என்ற போராளி நியமிக்கப்பட்டிருந்தான். அடர்ந்த காட்டினுள் சண்டை எவ்விடத்தில் நடக்கின்றது என்பதை தெரிந்து கொள்ள முடிந்தாலும், இராணுவத்தினர் எவ்விடத்தில் நிற்கின்றார்கள் என்பதை கண்டுபிடிப்பது இலகுவான காரியமல்ல. அதனைவிட படையினர் வீசும் குண்டுகள் இலக்கின்றி எங்கெல்லாமோ விழுந்துகொண்டிருக்கும். இவற்றிக்கு மத்தியிலும் முன்னணிக் களமுனைக்கு சென்று போராளிகளுக்கு தேவையான உதவியை உடனுக்குடன் வழங்குவதில் சிங்கர் துணிவுடன் செயற்பட்டவன். 12.09.91 அன்று மகளிர் படையணியொன்றை தாக்குதல் களமுனையொன்று அழைத்துச் சென்றான். படையினர் எங்கே பதுங்கியிருக்கின்றார்கள் என்பதை அறியமுடியாதநிலை. அதனால் போராளிகளின் அணியை ஒரு இடத்தில் நிறுத்திவிட்டு, தான் மட்டும் தனியாக படையினர் நிலையை அவதானித்துவர முன்னேறிச் சென்றான். ஆனால் பதுங்கியிருந்த படையினரின் துப்பாக்கிகள் சிங்கரை நோக்கி இயங்கத் தொடங்கின. விடுதலைக்காக ஓய்வின்றி ஓடிய அவன் குருதியால் மணலாற்று மண் நனைந்தது. தனக்கு வழங்கிய பணியை தனது உயிரையும் பொருட்படுத்தாது திறம்படச் செய்து அத்தனை பெண் போராளிகளையும் காப்பாற்றிவிட்ட பெருமையுடன் சிங்கர் விழிகளை மூடிக் கொண்டான்.

* * *

## மின்னல் - 2

மின்னல்-1 இராணுவ நடவடிக்கை எந்தவொரு இலக்கும் நிறைவேறாமலே ஓரிரு நாட்கள் அமைதிக்குப்பின் மின்னல்-2 என்ற பெயருடன் மீண்டும் முனைப்புக் கொண்டது. மணலாற்றுக் காட்டில் என்றுமே நடைபெற்றிராத பெரும் தாக்குதலாக மின்னல்-2 விஸ்வரூபம் பெற்றிருந்தது. விமானக் குண்டு வீச்சுக்களும், எறிகணைத் தாக்குதல்களும் தினமும் பாரிய அளவில் நடாத்தப்பட்டன. சராசரியாக நாளொன்றுக்கு நூற்றுக்கு மேற்பட்ட நேபாம்குண்டுகள் விமானங்கள் மூலமும், எழுநூறுக்கு மேற்பட்ட குண்டுகள் ஆட்லெறி, டாங்கிகள் மற்றும் மோட்டார்கள் மூலமும் காட்டினுள் வீசப்பட்டன. தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட இக் குண்டுவீச்சுக்களுக்கு மத்தியில், படையினரின் இடைவிடாத துப்பாக்கி வேட்டுக்களும் மழை போல் பொழிந்து கொண்டிருந்தன. இவ்வளவுக்கும் மத்தியில் நின்றுகொண்டுதான் போராளிகள் படையினரின் முன்னேற்றத்தை முடக்கிக் கொண்டிருந்தனர். காயமடைந்த போராளிகள் கூட தமது காயங்களையும் பொருட்படுத்தாமல் படையினர் காட்டை கைப்பற்றவிடக் கூடாது என்ற உறுதியுடன் களமாடினார்கள். படையினரின் பலவீனமான முனைகளை வேவு பார்த்து, படையினர் மத்தியில் இழப்புக்களை அதிகரிக்கச் செய்யும் தாக்குதல்களை மேற்கொண்டனர். பலத்த இழப்புக்களின் மத்தியிலும் சிங்களப் படைத் தலைமை மின்னலை தொடர்ந்து நீடிக்கவே முனைந்தது.

மின்னல் நடவடிக்கை ஆரம்பமாகிய 19வது நாள் (16.09.91) ஒரு பெரும் சமருக்கு முகம் கொடுக்க போராளிகள் தயாராகி விட்டிருந்தனர். போராளிகளின் இன்னொரு முன்னணி காவல் நிலைய முகாமாகிய 'சதீஸ் முகாமை' கைப்பற்ற சிங்களப் படை, கடும் முயற்சி எடுக்கத் தொடங்கியிருந்தது. ஆனால் போராளிகளின் மனோபலமான தாக்குதல்களின் முன்னால் படையினர் எடுத்த முயற்சிகள் எவையும் கைகூடவில்லை. காட்டினுள் படையினர் ஒரு அடி நுழைவதென்றாலே அதற்கு என்னவிலை கொடுக்க வேண்டும் என்பதை சிங்களப் படைக்கு போராளிகள் அதிகளவில் உணர்த்தியது இம் முகாம் சமரிலேயே! இருநூறுக்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதுடன், எண்பதுக்கும் மேற்பட்ட படையினர் மிதிவெடிகளினால் தமது கால்களை இழந்தனர் என சிங்களப்படைத் தரப்பே தகவல் தெரிவித்தது என்றால், இதன் உண்மை நிலை எவ்வாறு இருந்திருக்கும் என்பதை உணர்ந்துகொள்ள அதிகநேரம் தேவையில்லை.

தமக்கு எற்பட்ட உண்மையான இழப்புக்களை வெளியுலகுக்கு மட்டுமல்ல தமது சிப்பாய்களுக்கே தெரியாமல் மூடிமறைத்தாலும், தங்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்களுக்கு பரிகாரம்தேட சிங்களப்படைத் தலைமை பல வழிகளிலும் முயன்றது. படையினரின் முன்னேற்றத்திற்கு பெரும் தடையாக இருப்பது புலிகளின் முன்னணி காவல்நிலைய முகாங்களே என்பதை உணர்ந்து கொண்ட சிங்களப்படைத் தளபதிகள் விமானப்படையை துணைக்கழைத்து, புலிகளின் முன்னணி காவல் நிலைய முகாங்களான சுகந்தன் முகாம், சதீஸ் முகாம் ஆகியவற்றை தாக்கியழிக்குமாறு உத்தரவிட்டனர். விமானப்படையின் தாக்குதலுக்கு உதவியாக பீரங்கிப்படைகளும் இணைந்து தாக்குதலை தொடுத்தன. இதனால் புலிகளின் இவ்விரு முகாங்களையும், அதனை சுற்றியுள்ள பகுதிகளையும் சேர்ந்து சுமார் 180 ஏக்கர் பரப்பளவு பிரதேசத்தையே குண்டுகளால் எரித்தழித்தனர்.

இதனை தொடர்ந்து பலத்த இழப்புக்களுடன் சதீஸ் முகாமை நோக்கி முன்னேறிய படையினர், உலகில் எந்தவொரு நாகரிகமற்ற படையினர் கூட செய்யாத மிகவும் கீழ்த்தரமான செயலாக மாவீரர்களின் துயிலும் இல்லங்களையே குண்டுவைத்து தகர்த்து, 'தமது இயலாமையின் வெறித்தனத்தை' வெளிக்காட்டினர். சிங்களப் படையினர் மின்னலென மேற்கொண்ட அனைத்து மூர்க்கத்தனமான தாக்குதல்களையும் தடுத்துநிறுத்தி மணலாற்று மண்ணை காத்துநின்ற போராளிகளான காவியநாயகன் (மணியம் சிவஞானம்- கொக்குத்தொடுவாய் மணலாறு), பிரதீப் (பத்மநாதன் இலட்சுமணன்- கோப்பாய் யாழ்), வாணன் (ஆறுமுகம் கணேசமூர்த்தி- மாவடிச்சேனை மூதூர்), 2ம் லெப்.கந்தசாமி (வேலுப்பிள்ளை மகேந்திரன்- பருத்தித்துறை யாழ்), கப்டன் வில்மட் (கணபதிப்பிள்ளை எதிர்மன்னசிங்கம்- களவாஞ்சிக்குடி மட்டக்களப்பு), ஈஸ்வரன் (புஸ்பராசா கஜேந்திரன்- சித்தன் கேணி, யாழ்.), கல்கத் (மார்க்கண்டு மதனரூபன்- புத்தூர் யாழ்.), லெப்.டொமினிக் (நடேசன் குமரேசன் நீர்வேலி யாழ்.), கப்டன் சங்கிலி (கதிரமலை அமரசிங்கம்- கொக்கட்டிச்சோலை மட்டக்களப்பு), லெப்.வசந்தன் (நடராசா ரவீந்திரன் மன்னார் வீதி வவுனியா), கப்டன் காசன் (அல்லிராசா யோகேந்திரன்- பள்ளிக்குடா பூநகரி) ஆகிய களங்கள் பல கண்ட போராளிகள் 16.09.91 நடைபெற்ற இம் மோதல்களில் வீரச்சாவைத் தழுவி மணலாற்றின் வரலாற்றில் பதிவானார்கள்.

காட்டினுள் ஐந்நூறு போராளிகளே ஒளிந்திருக்கின்றார்கள். அவர்களையும் அழித்துவிட்டால் போர் முடிந்துவிடும் என கூறிக்கொண்டு இருபது நாட்களாக 5,000ற்கும் மேற்பட்ட சிங்களப்படைகள் அனுபவம்மிக்க பல தளபதிகள் வழிகாட்டியும் கூட உள்நுழைய முடியாமல் திண்டாடின. இருநூறுக்கும் மேற்பட்ட படையினரை இழந்து ஆயிரக்கணக்கான படையினரை படுகாயங்களுக்கு உள்ளாக்கி அடிமேல் அடியாக நகர்ந்து இருபது நாட்களில் ஒரு சிறு பகுதியையே கைப்பற்றினர். 17.09.91 அன்று முன்னேற முனைந்த படையினரை தடுத்து நிறுத்தி, சிங்களப்படையின் மனபலத்தை தகர்ந்தெறிந்து போராடிய குகநேசன் (ஆறுமுகம் ராசன்- சித்தாண்டி, மொறக்கொட்டாஞ்சேனை), மகான் (முருகுப்பிள்ளை தியாகராசா- வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்), கப்டன் பீற்றர் (கணபதிப்பிள்ளை அரியநாயகம் முனைக்காடு, கொக்கட்டிச்சோலை) ஆகிய போராளிகள் வீரச்சாவை தழுவிக்கொண்டனர்.

மின்னலின் நாட்கள் நீடித்துக் கொண்டிருந்த இதேவேளை, லெப்.கேணல் திலீபனின் நான்காவது ஆண்டு நினைவு நாளும் நெருங்கிக் கொண்டிருந்தது.

(தொடரும்)

எஸ்.தீரன்

## மின்னலில் விதையான மாவீரர்கள்



ஈஸ்வரன் | லெப். இந்திரன் | கப். கண்ணன் | 2ம் லெப்.கந்தசாமி | குகநேசன் | மகான் | பரணி | கப். வில்மட்

# மூன்றாவது சினிமா

# தலித் சினிமா மாற்றுச் சினிமா

## யமுனா ராஜேந்திரன்

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

II

சமீப காலத்தில் தலித் சினிமா பற்றிய கோட்பாட்டு உருவாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தலித் சினிமா கோட்பாட்டு உருவாக்கதாரர்களாக அ.ராமசாமி, அழகரசன் போன்றோரை நாம் குறிப்பிடமுடியும். ஊடகம் பத்திரிகையிலான அவர்களது கட்டுரைகள், குறிப்பாக கமல்ஹாஸன் பற்றிய கட்டுரை, பிராமண இயக்குநர்களின் படங்களின் பற்றிய கட்டுரைகளை இத்தகைய நோக்குக் கொண்டவை எனலாம்.*1 இதுவன்றி உதிரியாக அ.மார்க்ஸ் தனது முஸ்லீம் மக்கள் பற்றிய பிரசுரம் ஒன்றில் பாலச்சந்தர் மணிரத்தினம் பற்றிக் குறிப்பிடுகிறார்.*2 ரவிக்குமார், எடிட்டர் லெனினின் 'நாக்அவுட்' பற்றி ஆவேசமான விமர்சனமொன்றை எழுதியிருக்கிறார்.*3 தமிழ்த்திரைப் படங்களில் தலித் மக்கள் சித்தரிக்கப்பட்ட விதம் குறித்து தனது அபிப்பிராயங்களை பதிவு செய்திருக்கிறார், M.இருதயராஜ்.*4 இவரது கட்டுரையையொட்டி தமது ஆட்சேபங்களைத் தெரிவித்திருக்கிறார்கள் இரா. கதைப்பித்தன், யாத்ரிகன் போன்றோர்.*5 இதுவன்றி தலித் சினிமா அமர்வு உள்ளிட்டு இரண்டு நாட்கள் கும்பகோணத்தில் நடந்த சினிமா ஆய்வரங்கக் குறிப்புகளை பதிவு செய்திருக்கிறார் மா.ச. மதிவாணன்.*

மேற்கண்ட கட்டுரைகளையும் குறிப்புக்களையும் அடியொற்றி எனது அவதானங்களைப் பதிவு செய்வதே இக்கட்டுரைத் தொடரின் நோக்கமாகும்; தலித் மக்கள் சித்தரிப்பு பற்றிய வரலாற்று நோக்கு, விமர்சன அணுகுமுறை, நட்புச் சக்திகள் எதிர் சக்திகள் போன்றவை குறித்த அடையாளப்படுத்தலாகவும் எனது அபிப்பிராயங்கள் அமையும்.

1. கும்பகோணத்தில் நடைபெற்ற இருநாள் சினிமாக் கருத்தரங்கின் விவாதங்கள் கீழ்க்கண்ட விதங்களில் அமைகிறது:

I. சினிமா அமைப்பின் கட்டுமானம்: ரசனையை உருவாக்குவது யார்?

II. பார்வையாளர் மனோபாவம் எவ்வாறு உருவாகிறது?

III. சினிமாவில் ஆதிக்கம் செய்பவர் எவர்?

IV. (a) தேசபக்தி மரபினர் சினிமா
(b) பகுத்தறிவு மரபினர் சினிமா

V. சினிமாவில் பெண்கள் சித்தரிப்பு; உடலின் அழகியல்

VI, பெண் பார்வையாளர் மனோபாவம்: உருவாக்கம்

VII. (a) தலித்துகள் மீதான சினிமா வன்முறை
(b) ஒடுக்கப்படுதலையே சித்தரிக்கிறது
(c) எழுச்சியை மறுக்கின்றன.

VIII. அரசியல் விடுதலைக்கான கருவியாக சினிமா ஆக வேண்டும்.

2. தலித் திரைப்படங்களில் தலித் மக்கள் சித்தரிப்புப் பற்றிய இ. இருதயராஜின் அபிப்பிராயங்கள் இவ்விதங்களில் இருக்கிறது.

I. சினிமா, பார்ப்பனர்களின் கையிலும், பார்ப்பன மதிப்பீடுகளையும், கருத்தியலையும் உள்வாங்கிக்கொண்டவர்களின் கையிலும் உள்ளது.

II. தலித் சமுதாயத்திற்காக பரிந்துபேச தலித் திரைப்பட தயாரிப்பாளரோ அல்லது இயக்குநர்களோ அதிகம் இல்லை.

III. 'தியாகபூமி' போன்ற தேசபக்த மரபினரின் படங்கள் தாராளவாத மதிப்பீடுகளை முன்வைத்தது. (உ+ம்: கோயிலுக்குள் நுழைதல்)

IV. தி.மு.க. பாரம்பரியத்தினர் சமூக மாற்றத்துக்கு வழிவகுக்காமல் பாராளுமன்ற அதிகாரத்திலேயே குறியாக இருந்தனர்.

VI. எம்.ஜி. ஆர். தலித் மக்களின் மீட்பாளராக சித்தரித்துக்கொண்டார். அவர்களின் நாயகனாக வேஷம் தரித்தார்.

VI. பாரதிராஜாவின் படங்களில் தலித் மக்களைச் சித்தரிப்பதிலும் சாதிய அமைப்பு, நிலப்பிரபுத்துவம் போன்றவற்றைச் சித்தரிப்பதிலும் எந்தவிதமான மாற்றமும் காட்டவில்லை.

VII. தலித் விமர்சகர்களிலிருந்து தலித் மக்களின் பார்வை வேறானது. தலித் மக்கள் ரசனைக்கு அடிமைப்பட்டிருக்கிறார்கள். தலித் மக்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை.

VIII. ஒரே ஒரு கிராமத்திலே; ஜென்டில்மேன் படங்களில் இடஒதுக்கீட்டு எதிர்ப்பு பார்ப்பனியக் கருத்தைத் தொடர்ந்து, இந்தியன், சிறைச்சாலை, அந்திமந்தாரை படங்கள்.

X. தலித் மக்கள் பற்றிய சித்தரிப்பு: அழுக்கு, சேரி, ஒட்டுப் போட்ட சட்டை, கோவணம் என்பதாகவே இருக்கிறது. கறுப்புத்தோல் உள்ளவர்களாகவே சித்தரிக்கிறார்கள். பார்த்திபன், கவுண்டமணி, செந்தில், வடிவேலு, மண்ணாங்கட்டி போன்றோரின் சித்தரிப்பு கறுப்பு நிறம். இசை இழிவு நிலைக்குத் தள்ளுவதாக அமையும். வாழும்பகுதி அசிங்கமாக சித்தரிக்கப்படும். வசனத்தின் ஆதிக்கம், வன்முறை. தலித் பெண் உடல்களின் மீதான ஆதிக்கம். சாதிய எழுச்சிகள் வரலாற்று ரீதியில் சித்தரிக்கப்படவில்லை.

தலித் மக்கள் பற்றிய சித்தரிப்பு: அழுக்கு, சேரி, ஒட்டுப் போட்ட சட்டை, கோவணம் என்பதாகவே இருக்கிறது. கறுப்புத்தோல் உள்ளவர்களாகவே சித்தரிக்கிறார்கள். பார்த்திபன், கவுண்டமணி, செந்தில், வடிவேலு, மண்ணாங்கட்டி போன்றோரின் சித்தரிப்பு கறுப்பு நிறம். இசை இழிவு நிலைக்குத் தள்ளுவதாக அமையும். வாழும்பகுதி அசிங்கமாக சித்தரிக்கப்படும்.

3. இரா. கதைப்பித்தன், பாதரீகன் போன்றோரின் எதிர்வினை இவ்விதமாக அமைகிறது.

I. தமிழ்நாட்டில் நிறைய கிராமங்களில் தலித் மக்கள் சேரிகளில் அசுத்தமாகவும் கந்தல் ஆடையுடன் வறுமை வாழ்க்கை தான் வாழ்கிறார்கள். சமுதாயத்தில் உள்ள யதார்த்த நிலையைத்தான் படம்பிடித்துக் காட்டுகிறார்கள். இதில் தவறு என்ன இருக்கிறது?

II. 'பாரதி கண்ணம்மா' படத்தில் தலித் இளைஞன் காதல் தோல்வியுற்றுச் சாவதைச் சொன்னவர் அதே படத்தில் தலித் யுவதியை, காதலித்து கடைசியில் கல்யாணம் செய்துகொள்ளும் தேவர் இளைஞன் பற்றி ஏன் சொல்ல மறுக்கிறார்?

III. 'தமிழ்த் திரைப்படங்களில் பார்ப்பன மக்கள்' என்ற தலைப்பில் பார்ப்பனர்கள் அவமானப்படுத்தப்படுவதை நானும் கட்டுரையாக எழுத முடியும். ஆனால் திரைப்படங்கள் எல்லோர்க்கும் பொது. அதில் சாதியைப் பார்த்து ஆராய்வது மடமை. தலித் மக்களை பாதிப்பிலிருந்து உயர்த்தப் பாடுபடுவதைத்தான் தமிழ்த் திரைப் படங்கள் சித்தரிக்கின்றன.

IV. இந்தக் கட்டுரை பார்ப்பன சிருஷ்டிகர்த்தாக்களையும் பாரதிராஜா போன்ற தேவர் இனத்தவர்களை மட்டுமே குறை கூறுகிறது.

தேவர் மகன் என்ற திரைப் படத்தை வடிவேல் கதாபாத்திரம் 'தலித்' சமூகத்தைச் சேர்ந்தவன் என்று கட்டுரையாளர் குறிப்பிடுவது பச்சைப் பொய்! அந்தப் படத்தில் எந்த ஒரு காட்சியிலும் தலித் மக்கள், தேவர் மக்கள் என இனம் பிரித்துக் காட்டவில்லை.

V. 'பாரதி கண்ணம்மா' படத்தில் இடம்பெற்ற பறையடிக்கும் காட்சியையும் குறிப்பிட்டிருந்தார் (அ.இருதயராஜ்). அவர்கள் வாழும் பகுதியின் சுற்றுச் சூழலை அப்படித்தான் காட்டவேண்டும் என்பதற்காக 'நடப்பு' மாறாமல் காட்டப்படும் காட்சிகளையும் மேற்சொல்லி குறிப்பிட்ட விஷயமும் தலித் சமூகத்துக்கும், அவர்களின் விடுதலை கோட்பாட்டின் ஆதரவான பின்னனிக்கும் ஆதரவான குரலல்ல.

VI. இன்றைய காலகட்டத்தில் கயிறுமேல் நடக்கும் விஷயம் தலித் பிரச்சினை. இது மாதிரி பொது நோக்கமில்லாமல் மேதாவித்தனமாக சில பெரிய கலைஞர்களை வெளிப்படையாக பொருள் விளங்காமல் குறை கூறுவது நல்லதல்ல.

VII. தலித் மக்களை அடிமைப் படுத்தும் வசனங்கள் என்ற தலைப்பில் இடம்பெறும் வசனங்கள் யாவும் தலித் சமூகத்தை 'வஞ்சிக்க'எழுதப்பட்டவையாகி கட்டுரையாளர் குறிப்பிடுவது எழுத்து உரிமைக்கு அப்பாற்பட்டது.

4. அ. மார்க்ஸ் தலித் மக்களின் நேச சக்திகளான இசுலாமிய மக்கள் திரைப்படங்களில் சித்தரிக்கப்படும் விதம் குறித்துச்சொல்கிறார்.

I. திரைப்படங்களில் கூட இசுலாமியர் பற்றி ஒரே விதமான பிம்பங்கள்தான் முன்நிறுத்தப்படுகின்றன. 'நல்ல' இசுலாமியர் என்றால் இந்துக்களோடு அனுசரித்துப் போகிறவர், உதவி செய்கிறவர். உரிமைகளுக்காகப் போராடினால் அவர் நல்ல இசுலாமியரல்ல, 'ரோஜா' 'ஜாதி மல்லி' போன்ற சமீபத்திய திரைப்படங்களில் இசுலாமியர் வன்முறையாளர்களாக சித்தரிக்கப்பட்டது நினைவிருக்கலாம்.

II. பாலச்சந்தர் போன்ற பார்ப்பனர்களிடம் நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். கொஞ்சம் அசந்தால் நம் காதுகளில் ஜாதிமல்லியைச் சுற்றிவிட்டுப் போய்விடுவார்கள். அந்தப் படத்தில் இரண்டு மதக் கலவரங்கள் காட்டப்படுகின்றன. இரண்டுமே நடப்பது ஹைதராபாத்தில்தான். இன்று மதக்கலவரங்கள் அயோத்தியிலும், பம்பாயிலும் மீரட்டிலும், டெல்லியிலும் நடக்கின்றன. எல்லாவற்றையும் விட்டுவிட்டு பாலச்சந்தர் ஏன் ஹைதராபாத்தை தேர்ந்தெடுக்க வேண்டும்? ஹைதராபாத் என்கிற கருத்து மறைமுகமாகச் சொல்லப்படுகிறது. தவிரவும் பாதிக்கப்படுபவள் ஒரு இந்துப் பாடகி. பெயர் 'ஸ்ரீரஞ்சனி' – எனவே மதக் கலவரத்தில் அவளது தாயைக் கொல்பவர்கள் இசுலாமியராகத்தான் இருக்க முடியும். இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

III. 'கான் சாகிபு' வை 'மருத நாயகம்' பிள்ளையாக்கி கமல்ஹாஸன் செய்யும் தில்லுமுல்லுகளையும் இத்துடன் (அந்தோனிசாமி மார்க்ஸு'ம் வல்லபேச அய்யரும் ஆஸ்ஸன் ஒகி மற்றும் கிறித்தவ சட்டம் குறித்த பிரச்சினை: நிறப்பிரிகை: நவம்பர் 97) இணைத்துப் பார்க்கலாம். பிரிட்டிஷ்காரரை எதிர்த்துப் போராடும் நாட்டுப்பற்று ஒரு இந்துவுக்குத்தான் சாத்தியம் என்பதுதான் கமல்ஹாஸன் சொல்லவரும் செய்தி. மருதநாயகர்தான் கான் சாகிபுவாக மாறினார் என்பதற்கு முடிவான ஆதாரம் ஏதுமில்லை. அப்படியே மாறியிருந்த போதிலும் 'கான்சாகிபு'வே துறந்துவிட்ட ஒரு பெயரை கமல்ஹாஸன் துறக்காமலிருப்பதேன்? அப்பர் (திருநாவுக்கரசர்) வரலாற்றைத் திரைப்படமாக எடுத்தால் அதற்கு 'தர்மசேனர்' என்று பெயரிடுவது சரியாக இருக்குமா? கமல்ஹாஸனின் ரத்தத்திலும் வல்லபேசன்களின் ரத்தத்திலும் நெளிவது ஒரே பூணூல் தான்!

*(மிகுதி அடுத்த வாரம்)*



### மாவீரர் நாள் 99
### ஐரோப்பா தழுவிய குறும்படப் போட்டி

கலைஞர்களே!

உங்கள் கமராக்கண்களை திறவுங்கள். எங்கள் முன்னால் விரிந்து கிடக்கும் எம்மவர் பற்றிய பிரச்சனைகளை படமாக்கிக் கொள்ளுங்கள். சமூகத்துடிப்புள்ள உங்கள் கலைப்பார்வை உங்களுக்கு வெற்றியை தேடித்தரும்.

**குறும்படப் போட்டியில் பங்குபற்றுவோருக்கான விதிமுறைகள்**

★ இவ் வருட ஓகஸ்ட் மாத நடுப்பகுதிக்குள் போட்டியில் பங்குபற்றும் அனைவரும் தங்களது விண்ணப்பங்களை தொலைபேசி ஊடாகவோ, கிளைகள் மூலமாகவோ பதிவுசெய்து கொள்ளுங்கள்.
★ குறும்படங்கள் எம்மை வந்து சேரவேண்டிய இறுதி நாள்: ஒக்டோபர் 15.
★ ஆக்கத்தளம் புலம் பெயர் வாழ்வின் அவலங்களை வெளிப்படுத்துவதாக இருத்தல் விரும்பத்தக்கது.
★ கதை, திரைக்கதை, பாடல், நெறியாள்கை யாவும் சுயமானதாக இருத்தல் வேண்டும்.
★ இப்போட்டியில் கலைக்குழுக்களாகவோதனிநபர்களாகவோ கலந்து கொள்ளலாம்.
★ சிறந்த முதல் மூன்று படங்களும் பரிசுக்கு தெரிவுசெய்யப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

C.C.T
341 rue des pyrénées,
75020 Pairs, France.

மேலதிக விபரங்களுக்கு 01.43.58.11.42
தமிழர் கலைபண்பாட்டுக்கழகம் பிரான்ஸ்




# அகதா கிறிஸ்டி



பேனாவால் உலகை வென்று இன்று தான் இல்லாதுபோனாலும் எழுத்துலகிற்கே தலைவி போல் இருப்பவர் 'அகதா கிறி—ஸ்டி'. இவர் எழுத்தால் ஆட்கொள்ளப்பட்டு இவரின் பரம இரசிகர்கள் ஆனவர்கள் ஏராளம்.

இந்த இரசிகர்கள் கூட்டம் மற்றையவர்களைவிட சற்று மாறுபட்டவர்கள்தான். அதனால்தான் ஐரோப்பாவைத் தலைமையாகக்கொண்டு அகதாவிற்கு ஒரு வாசகர் குழுவையே அமைத்துள்ளார்கள். இவர்கள் இதுவரை இவர் எழுதிய நூல்களை 110 மொழிகளில் மொழி பெயர்ப்புச் செய்துள்ளார்களாம். அதனால் அகதா கிறிஸ்டிக்கு ரசிகர்கள் உலகம் பூராவும் திரண்டுவிட்டனர். இதுவரை இவரின் 66 துப்பறியும் நாவல்களும், 6 சமூக நாவல்களும், 20 நாடகங்களும் மொழி பெயர்க்கப்பட்டுவிட்டன என்பது குறிப்பிட வேண்டிய ஒன்று. ஆக அகதா இறந்தாலும் எழுத்தால் வாழ்கிறார்.

# உண்மையை அறிவோம்

பொதுவாகவே குடும்பங்களில் அதிகளவு நோயாளி எனப் பெயரெடுப்பது பெண்களே என்கிறது ஒரு மருத்துவச் சஞ்சிகை. இதற்குக் காரணம்தான் என்ன? இதற்கான பதில்களாக அவை தருவது, எம் சாதாரண குடும்பங்களில் உள்ள ஒவ்வொரு பெண்ணையுமே தமைத்தாமே திரும்பிப் பார்க்க வைக்கிறது. அவர்கள் சொல்வது இதுதான்; தாம் குறிப்பிடும் இந் நோயாளிக் குடும்பப் பெண்கள் ஆசியப்பகுதிகளில் வாழ்ந்து வருகிறவர்களில் தான் அதிகம் என்கிறார்கள். ஏனெனில் அப்பகுதியில் வாழும் பெண்கள் பெரும்பாலும் குடும்பத்திலுள்ளவர்கள் அனைவருக்குமே தாம்தான் பொறுப்புள்ளவர்களாக இருக்கவேண்டுமென்பதிலும், தம்மைக்காட்டிலும் தம்மைச்சூளவுள்ள கணவன் குழந்தைகளின் சந்தோசத்தையே தம் சந்தோசமாக எண்ணுபவர்களாகவும் இருப்பதைப் பெரிதும் விரும்புவதாகத் தெரிவிக்கிறது இப் பத்திரிகை. இக்குணாம்சம் தான் இவர்களின் சிறப்பு என்றாலும், அதுவே அவர்களின் ஆயுளுக்கும் அளவுகோலாகிறது என்கிறார்கள். காரணம் அப் பெண்களில் பெரும்பாலானவர்கள் எப்போதுமே கணவனும் குழந்தைகளும் போதியளவு உண்டார்களா என• அறிந்துவிட்டே தம் உணவில் கவனம் செலுத்துகிறார்கள். அத்தோடு அவர்கள் சாப்பிடும் உணவு, 'இறுதியாக எஞ்சியுள்ளதுதான் என்பதால்' அதில் எவ்வளவு தூரம் ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளது என்பதும் கேள்விக்குறியே. இதற்கிடையே தாம் சரியாக உண்ணாது தம் தாய்ப்பாலில் இன்னொரு ஜீவனையும் வளர்ப்பார்களாம்.

இவை போதாதென்று தன் கணவனோ குழந்தையோ நோய்வாய்ப்பட்டால் அதைப் பாரதூரமாக எண்ணிக் கலங்கும் அதேநேரம் தமக்கு அந்நோய் வருமிடத்தே அதைப் பெரிதுபடுத்துவதில்லை. ஏதோ தமக்குத் தாமே தெரிந்த கை வைத்தியங்களைச் செய்து சமாளித்துவிடுகிறார்கள். காரணம் தாம் வைத்தியத்திற்காகச் சென்றால் செலவாகும் பணத்தை மீதப்படுத்துவது தான் ஒரு சிந்தனை என்றால், அதைவிடப் பெரிதாக தாம் இல்லாத வேளை தம் குடும்பத்தார் தனித்து எவ்வாறு இருப்பர் என்ற ஏக்கமும், பல பெண்களை தமக்கான வைத்தியம் பார்த்தலைத் தடுத்து விடுகிறதாம்.

இதற்கிடையே இன்னுமொரு சாரார் தாம் என்ன உழைத்துப் பணமா கொட்டுகிறோமென நொந்து தன்னால் தன் குடும்பத்திற்கு வரவில்லாவிடினும், செலவைத்தானும் குறைத்தாலென்ன என எண்ணி வீட்டிலேயே முடங்கிவிடுவதும் உண்டாம். ஆகவேதான் இவர்கள், அடுத்தவர்கள் ஏறிச்செல்லும் உயரப் படியாக இருந்து, தம்மைத்தாமே மரணத்தினுள் 'விரைவில்' அழைத்துச் செல்கிறார்களாம். ஆகவேதான் இவர்களின் வேண்டுகோள் பொதுவாகக் குடும்பப் பெண்களுக்கென்று இலவச மருத்துவமனை வேண்டுமென்றும் அவ் வைத்தியசாலையிலிருந்து பகுதி பகுதியாக தாதிமார்கள் தம்மைச் சூழவுள்ள பிராந்தியங்களிற்குச் சென்று அங்குள்ள குடும்பத் தலைவிகளுக்கு அவர்களின் நலன் என்பது எவ்வளவு முக்கியமென்பதை வலியுறுத்திக்கூற வழிவகுக்க வேண்டுமென்கிறார்கள்.

# செந்தமிழ் மணக்கும் தாமரை

எல்லோருமே தமக்கு எப்படி மற்றோர் எல்லோரையும் கைகட்டி நிற்கவைக்கும் அதிகாரம் நிறைந்த, அதிக இலாபம் நிறைந்த தொழில் கிடைக்குமென்றுதான் பார்ப்பார்கள். ஆனால் கோவையில் முதன்மை பொறியியலாளராகக் கடமையாற்றிய ஓர் இளம்பெண் இவற்றையெல்லாம் தன் எழுத்துக்கு முன்னால், தன் கவிதைகளுக்கு முன்னால் பெரிதில்லை என்றுவிட்டு விட்டு இன்று பேனாவுடனும் காகிதத்துடனும் படங்களிற்கு பாடல் எழுதவந்துவிட்டார். ஆம்! 'மல்லிகைப்பூவே மல்லிகைப்பூவே பார்த்தாயா' இந்த பாடலின் வரிகளைக்கேட்கும்போதே அந்தப் பாடலை இயற்றியவரின் பெயரையும் எல்லோரும் நினைத்துவிடுவார்கள். 'தாமரை' சமீபத்தில் தென்னிந்திய சினிமா வட்டாரத்தில் நுழைந்துவிட்ட புதுப்பாடலாசிரியர். தற்போது எம் காதுகளில் கர்ண கடூரமாக ஒலிக்கும் அதிநவீன இசையமைப்பின் மத்தியில், எம் செவியில் சொல் விழுந்தாலும் இதற்குக் கருத்துத்தான் என்னவென மனதை அரிக்கவைக்கும் ஏராளமான ஆங்கிலச் சொற்களின் அதிரடி ஆக்கிரமிப்பிற்குள், சுத்தமான மென்மையான தமிழ்ச் சொற்களை பிரயோகித்து அனைவரின் மனதையும் கொள்ளை கொண்டுவிட்ட வித்தியாசமான எழுத்தாளர்.

இவர் பாடலாசிரியரான கதைதான் எப்படி? தாமரையே சொல்கிறார்; ஆரம்பத்திலிருந்தே நான் ஏராளமான சிறுகதைகளையும், கவிதைகளையும் எழுதிப் பரிசுபெற்றிருந்தேன். ஆனாலும்கூட அடிமனதில் சினிமாவிற்கும் பாடல் எழுத விருப்பமாகத்தான் இருந்தது. அதனால் ஓர் முறை சென்னை வந்தேன். சென்னை வந்த பின்புதான் தெரிந்தது அங்கு நிரந்தரமாகத் தங்கியிருந்தாலேயொழிய வெகு எளிதில் இத்துறைக்குள் நுழைய முடியாதென்று. அதன்காரணமாக மீண்டும் கோவை சென்றுவிட்டேன். இதற்கிடையே எனக்கு கல்லூரி நாளிலிருந்தே என் எழுத்துக்களை விமர்சனம் செய்யும் வாசகர் நண்பர் ஒருவர் உண்டு. அவர் பெயர் மனோகர். அவரை நேரில் பார்த்தது கூட இல்லை. ஆனால் அவரோ என்னை ஒருமுறை அழைத்து இயக்குநர் சீமானின் உதவி இயக்குநரான மோகனை அறிமுகம் செய்துவிட்டார். அதன் பின்புதான் எனக்கு இயக்குநர் சீமானின் அறிமுகம் கிடைத்தது. ஆனால் வாய்ப்புக் கிடைக்கவில்லை. பொறுத்திருந்தேன். சில தினங்களிலே சீமானின் அழைப்பு! தான் எடுத்துக்கொண்டிருக்கும் இனியவளே படத்திற்கு ஏற்கனவே 5 பாடல் முடிந்திருந்தாலும் இன்னுமொரு பாடல் வேண்டுமெனவும் அதை என்னை எழுதும் படியும் கேட்டார்.



அதுதான் என் ஆரம்பம். இதன் பின்தான் இயக்குநர் விக்கிரமன் இனியவளே படத்தின் பாடலைக் கேட்டுவிட்டு 'உன்னிடத்தில் என்னைக்கொடுத்தேன்' என்ற படத்தில் வாய்ப்புக்கொடுத்தார்.' அதுதான் நான் இன்று பேசப்பட்ட காரணமென்கிறார் தாமரை. இந்த இளம் பாடலாசிரியரின் வருகை இன்று ரசிகர்கள் மத்தியில் பெரிதும் மதிப்புக் கலந்த வரவேற்பைக் கொடுத்துள்ளது. காரணம் இவர் பாடலின் வரிகளில் எல்லாம் தமிழ்ச் சொற்களே இடம்பெற்றிருப்பதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. அது மட்டுமல்ல இந்த பாடலாசிரியர் எம் ஈழப் போராட்டம் மீது மட்டுமல்ல, பெண்ணுரிமைப்போராட்டத்திற்கும் ஆதரவு தெரிவிப்பவர் என்பது மகிழ்ச்சிக்குரியதே.

# மானமே இல்லாத அரசியல்

இந்தியாவில் அரசியலின் துணைகொண்டு அடாத்தாக நடாத்தப்படும் சம்பவங்கள் ஏராளம். இவ்வாறு நடப்பவற்றில் ஏறத்தாழ பெண்களின் பெண்மைக்கு அச்சுறுத்தல் விளைவிப்பவையாக இருப்பவையோ இன்றும் இன்னும் அங்கு தாராளம். ஆம்! அப்பாவின் ஓய்வு பெற்ற பொலிஸ் தொழிலையும், அவர் தற்போதுள்ள சாதிச் சங்கத்தின் தலைவர் பதவியையும் உதவியாகக்கொண்டு, ஓர் அப்பாவிப் பெண்ணைக் கதறக்கதற பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியுள்ளான் கண்ணன் என்னும் ஒரு அயோக்கியன். இவ் அயோக்கியனின் இச் செயலிற்கு இதுவரை தண்டனை எதுவும் வழங்கப்படாமை இதைவிட பெரிய ஆச்சரியம். மாலையம்மாள் என்ற ஓர் ஏழைப்பெண் கையில் 5 மாதக்குழந்தையுடன் இன்று கதறி அழுவது யார் காதிலும் கேட்கவில்லை. எப்படி நடந்தது இச்சம்பவம்?, இதை அவரது கணவனே விபரிக்கிறார். அதாவது, ஓர்நாள் மாலை தான் வேலையால் திரும்பும்போது கண்ணன் என்கிற இந்த அயோக்கியன் ஓர் விலைமாதுவின் வீட்டிற்கு செல்ல வழிகேட்டிருக்கிறான். அதற்கு இந்த அப்பாவி மனிதன் தனக்குத் தெரியாது என்றதும், தன் வேண்டுகோளை அவமதித்ததாகச் சொல்லி தன் காற்சட்டையின் பட்டையை அவிழ்த்து சாரமாரியாக அடிக்கத்தொடங்கியிருக்கிறான் கண்ணன். இதை தன் வீட்டு யன்னல் ஊடாகக் கண்ட அவ் அப்பாவியின் மனைவி, தன் 5 மாதக் குழந்தையுடன் கண்ணனிடம் ஓடி வந்து கெஞ்சியுள்ளார். இப்படிக் கெஞ்சிய பெண்ணைக் கண்டதும் கண்ணனின் ஆசை அந்த மாலையம்மா என்ற பெண்மீது மாறிவிட்டது. உடனே இவனின் வேண்டுகோளை மறுத்த அத்தம்பதியினர் ஓடிச் சென்று வீட்டினுள் கதவைப்பூட்டிவிட்டு உதவிக்கு ஆட்களை அழைத்திருக்கின்றனர். ஆனால் கண்ணனின் செல்வாக்கையும் அவனின் ரவுடித்தனத்தையும் அறிந்தவர்கள் யாரும் தம் வீட்டைவிட்டு வெளிவரவில்லை. இறுதியில் அவர்களது வாசற்கதவு கண்ணனால் அடித்து நொருக்கப்பட்டுவிட்டது. இனித் தப்பமுடியாதென்ற நிலையில் அவ் ஏழைத்தம் பதியினர் ஓடிச் சென்று அவன் கால்களிலேயே தஞ்சம்கேட்டு கெஞ்சினர். ஆனால் அவனோ ஈவிரக்கம் ஏதுமின்றி அப்பெண்ணின் கணவனைத்தாக்கிவிட்டு அவர்களின் 5 மாதச்சிசுவை தலைகீழாகப் பிடித்தாட்டியபடி அதைக் கொல்லப்போவதாகக் கூறி அந்த அப்பாவிப் பெண்ணை வலுக்கட்டாயமாக பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கிவிட்டுச் சென்றுவிட்டான். இன்று அக் குடும்பமே அநாதரவாக வீதியில் நிற்கிறது. எங்கே அரசியலில் போட்டியிடும் ஏராளமான பெண் தலைவர்கள் இந்த அக்கிரமத்தை எள்ளளவும் திரும்பிப் பார்த்தார்களா? அக்கறைப் பட்டார்களா? எதுவுமில்லை! எனவே இன்று மாலையம்மா, நாளை இதைப் போல் எத்தனை அம்மாக்களையும் கண்ணனால் தொட முடியும்தானே!



# தமிழர் நடந்த பாதை

**2**

## இமயமும் காசுமீரும் தமிழ்ச்சொற்களே

இந்தியாவின் வட எல்லை இமயமலை, வட இந்திய மாநிலம் காசுமீர். இமயம், காசுமீர் ஆகிய இரண்டும் தமிழ்ச் சொற்களே.

சிமை, சிமையம் என்னும் சொற்களுக்குத் தமிழில் உச்சி, உயரம் என்பன பொருள்கள். சங்க நூல்களில் ஏறத்தாழ 30 இடங்களில் மலையின் உச்சியை, சிகரத்தை இச் சிமை, சிமையம் என்னும் சொற்கள் சுட்ட வந்துள்ளன.

**'தேன்தூங்கும் உயர்சிமைய மலை'**
*(மதுரைக்காஞ்சி 3—4)*
**'மழையாடு சிமைய மால்வரை'**
*(பட் 138)*

போல்வன சிறு சான்றுகள். பெரும்பாணாற்றுப்படை இமயமலையின் உச்சிச் சிகரங்களைச் 'சிமையச் செவ்வரை' *(429)* என்றே கூறுகின்றது.

தமிழின் சகர முதற்சொற்கள் ஆரியர் நாவில் ஹகரமாக மாறுவது பொது விதியாக உள்ளது. ஆரியக்குறுமொழிகளில் ஒன்றாகிய சிங்களத்தில் இதற்கு நிறைய எடுத்துக்காட்டுகள் தரலாம்.

சிறை-ஹிறை எனவும் சட்டி-ஹட்டி எவும் சின்ன -ஹஹின்ன எனவும் சணல்-ஹணல் எனவும் சடுதி-ஹடுதி எனவும் சந்து-ஹந்து எனவும் சந்தனம்-ஹந்தன் எனவும் தமிழைத் திரித்து ஆரியச் சிங்களம் கூறும். சிங்கள ஆரியரைப் போலவேதான் வட இந்திய ஆரியப் பார்ப்பனரும், உச்சி என்னும் பொருளுடைய சிமை- சிமையம் என்னும் தமிழ்ச் சொல்லைத் திரித்து, இந்தியாவின் உயரமான மலையைக் குறிக்க ஹிமை-ஹிமயம் எனக்கூறினர்.

சிமை, சிமையம் என்னும் தமிழ்ச்சொற்களின் முந்தைய வடிவம் இமை - இமையம் என்பதாகலாம். ஏனெனில் 'சிறை' என்ற சொல்லின் முந்தைய வடிவம் இறை என்பதாக உள்ளது. தங்குதல் என்னும் பொருள் தரும் 'இறை' என்ற சொல்லே ஓரிடத்தில் ஒருவரை நிலையாகத் தங்கவைக்கும் செயலைக் குறிக்க, 'சிறை' எனப்பட்டது.

இடவாகு பெயராய் 'ஹிமம்' என்னும் பெயர் உருவாகியிருக்க வேண்டும்.

'காசுமீர்' என்னும் வடகோடி இந்திய மாநிலத்தில் 'காசா என்னும் பழங்குடி மக்கள் வாழ்ந்துள்ளனர். இவர்களுக்குரியதாக இம்மாநிலம் இருப்பது கொண்டே இது 'காசுமீர்' எனப்பட்டுள்ளது. இதனை 'ஆப்சன் சாப்சன்' என்னும் ஆங்கில வேர்ச்சொல் அகராதி தெளிவாக எடுத்துக்கூறுகிறது.

முல்லை நிலத்துக் காடுகளில் மலரும் கரியநிறப்பூ 'காயா' என்பது. முல்லைநிலக் கடவுளான திருமால் கரிய நிறத்தவன். இக்



கடவுளின் மேனி நிறத்திற்குக் 'காயாம்' பூ உவமையாகக் கூறப்படும். 'காயா' என்பதற்குக் கருமை என்பதே பொருள். பேச்சு வழக்கில் இச்சொல் 'காசா' எனத் திரியும். 'காசாங்காடு' என மக்கள் காயாங்காட்டினை அழைப்பர். அயலூர்- அசலூர்; குயவன்-குசவன் போன்றவற்றில் நிகழ்ந்த ய-ச மாற்றமே மேலையதும்.

இமயமலையின் அடியில் கரியநிறத் தமிழர்கள் வாழ்ந்தது பற்றியே, அப்பகுதியைக் காசா, சாசமீர்-காசுமீர் என்று ஆரியர்கள் அழைத்தனர். ஆரியர் நூல்களில் தமிழ் அரசர்கள் 'கால இந்திரன்' 'காலகேந்திரா' எனவும், 'தமிழர்கள் காலகேயர்' எனவும் சொல்லப்பட்டுள்ளனர். காளமேகம், காளி போன்றவற்றின் தமிழ்க் கருமையே 'கா்ல' என ஆரியத்திற்குள் மாறியது. கிரிகிஸ்தான் (Kirghiz) நாட்டின் பழங்குடிகள், Karakirghiz எனச் சொல்லப்பட்டதாக 'ஆக்சு போர்டு' ஆங்கில அகராதி தெரிவிக்கிறது. இச்சொல்லின் Kara என்பதற்குக் கருமை என்பதே

**பேரா.கு.அரசேந்திரன்**

பொருள். எனவே முன்நாளில் தமிழரும் - பழங்குடியினரும் 'கருப்பர்' என்பதாக ஆரியர்களால் அழைக்கப்பட்டுள்ளனர் என அறிய முடிகின்றது.

ஆரியர் வருமுன் இந்தியா முழுவதும் தமிழே வழங்கப் பெற்றது என்பதற்கு எவ்வளவு விளக்கம் கூறவேண்டும். இயன்றவரை இனிக் காண்போம்.

இதைப்போலவேதான் இமை, இமையம், இமயம் என்ற சொற்கள் நேரடியாகவே தமிழில் உச்சி, உயரம் என்னும் பொருளுக்கு உரியதாகியிருந்து பிறகு சிமை, சிமையம் எனவும் திரிந்திருக்க வேண்டும். இறை-சிறை. ஹிறை எனப்பட்ட வழியிலேயே இமையம்- சிமையம்- ஹிமயம் எனப் பட்டது.

'ஹிமம்' என்ற சொல்லிற்கு வடமொழியில் பனி என்பது பொருள். பனியைக் குறித்த இச் சொல்லிலிருந்தே பனியையுடைய மலை ஹிமம்-ஹிமயம் எனப்பட்டது என்பது, சமற்கிருத வேர்ச்சொல் அறிஞர் 'மானியர் வில்லியம்சி'ன் கருத்தாகும். இது உண்மையாக இருக்க முடியாது. ஏனெனில் பனியைக் குறித்த 'ஹிமம்' என்ற சொல்லிற்குச் சமற்கிருதத்தில் வேர் விளக்கம் இல்லை. உச்சியான உயர்வான மலையில் தோன்றியது காரணமாகவே பனிக்கு

### இந்திய-சிங்கள ஆரியர்கள் வந்தேறு குடிகளே

இந்தியாவின், இலங்கையின் தொன்முது குடிகள் தமிழர்களே, தமிழர்கள் மேல் மைய ஆசியாவினின்று வந்து குடியேறிய ஆரியர்கள் உருவாக்கிய மாற்றங்கள் மிகுதி. இதனை விரிவாகவே தமிழர் நடந்த பாதைத்தொடரின் முற்பகுதியில் காண உள்ளோம். இதற்கு முன் இந்தியாவிலும் இலங்கையிலும் வாழும் ஆரியர்கள் 'வந்தேறு குடிகளே' என்பதை நாம் தெளிவாக விளங்கிக் கொள்வது நல்லது. ஏனெனில் இந்திய - சிங்கள ஆரிய இனத்தினர் தங்களை மண்ணின் குடிகள் போலவும் தமிழர்களை வந்தேறு குடிகள் போலவும் காட்டுவதில் கூட முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

28.11.98 மற்றும் 30.11.98 ம் நாளைய தினமணி நாளேட்டில் 'கோயில்களில் செந்தமிழ் சமஸ்கிருதம்' என்னும் தலைப்பில் நீண்ட கட்டுரையொன்று வந்தது. அதன் ஆசிரியர் ஓர் பேராசிரியர். கலாநிதியும்கூட. தமிழ், ஆங்கிலம், சமற்கிருதம் ஆகிய மும்மொழிகளிலும் புலமையர் என்னும் பெயரும் பெற்றவர். அக்கட்டுரையில் அவரின் அரிய கண்டுபிடிப்புக்களாகச் சில கருத்துக்கள் வெளியிடப்பெற்றன. அறிவுடையோர் நகைக்கக் கூடிய கருத்துக்கள் அவை. ஆரியர்கள் வெளியிலிருந்து வந்தவர்கள் அல்லர். அவர்களின் சமற்கிருதம் அயற்புலமொழியன்று. தமிழர்கள் அதுவும் குமரிக் கண்டத்தில் வாழ்ந்தபோதே தமிழையும் சமற்கிருதத்தையும் உருவாக்கினர். தமிழை வாழ்வியலுக்கும் சமற்கிருதத்தைச் சமயவியலுக்குமாக அவர்கள் பிரித்தனர். இவை சபாரத்தினத்தின் உளறல்கள்.

இந்தியாவில் வாழும் ஆரியர்களின் சமற்கிருதமும் இலங்கையில் வாழும் சிங்களவர்களின் சிங்களமும் இவர்கள் புறப்பட்ட இடமான மைய ஆசியாவில் இதே பெயரில் தோன்றிய மொழிகள் அல்ல. இந்தியாவிலும் இலங்கையிலும் வழங்கிய தொன்மொழியாகிய தமிழைக்கொண்டும், தமிழின் கொடுந்திரிபான வடதிராவிட மொழிகள் கொண்டும், வளப்படுத்திக் கொண்டவையே சமற்கிருதமும் சிங்களமும். சமற்கிருதம், சிங்களம் என்ற பெயர்களும் - இவ்விரு ஆரியர்களின் மூல இடமான மைய ஆசியாவில் தோன்றியவையல்ல. ஆனால் இவ்விரு நாட்டிலும் வாழும் ஆரிய இனத்தவர், மூவாயிரத்து ஐநூறு ஆண்டுகளின் முன் இந்தியாவிற்குள் நுழைந்தபோது பேசிவந்த மொழி, 'முதிர்ச்சியடையாத ஓர் ஆரியக்குறுமொழியே' என்பதில் ஐயமில்லை. அவ்வாறு அன்று அவர்கள் பேசிவந்த ஆரியக் குறுமொழியை நாம் இன்றைய சமற்கிருதத்தினின்று - சிங்களத்தினின்று இன்றும் பிரித்தறிய முடிகின்றது. அவ்வாறு பிரித்தறியக் கூடிய அவ்வாரியக் குறுமொழி, இன்றைய மேலை ஆரியப் பெருமொழிகளோடு உறவுடையதாக இருப்பதை நாம் காண முடிகின்றது. இதிலிருந்து நாம் அறிய வருவது யாதெனில், இன்றைய கீழை ஆரியர்களும் மேலை ஆரியர்களும் ஏதோவோரிடத்தில் ஒரு காலத்தில் ஒன்றாக ஒருமொழிபேசி வாழ்ந்த ஓரினத்தவரே என்கிற உண்மையே! மூவாயிரத்து ஐநூறு ஆண்டுகட்கு முன் ஆரியர்கள் இந்தியாவிற்குள் நுழைந்தபோது பேசிவந்த ஆரியக்குறுமொழிக்குப் பண்டுபெயர் யாதென்று தெரியவில்லை. ஆதலால் அதனை ஓர் அடையாளத்திற்காக ஆரியர்களின் சமற்கிருதம், சிங்களம் எனவொரு தற்காலிகப் பெயரைக்கொடுத்து அழைத்து வருகின்றோம்.

*(வளரும்)*

# போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைக்குப் பலியான தமிழர் பதிவகம்!

கடந்த 50 ஆண்டுகளில் ஈழத் தமிழர் மீது நடத்தப்பட்ட மற்றும் நடத்தப்பட்டு வருகின்ற கொலைகள், பாலியல் வல்லுறவுகள், காரணமின்றி கைது செய்து காவலில் வைக்கப்படும் கொடுஞ்செயல்கள் ஆகியவற்றை ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமைகள் மையத்தில் முழுமையாக பதிவு செய்ய ஓர் ஆவணத்தை உருவாக்கும் பணியைப் போர் மற்றும் இனப் படுகொலைக்குப் பலியான தமிழர் பதிவகம் (Registry for Tamil Victims of War Crimes & Genocide) மேற்கொள்ள இருக்கிறது. மேற்கண்ட வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்டோரின் செய்தி அறிந்தவர்கள், இப்பதிவகத்துடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

தொடர்பு கொள்வோர் தரவேண்டிய தகவல்கள்:

பாதிக்கப்பட்டோரின் பெயர், முகவரி, பிறந்தநாள், பாலினம், தொழில், திருமண நிலை, சம்பவம் நடந்த நாள், நேரம், இடம், தாக்கியவர்கள், கொன்றவர்கள் அல்லது பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியவர்கள் யார், தாக்கியவர்களின் உடல் குறியீடுகள், பாதிக்கப்பட்டவர் தமிழர் என்ற காரணத்தால்தான் சம்பவம் நிகழ்ந்தது என நினைப்பதற்கான காரணங்கள், அதிகாரிகளுக்குச் சம்பவம் தெரிவிக்கப்பட்டதா,? அவர்கள் யார்?? அவர்கள் எடுத்த நடவடிக்கை என்ன, இச்சம்பவத்திற்குச் சாட்சிகள் யார்?? சாட்சிகளின் பெயர், வயது, பாலினம் மற்றும் முகவரி, கலவரங்கள் மற்றும் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டோர் மற்றும் மாண்டோர் பற்றிய செய்திகளையும் மேற்கண்ட விவரங்களோடு அனுப்ப வேண்டுகிறோம்.

**தொடர்பு முகவரி:**

**போர்க் குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைக்குப் பலியான தமிழர் பதிவகம்:**
17/1இ நரசிம்மபுரம், மயிலாப்பூர், சென்னை-600 004.
தொலைபேசி: 494 0575. / தொலைநகலி: 495 3916.
மின் அஞ்சல் seide@md2.vsnl.net.in

## தமிழர்களை இனப்படுகொலை செய்யும் சிங்களருடன் இந்திய கிரிக்கெட் வீரர்கள் விளையாடலாமா?

கார்கில் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் இந்திய இராணுவத்துடன் மோதிவரும் இந்த வேளையில் கனடாவில் நடைபெறவிருக்கும் உலக கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தானுடன் இந்தியா விளையாடக் கூடாது என்று பிரபல கிரிக்கெட் வீரர் கபில்தேவ் தேசபக்தி பொங்க அறிக்கை வெளியிட்டார். அதற்கு ஆதரவாக பலரும் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். ஆறு இந்திய வீரர்களை சுட்டுத் தள்ளி அவர்களின் உடல்களை சின்னாபின்னமாக்கி மனிதத்தன்மை அற்ற வகையில் நடந்துகொண்ட பாகிஸ்தானுடன் என்ன விளையாட்டு வேண்டிக்கிடக்கிறது எனக் கேட்பதின் நியாயம் நமக்குப் புரிகிறது.

ஆனால் இதைவிட பல நூறு மடங்கு அதிகமான கொலைகளை சிங்கள இராணுவம் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக செய்து வருகிறது. 600க்கு மேற்பட்ட தமிழர்களை ஈவு இரக்கமில்லாமல் படுகொலை செய்து சிங்கள இராணுவம் அவர்களை புதைத்துள்ள செம்மணி பகுதியில் இப்போது தோண்டி எடுக்கப்படும் ஒவ்வொரு எலும்புக் கூடும் ஒவ்வொரு சோகக் கதையைக் கூறுகின்றன? கொலைவெறி பிடித்த சிங்கள கிரிக்கெட் அணியுடன் இந்திய வீரர்கள் கொழும்புவில் அடுத்தமாதம் விளையாடப் போகிறார்கள். அதைப் பற்றிய கொதிப்பு உணர்வு கபில்தேவுக்கு வராமல் இருப்பது வியப்புக்கு உரியதல்ல.

ஆனால் தமிழ்நாட்டில் உள்ள கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்கும் கிரிக்கெட் ரசிகர்களுக்கும் இந்த மனிதாபமான உணர்வு ஏன் இன்னமும் வரவில்லை? தமிழர்களைத் திட்டமிட்டு இனப்படுகொலை செய்துவரும் இலங்கையுடன், இந்திய கிரிக்கெட்குழு விளையாடக்கூடாது என்று ஏன் இவர்கள் கூற மறுக்கிறார்கள்?

*நன்றி: தென்செய்தி*

*(20-ம் பக்கத் தொடர்ச்சி)*

ஊரைக்கூட்டி ஒப்பாரி
வைக்கவோ எல்லாம்
முடியாத ஊமைச்சாபம்
எங்களுக்கு! நடுஹோலைத்
தாண்டி, பின்புறமாய்
போயிருந்து அழுதுதீர்க்க
முடியாத அவலம்!

எல்லா சுதந்திரங்களும்
பறிக்கப்பட்டு. இப்போ
அழுவதற்குரிய ஆகக்குறைந்த
சுதந்திரமும் இரகசியமாய்ப்
பறிக்கப்பட்டிருந்தது யாருக்குத்
தெரியும்! இதில் யார், யாரைப்
போய்த் தேற்றுவது?!

சில மாதங்கள் எமக்குள்
நெருப்புத் துண்டங்களாய் கனன்று
பொசுங்கிக் கழிந்தது! நம்ப
முடியவில்லை நமது சின்னச்
சின்னச் சந்தோஷங்களும்
இத்தனை விரைவில் சீர்குலைந்து
போகுமென்று நம்பவில்லை.

இலையுதிர்காலம் தொடங்கி.
சினிப்புளி உருவியுருவி தன்
இலைகளை வளவெல்லாம்
கொட்டத் தொடங்கியபோது,
ஒருநாள் திடுதிடுப்பென்று
அவர்கள் மூட்டைகட்டத்
தொடங்கிவிட்டார்கள். ரெயில்வே
ஸ்ரேசனுக்குரிய கட்டடங்கள்
எல்லாம் அவசரம் அவசரமாய்
விடுவிக்கப்பட்டு
வெறிச்சோடிவிட்டது!

. அனைத்து வாகனங்களும்
அப்புறப்படுத்தப்பட்டுக்
கொண்டிருந்தன. மேஜர், கேர்ணல்
என்ற பதவியிலிருந்தவர்கள்,
விடை பெற்றுப்போக வீட்டுக்கு
வந்தார்கள். சிநேகமும் பண்பும்
மிக்க எங்களைப் பிரிந்து
போவதில் பெரிய மனவருத்தம்
என்று கூறி விடைபெற்றுப்
போனார்கள் - சொந்த
உடைமையைத் துறந்து போவது
போன்ற துக்கம் அவர்களின்
கண்களில்!

இரவு, ஈ காக்கைகூட
அங்கில்லை என்ற தெளிவான
நம்பிக்கையில், இத்தனை நாள்
அடக்கி வைத்திருந்த துக்கம்
எல்லாம் பீறிட்டெழ, நெஞ்சிலடித்து
அம்மா கதறத் தொடங்கிவிட்டா!

'நாசமாய்ப் போவாங்கள்...
என்ரை பிள்ளையையும்
நாசமாக்கிப் போட்டெல்லோ
போறாங்கள்! மகனே! நானினி
உன்னை எங்கை தேட...' என்று
பின்வளவில் குந்தியிருந்து
குழறிக்கொண்டேயிருந்தா.

எனக்குக் கண்களிற்குள் நீர்
முட்டிக்கொண்டு வந்துவிட்டது!
ஆயினும் யாரும் யாரையும் அழ
வேண்டாமென்று தடுக்கவில்லை.

*நன்றி: யுகம்மாறும்*

# கருமாரி மூவிஸ் வழங்கும்



மூன்றாவது வாரமாக அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க

## காதலர் தினம்

பாடல்கள்
கவிஞர் வாலி

ஒரே திரையரங்கில் இரு திரைப்படங்கள்
வெவ்வேறு காட்சி நேரங்களுடன்

இசை
ஏ.ஆர். ரஹ்மான்

ஒளிப்பதிவு
பி.சி. ஸ்ரீராம்

இயக்கம்
கதிர்

ஒளிப்பதிவு
பி.சி. ஸ்ரீராம்

| | | |
|---|---|---|
| சனி | 31/07/99 | 6.15 |
| ஞாயிறு | 01/08/99 | 9.15 |




தொடர்புகளுக்கு
01 48 38 54 65
06 16 39 20 57

கதை, திரைக்கதை, வசனம், இயக்கம்
செல்வா

இசை
MUSIC
பரத்ராஜ்

இடம் : ESPACE CINEMA
AUBERVILLIERS QUATRE CHEMINS
M° : Quatre Chemins

| | | |
|---|---|---|
| சனி | 31/07/99 | 9.15 |
| ஞாயிறு | 01/08/99 | 6.15 |
| திங்கள் | 02/07/99 | 8.00 |

# மிகவிரைவில்
## வெளிவருகின்றது







# விஜய் ரெலிகொம்

# Vijay Telecom

# மறுபிறவி 10

**- சுபா.சுந்தரம் -**

**(தன் சிறை அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் தமிழ்ஆர்வலர்)**

ராஜீவ் கொலை வழக்கில் எனக்கு முன்பாக பிடிபட்டவர்களின் பொலிஸ் காவல் 60 நாட்கள் முடிய முடிய, அவர்களை நீதிபதி முன் ஆஜர்படுத்தி, நீதிமன்ற காவலுக்காக செங்கல்பட்டு கிளை சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். 29.08.91 அன்று எனக்கும் 60 நாள் பொலிஸ் காவல் முடிவுக்கு வந்தது. சிவராசன் விவகாரம் முடிந்துவிட்டதால் என்னை விடுதலை செய்து விடுவார்கள் என்று தான் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், காவல் முடிவதற்கு முதல்நாள் எஸ்.பி தியாகராஜன் மற்றைய அதிகாரிகளுடன் பூந்தமல்லிக்கு வந்திருந்தார். ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கும்படி என்னிடம் கேட்டார். எனக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லாதபோது என்னால் இயலாது என உறுதியாக மறுத்துவிட்டேன். என்னிடமிருந்து அந்த வார்த்தைகளை அவர் எதிர்பாக்கவில்லை.

'நன்றாக, யோசனை செய்து வையுங்கள், மாலை வருகிறோம்' என்று சொல்லிச் சென்றார். எஸ்.பி. ஆனால் மாலையில் யாரும் வரவில்லை. 29.08.91 அன்ற நீதிபதி சித்திக் முன் என்னை ஆஜர்படுத்தி, நீதிமன்ற காவலுக்கு அனுப்ப உத்தரவு பெற்றனர். புலன் விசாரணை அதிகாரி ரகோத்தமன் எனக்கு பிஸ்கெட் பாக்கெட்டுகள் வாங்கிக் கொடுத்து, தானும் செங்கல்பட்டு சிறைச்சாலைக்கு வருவதாகவும், வீட்டில் எனது மனைவிக்கும் தகவல் கொடுத்திருப்பதால் அவர்களும் அங்கு வருவார்கள் என்றும் கூறினார்.

பலத்த பாதுகாப்புடன் என்னை வேனில் ஏற்றி செங்கல்பட்டு சிறைச்சாலைக்குக்கொண்டு கென்றார்கள். வேனுக்குப் பின்னால் ஒரு அம்பாசிடர் காரில் ரகோத்தமன் வந்தார். பூந்தமல்லி சிறையில் இருந்திருந்தாலும் சிறைத்துறையின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்த ஒரு சிறைச்சாலைக்கு செல்வது இதுதான் முதல் முறை. பாலன் அழகிரி என்பவர்தான் செங்கல்பட்டு சிறைச்சாலையின் கூடுதல் கண்காணிப்பாளராக இருந்தார். என்னை அவரிடம் அழைத்துச் சென்றார் ரகோத்தமன்.

பாலன் அழகிரி என்னிடம் 'ராஜீவ் கொலை வழக்கில் நீங்கள் என்ன குற்றம் செய்தீர்கள் என்பதைப் பற்றியெல்லாம் எங்களுக்கு அக்கறையில்லை. உங்களுடைய கஸ்டடியன் நாங்கள். எங்கள் பொறுப்பில் நீங்கள் இருக்கப்போகிறீர்கள்' என்றார். பின்னர் இன்னொரு அதிகாரி வந்து என்னை பக்கத்து அறைக்கு அழைத்துச்சென்றார்.

அந்த அறையில்...

நான் அணிந்திருந்த துணிகளை அகற்றச் சொன்னார்கள். என்னை முழு நிர்வாணமாக்கியதுடன், முட்டிக்கால்போட்டு உட்கார்ந்து எழுந்திருக்கச் சொன்னார்கள். இருமுறை அப்படி உட்கார்ந்து எழுந்தேன். சிறைவாசிகள் தங்களின் ஆசனவாயிலில் ஏதேனும் விசப்பொருளை மறைத்துவந்துவிடுவார்களோ என்று சோதிப்பதற்காகத்தான் இந்தமுறை கையாளப்படுகிறது. என்னதான் சோதனையென்றாலும், நிர்வாணப்படுத்துவதென்பது மனித உரிமை மீறலாகத்தான் படுகிறது.

இந்த சோதனைக்குப் பின் எடை பார்க்கும் இயந்திரம் கொண்டுவரப்பட்டது. எனது எடையையும் அங்கு அடையாளங்களையும் குறித்துக் கொண்டு, பெரிய புத்தகத்தில் கையெழுத்து வாங்கினார்கள். கண்காணிப்பாளர் அறையிலிருந்து பார்த்தால் சிறைச்சாலையின் செல்கள் அனைத்தும் தெரிந்தன. ராஜீவ் கொலை வழக்கில் சிக்கி, எனக்கு முன்பாக அங்கே சிறைவைக்கப்பட்டிருந்தவர்கள் என்னைப் பார்த்து கைகளை ஆட்டிவரவேற்றனர். சிறைவாசத்திற்கு கூடவா வரவேற்பு? என்று நினைத்தேன். இந்த சூழ்நிலையிலும் நம் மீது அன்பு காட்டுகிறார்களே என்ற உணர்வுடன் அவர்களின் வரவேற்பை மதித்தேன்.


என்னை தனி செல்லுக்குக் கூட்டிச் செல்வதற்காக வந்த காவலர் ஒருவர், 'உங்களுக்குத் தெரியுமா? சென்னை மத்திய சிறையிலிருந்து ஆட்டோ சங்கர் தப்பித்துப்போய் மறுபடியும் பொலிசில் மாட்டிக்கொண்டானே அப்போது அவனை இந்த செங்கல்பட்டு சிறையில்தான் வைத்தார்கள். இங்குதான் பாதுகாப்பு இருக்கும் என்று நினைத்தார்கள். பிறகு, இங்கிருந்து சேலத்திற்குக்கொண்டு சென்றுவிட்டார்கள். ஆட்டோ சங்கர் சிறைவைக்கப்பட்ட பகுதியில்தான் நீங்களும் சிறைவைக்கப் படுகிறீர்கள்' என்றார். சிறை வரலாறுகள் சுவாரஸ்யமாகத்தான் இருக்கின்றன.

நான் தனி செல்லில் அடைக்கப்பட்டேன். என் மனைவியின் வருகையை எதிர்பார்த்திருந்தேன். 'சுபா சுந்தரத்தை செங்கல்பட்டுக்குக் கொண்டு போகிறோம். அங்கு வாருங்கள்' என்று மட்டும்தான் என் மனைவிக்கு சி.பி.ஐ மூலம் தகவல் கிடைத்துள்ளது. முதன்முதலில் கைது செய்யப்பட்டபோது என்னை செங்கல்பட்டு நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றதால், இப்போதும் நீதிமன்றத்திற்குத்தான் அழைத்துச்செல்லப்படுவேன் என நினைத்து, எனது மனைவி நளினியும், மாமா சுப்ரமணியமும் கோர்ட் வளாகத்தில் காத்திருக்கிறார்கள்.

எப்படியும் என்னை விடுதலை செய்துவிடுவார்கள் என்ற நம்பிக்கையுடன் செலவுக்கு கொஞ்சம் பணத்தை கையில் வைத்துக் கொண்டு காத்திருந்த அவர்களுக்கு, நீண்ட நேரம் கழித்துத்தான் உண்மை தெரிந்திருக்கிறது.

என்னை செங்கல்பட்டு சிறையில் அடைத்திருக்கிறார்கள் என்று தெரிந்ததும், பதறிப்போய் சிறைச்சாலைக்கு வந்தனர். வாக்கிடாக்கி மூலம் கண்காணிப்பாளர் அறைக்கு தகவல் வந்தது. நான் அழைக்கப்பட்டேன்.

ஜன்னல் கம்பி தடுப்புகளுக்கு இந்தப் பக்கம் நான், அந்தப்பக்கம் மனைவி. அவருக்கு வார்த்தைகள் வரவில்லை. கண்களில் நீர் கோர்த்திருந்தது. விடுதலையாகி வீட்டுக்கு வருவேன் என்று எதிர்பார்த்திருந்தவருக்கு மீண்டும் நான் சிறைவாசியானதை தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவரை ஆறுதல்படுத்தினேன். நான் அப்போது பவளம் வைத்த தங்கமோதிரம் ஒன்று அணிந்திருந்தேன். சி.பி.ஐ. காவலில் பூந்தமல்லியில் இருந்தபோது அதை அணிந்திருக்க தடை எதுவும் விதிக்கப்படவில்லை.



ஆனால், ஜெயில் சட்டத்தில் மோதிரம் அணிய அனுமதியில்லை. செல்லுக்குள் அடைக்கப்படுவதற்கு முன் அந்த மோதிரத்தை அதிகாரியிடம் கழற்றிக் கொடுத்திருந்தேன். அது எனது மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது.

அசோக வனத்தில் இருந்த மனைவி சீதையை கண்டுவர, மாருதியிடம் மோதிரத்தை கொடுத்தனுப்பினான் ராமன். மாருதிவேனில் என்னைக் காண வந்த மனைவியிடம் பவள மோதிரத்தை கொடுத்தனுப்பினேன் நான்.

சி.பி.ஐ.கட்டுப்பாட்டில் இருந்த பூந்தமல்லி சிறைக்கும் சிறைத்துறைக்கட்டுப்பாட்டில் இருந்த செங்கல்பட்டு சிறைக்கும் நிறைய வித்தியாசம். ஒரு சிறைக்கைதியின் அன்றாட வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதை இங்கேதான் உணரமுடிந்தது.

அந்த அனுபவங்கள்......

புதிய சிறைச்சாலை... புதிய அதிகாரிகள்... புதிய சூழல்... செங்கை சிறையில் முதல் நாள் இரவு தூக்கமே வரவில்லை. இந்த வழக்கில் கைதாகியிருந்த 21 ஆண்களும் தனித்தனி செல்களில் அடைக்கப்பட்டிருந்தோம். ஐந்து சிறைவாசிகளுக்கு ஒரு காவலர் என்ற விகிதத்தில் பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது. இரவு முழுவதும் காவலர்கள் இங்கும் அங்குமாக நடந்துகொண்டிருந்தார்கள். பூட்ஸ் சத்தம் இடைவிடாமல் கேட்டுக்கொண்டிருந்தது.

பகலில் இரண்டு மணி நேரத்திற்கொரு முறை காவலர்கள் மாறிக் கொண்டே இருந்தனர். இரவு நேரத்தில் மாலை 6 மணி முதல் 12 மணி வரை ஒருவர். அதற்குப் பின் விடியற்காலை 6 மணிவரை மற்றொருவர். முழுமையான சிறைவாசத்தின் வாசம் வீசத்தொடங்கியது.

செங்கல்பட்டு சிறைக்கு நான் கொண்டு வரப்பட்ட முதல்நாளே, என்னைப் பார்க்க ஆட்கள் வந்திருக்கிறார்கள் என்றதும் மற்ற சிறைவாசிகள் என்னைக் கொஞ்சம் ஆச்சரியமாகத்தான் பார்த்தார்கள். அவர்கள் என்னிடம், 'சார் உங்களைப் பார்க்க வந்திருப்பவர்களிடம் சொல்லி எங்களுக்கு சோப்பு, பேஸ்ட் வாங்கிக்கொடுக்கச் சொல்லுங்கள்'என்றனர்.

சோப்பு, பேஸ்ட் கூட சிறை நிர்வாகம் இவர்களுக்குக் கொடுக்காதா என்ற யோசனையுடன் நான் நிற்க, 'சார்-நம்மைப் பார்க்க வருபவர்களிடம் பணம் பெற்றுத்தான், சிறை நிர்வாகத்தினர் ஆள் அனுப்பி பொருள் வாங்கிக் கொடுப்பார்கள். ஏற்கனவே பேரறிவாளனின் அம்மா வந்தபோது வாங்கிக்கொடுத்த சோப்பும், பேஸ்ட்டும் தீரப்போகிறது. எங்களைப் பார்க்க இப்போது யாரும் வரப்போவதில்லை. அதனால் உங்களைப் பார்க்க வந்திருப்பவர்கள் மூலமாக பேஸ்ட், சோப் வாங்கிக் கொடுங்களேன்' என்றனர் சக சிறைவாசிகள்.

என்னைக் காண வந்திருந்த மனைவி நளினி, மாமா சுப்ரமணியம் ஆகியோரிடம் சொல்லி சிறை கண்காணிப்பாளர் மூலம் பணம் கொடுத்து சோப், பேஸ்ட்டுடன் பிஸ்கட், பழங்களும் வாங்கி வந்து சக சிறைவாசிகளுக்குக் கொடுத்தேன்.

சிறையில் இருந்த ஒரு செல், ஸ்டோர் ரூமாக மாற்றப்பட்டிருந்தது. எங்கள் உடமைகளை அங்குதான் வைத்துக்கொள்ள வேண்டும். எங்கள் செல்லுக்குள் ஒரு நீலநிற விரிப்பு, ஒரு வெள்ளைப் போர்வை, ஒரு துண்டு இவை மட்டுமே வைத்துக்கொள்ள அனுமதி. செல்லின் முன், பூட்டிய கம்பிகளுக்கு வெளியே அலுமினிய தட்டையும், குவளையையும் வைத்துக்கொள்ள வேண்டும். தாகம் எடுக்கும்போது சிறைக்காவலரிடம் தெரிவித்தால் அவர் தண்ணீர் எடுத்து வந்து குவளையில் ஊற்றுவார்.

பொதுவாக சிறைவாசிகளைக் காண வருபவர்கள் 'சிறைச்சட்டம் அனுமதிக்கும் பொருட்களைத் தாங்களே வாங்கி வந்து சிறைவாசிகளிடம் கொடுப்பது வழக்கம். ஆனால், நாங்கள் தடா சட்டத்தில் கைதானதால் எங்களுக்கு அந்த அனுமதியில்லை. பார்க்க வருபவர்களிடம் பணம் பெற்று பொருட்கள் வாங்கிக்கொடுத்தது சிறைத்துறை. அதுவும் பி.சி.பி. கணக்கில்! PCP என்றால் Prisoner Cash Property - பார்க்க வருகிறவர்கள் தருகிற பணத்தை எங்கள் பெயரில் வரவு வைத்து, வாரம் ஒருமுறை எங்களுக்குத் தேவையான பொருட்களை எழுதி வாங்கி, ஆளனுப்பி வாங்கிக் கொடுப்பார்கள். அதிலும் 20 ரூபாய் பெறுமானமுள்ள அத்தியாவசிய பொருட்கள் வாங்க மட்டுமே அனுமதி.

சிறைவிதிகள் என்னென்ன என்பதை மெல்ல விசாரித்து தெரிந்து கொண்டேன். ஒருமுறை, காவலர் ஒருவரிடம் பேச்சுக்கொடுத்தபோது, 'லெட்டர் எழுதுறதுக்காக வாரத்துக்கு ஒருமுறை ஜெயில் செலவிலேயே போஸ்ட் கார்டு கொடுப்பாங்க; கேட்டு வாங்குங்க' என்று தெரிவித்தார். நாங்கள் சிறை கண்காணிப்பாளரிடம் கார்டு கேட்க, 'இந்த ஆட்களுக்கு எப்படி இதெல்லாம் தெரிந்தது?' என்று அதிர்ந்தனர் சிறைத்துறை அதிகாரிகள். சட்டதிட்டங்களைத் தெரிந்து கொண்டாலும் சாப்பாட்டு விஷயத்தில் தான் சிரமப்பட்டோம். செங்கல்பட்டு சிறைவாசிகள் காலை 6 மணியிலிருந்து மாலை 5 மணிக்குள்ளாக மூன்று வேளைஉணவையும் முடித்துக்கொள்ளவேண்டும். எங்களுக்கு இரண்டாம் வகுப்பு என்பதால் காலை உணவாக வாரத்துக்கு 3 நாட்கள் கஞ்சியும், இரண்டு நாட்கள் பொங்கலும், இரண்டு நாட்கள் உப்புமாவும் தருவார்கள். மதியத்தில் சாதம், சாம்பார், மோர், மாலையில் கொஞ்சம் வேர்க்கடலை, உடனடியாக சாம்பார்சாதம் வந்துவிடும்.

'மணி அடித்தால் சோறு' என்ற பழைய வார்த்தை அப்போது ஞாபகத்துக்கு வந்தது. வேளா வேளைக்கு மணி அடித்ததும் சாப்பாட்டைக் கொண்டு வந்து வராந்தாவில் வைத்துவிட்டு, ஒவ்வொரு செல்லாக திறந்துவிடுவார்கள். முதல் செல்லில் உள்ள சிறைவாசி, சாப்பாட்டை எடுத்துப்போட்டு சாப்பிட்டுத் திரும்பிய பிறகே அடுத்த சிறைவாசியின் செல் திறக்கப்படும். இப்படி ஒருவேளை உணவு முடிப்பதற்குள்ளாகவே அடுத்த வேளை உணவுக்கான நேரம் வந்துவிடும்.

சாப்பாட்டுத் தட்டைக் கையில் ஏந்தியவுடனேயே மனைவி, மக்கள் முகம்தான் ஞாபகத்திற்கு வரும். அந்த ஞாபகம் வந்ததுமே சிறைவாசியின் கண்கள் கலங்கிவிடும். கண்ணீர், கன்னம் வழியாக இறங்கி சாப்பாட்டுத் தட்டில் சொட்டுச் சொட்டாகவிழும். பசி மறைந்துபோகும். வயிறு நிறைய தண்ணீரை மட்டும் குடித்துவிட்டு, செல்லுக்குள் அடைபடுவோம். இப்படி எத்தனையோ நாட்களை நான் கழித்திருக்கிறேன். சாப்பாட்டு நேரத்தில் குடும்பத்தினரின் ஞாபகத்தில் மூழ்கும் சிறைவாசிகளுக்கு நள்ளிரவில் பசியெடுக்கும்போது, பசியாற்றிக்கொள்ள எதுவும் இருக்காது.

மனப்பாரத்துடன் வயிற்றுப் பசியும் சேர்ந்து வாட்டும். திரும்பவும் தண்ணீரைக் குடித்துவிட்டு இரவின் விநாடிகளை எண்ணியபடியே புரண்டு, புரண்டு படுப்பார்கள்.

அதுபோன்ற நேரத்தில், சிறைவாசிகளுக்கு ஆறுதல் தரும் விஷயம் ஒன்று உண்டு.

அது .....

(தொடரும்)

> *வேளா வேளைக்கு மணி அடித்ததும் சாப்பாட்டைக்கொண்டு வந்து வராந்தாவில் வைத்துவிட்டு, ஒவ்வொரு செல்லாக . திறந்துவிடுவார்கள். முதல் செல்லில் உள்ள சிறைவாசி, சாப்பாட்டை எடுத்துப்போட்டு சாப்பிட்டுத் திரும்பிய பிறகே அடுத்த சிறைவாசியின் செல் திறக்கப்படும். இப்படி ஒருவேளை உணவு முடிப்பதற்குள்ளாகவே அடுத்த வேளை உணவுக்கான நேரம் வந்துவிடும்.*

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்

**தமிழ் அச்சகம்**

(மக்கள் கடை அருகில்)

இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500-க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.

அனைத்து அச்சு வேலைகளும் குறித்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.

திங்கள் முதல் - சனி வரை 09.00 – 22.00 மணி வரை

59, Rue Louis Blanc, 75010 Paris - Tel&Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42

அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு! திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதன் நன்மை அழைப்பிதழ், கேக் பெட்டிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். அழைப்பிதழ் மாதிரித்தாள் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்

## நோயற்ற வாழ்வே...

### வயிற்று நோய்கள் வராமலிருக்க...

விபரம் தெரிந்த அனைத்துப் பெரியவர்களும் தங்களுக்கு இருப்பதாகக் கூறிக்கொள்ளும் கோளாறு. வாயுக்கோளாறு ஜீரணமாகாத காரணத்தால் இவர்களுக்கு புளிச்ச ஏப்பம், சாப்பிட்ட உணவுமேல் கிளம்பி விடுதல், வாயில் உண்ட உணவின் சுவை. ஏப்பமாக வாயு கலைதல், நெஞ்சு எரிச்சல் போன்ற பல்வேறு தொந்தரவுகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

**தவிர்க்க வேண்டியவை**

இறைச்சி வகைகள், முட்டை கிழங்கு வகைகள். குறிப்பாக உருளைக் கிழங்கு, வள்ளிக்கிழங்கு, சிவப்பு முள்ளங்கி, அதிக இனிப்பு வகைகள், பல்வேறு வகையான கொழுப்பு வகையான உணவுகள், காலிஃப்ளவர், முட்டைகோஸ்கள், அதிக மாப்பொருள் உள்ள காய்கறி வகைகள் ஆகியவற்றைத் தவிர்ப்பது நல்லது. இந்த நோய் உள்ளவர்கள் உணவில் 'ப்யூரின்' என்ற பொருள் அதிகமாக உள்ள உணவைத் தவிர்க்க வேண்டும்.

தாவர உணவில்: பருப்பு பட்டாணி வகைகள், காலிஃளவர், ஆப்பிள், காளான் வகைகள், பச்சைக் கீரை ஆகியவற்றையும்,

விலங்கு உணவில்: கல்லீரல், சிறுநீரகம், மீன் இறைச்சி ஆகியவற்றையும் தவிர்த்துவிடுவது நல்லது

தினமும் 60 கிராம் என்ற அளவில் இருந்தால் போதுமானது.

கொழுப்பு உணவுகளை வெகுவாகக் குறைத்திடல் வேண்டும். ஏனெனில், அவை 'யூவேட்' உப்பை உடலில் அதிகப்படுத்தி உடல் பருமனை ஏற்படுத்தும்.


உணவின் பெரும்பகுதி காபோ ஹைட்ரேட் நிறைந்த உணவாக இருப்பது நல்லது. இதனால், உடல் புரோட்டீன் சிதைவது தடுக்கப்பட்டுவிடும். கலோரி குறைவான உணவாக இருப்பதுவும் நல்லது.

அதிக அளவு நீர், மற்றும் பானங்கள், பருகுவது உடலில் ஏற்படுகின்ற 'யூரிக் அமிலத்தை' வெளியேற்றப்பயன்படும்.

மதுபானத்தை தவிர்க்க வேண்டும். காப்பி, தேநீர் ஆகியவற்றில் 'மீத் தேல் ப்யூரின், இருந்போதும், அது உடலில்சென்று 'ப்யூரியனாக' மாற்றம் அடையாததால் அவற்றைப் பருகலாம் பாதிப்பு இல்லை.

**வயிற்றுப்புண்**

இரைப்பையில் புண். சிறுகுடலின் மேற்பகுதியில் புண் என்ற இரண்டு வகையான புண்கள் குடலில் ஏற்படுகின்றன. பொதுவாக, வயிற்றெரிச்சல், புளிச்ச ஏப்பம் ஏற்படுதல், ஜீரணசக்தி குறைந்து விடுதல், பசியின்மை, வயிறு பெருக்கம் போன்றவையும் கூட வயிற்றில் புண்ணிருப்பதற்கு அறிகுறியாக அமைகின்றன.



எனவே, வயிற்றுப் புண் மற்றும் அது சம்பந்தப்பட்ட நோய்களுக்கு அதிகமான புளிப்பு, உப்பு மற்றும் காரம் நிறைந்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.

மது பானங்கள் அருந்துவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

தலைவலி, மற்றும் உடல் வலி ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்படும் வலி நிவாரண மாத்திரைகள் ஏற்கனவே உள்ள குடல் புண்ணை அதிகரித்து, தேவையற்ற பின் விளைவுகளை ஏற்படுத்தும். எனவே, வயிற்றுப்புண் உள்ளவர்கள் இந்த மாத்திரைகளை முழுமையாகத் தவிர்த்துவிட வேண்டும். மிகவும் அத்தியாவசியமாகப் பயன்படுத்த வேண்டி வந்தால் இவர்கள் மருத்துவரின் ஆலோசனைக்குப் பிறகே உபயோகிக்க வேண்டும். சிறுவர்களுக்குக் கண்டிப்பாக 12 வயதிற்குட்பட்டவர்களுக்குக் கொடுக்கக்கூடாது.

ஆட்டிறைச்சியை அதிகம் சாப்பிடக்கூடாது.

எளிதில் ஜீரணமாகக் கூடிய உணவுகளைச் சாப்பிடவேண்டும்.

முட்டைவகைகளைச் சேர்த்துச்கொள்ளலாம்.

**புரத உணவு**

இவர்களுக்குத் தினமும் 1 கிலோ எடைக்கு 1 கிராம் வீதம் புரதம் கொடுக்கவேண்டும். தினமும் சராசரியாக 60 கிராம்வரை புரதம் தரலாம். பால், வயிற்றில் புண் இருப்பவர்களுக்குச் சிறந்த உணவாகும். ஏனேனில், பாலிலுள்ள புரதம் புண்ணை நோகச் செய்வதில்லை.

**சேர்த்துக்கொள்ள வேண்டியவை**

வெண்ணெய், நெய், பாலாடை, தயிர், மோர் போன்றவையும் நல்லது. மிகவும் எண்ணெயில் வறுத்த உணவுகள் ஜீரணமாவது கடினம். ஆகையால் அவற்றைச் சாப்பிடுகின்றபோது அவை பல தொந்தரவுகளையும் ஏற்படுத்தும்.

உடலுக்குத் தேவையான சக்தியை அளிக்கக்கூடிய உணவு வகைகளைக் கொடுக்கின்ற அதே நேரத்தில் வைற்றமின் 'சி' நிறைந்த உணவையும் தருவது நல்லது. வயிற்றுப் புண்ணை விரைவில் ஆற்றுவதற்கு உதவும்.

வயிற்றுப்புண் இருந்து, அது அதிகமாகி இதனால் அதிக இரத்தம் வெளியேறியவர்களுக்குப் புரத உணவைத் தரலாம்.

*'ஹெல்த்' மருத்துவ இதழ் கட்டுரையிலிருந்து.*

## காலத்தைப் பதிவுசெய்து மாயோன் எழுதுவது

# வாழவே எழுந்தோம்

### (1983 யூலை—இனப் படுகொலை தொடர்பான குறிப்பு)

**எந்தச் சிறு புல்லும்**
**எம் செயலால் நொந்ததில்லை**
**எந்தச் சிறு பயிரும்**
**எம் பார்வையால் கருகியதில்லை**
**எந்தச் சிறு பிராணியும்**
**எம்கால் மிதிப்பில் நசிந்ததில்லை**
**எந்தச் சிறு தளிரும்**
**எம் கை விசுக்கில் அழிந்ததில்லை.**

அத்தனை கவனமாய் நாம் உலகைக் காத்தோம். அத்தனை நேசிப்புடன் நாம் உலகில் வாழ்ந்தோம். அத்தனை விருப்புடன் எம் சுற்றம் சூழ்ந்தோம். அத்தனை வீறாப்புடன் நாம் வெளியில் திரிந்தோம். எமக்கென்று இது ஏன் நடந்தது?

எமக்கென்று இத்துயர் ஏன் சூழ்ந்தது? எமக்கென்று இந்தப் பொல்லாப்பு ஏன் வந்தது? எமக்கென்று இந்தக் கொடூரம் ஏன் நிகழ்ந்தது?

என்ன செய்தோம்? கொள்ளை அடித்தோமா? கொலை செய்தோமா? கொடூரம் நிகழ்த்தினோமா? நாடு திரிந்து, நகரம் திரிந்து, காடு பரந்து, கழனி பாய்ந்து நாம் நாய்போல் அலைந்தோமா? வேடுவராய் விரிந்த வெளிக்காட்டிடையே ஓடித்திரிந்தோமா? ஒன்றுமே செய்ததில்லை ஏது செய்தோம் நாம்.

வாழ்ந்தோம். வாழ்தலில் நாம் உயிர்ப்பு வைத்தோம். உண்டோம். உடுத்தோம், உறங்கினோம். சீவித்தோம். சாகும்வரை வாழ்ந்தோம்; உடல் வேகும்வரை வாழ்ந்தோம். இயற்கையாக எம்சாவு வரும்வரை இந்த உலகில் நின்று நிலைத்தோம்.

இவற்றினிடையே நாம் என்ன செய்தோம்? ஏது செய்தோம் நாம்? ஒன்றுமே செய்ததில்லை. எமக்கான பாடை வரும்வரை பார்த்திருந்தோம்! அவ்வளவே செய்தோம்!!

எம் இறப்பு இயற்கையாக நிகழ்ந்தது. இடையில் போர்கள் நிகழ்ந்தன. யுத்தம் சன்னதம் கொண்டது. சமரில் மாத்திரம் இயற்கையாக அன்றிச் சா நிகழ்ந்தது.

நாட்கள் நம்மைக் கொல்லாது. நமன் நம்மை நெருங்கான். இயற்கையாக நம் மரணம் நேரும். இப்படித்தான் நாம் நம்பினோம்.

ஊரிலோ பூகம்பம் இல்லை. எரிமலை கிளர்ந்ததில்லை. வெள்ளம் பாய்ந்து சனத்தை அழித்ததில்லை. கொடும்குளிர் எம்மைக் கொன்று போட்டதில்லை. சூரியன் சுட்டெரித்து வெக்கை பரவி, வெம்மை வீசி காண்டாவனம் வந்ததுதான். வருத்தியதுதான். ஆயினும் வெக்கையில் வெம்மையில் வீதியில் சுருண்டு வீழ்ந்ததில்லை. வீழ்ந்திறந்துபோனதில்லை.

இயற்கையின் எந்தச் சீற்றமும் எம் வாழ்வை அழித்ததில்லை. வயது வந்து, வருத்தம் வந்து பாயில்கிடந்து படுக்கையில் நொந்து, பாடையில் ஏறியிருந்தோம். பாடையில் ஏறியபோது, ஊர் கூடி ஒப்பாரிவைத்தது. ஊரெங்கும் ஓலம் எழுந்தது. நாய்கள் ஊளையிட்டன. நாம்பன் மாடுகள் வெருண்டன. ஊரெங்கும் ஒரு சாக்கோலம் உலாப்போனது. சாவையும் ஒரு விழாவாய்க்கொண்டாடினோம். ஏனென்றால் அடிக்கடி சாவீடு நிகழ்ந்ததில்லை. இளைய வயதில் உலகைவெறுத்து அவலமாய் ஆரும் அழிந்ததில்லை.

**கன்னி கட்டும்போதே பூ உதிர்ந்ததில்லை. காய் கனியும்போதே வெம்பி வீழ்ந்ததில்லை. பெண்மை மலர்ந்தபோதே விதவையாய் போனதில்லை. ஆண்மை முகிழ்ந்தபோதே அடிமாடாய் ஆனதில்லை.**

வாழ்வு அப்படியாக இருந்தது. வாழ்வு இனிதாக இருந்தது.

நம் வேர் அறுக்க, வேரோடு வேரடி மண் அறுக்க, நம் தேசத்தின் துயர் சூழ்ந்தது. நமக்கோர் அவலம் நிகழ்ந்தது. நம் வாழ்வு சோகம் என்றானது. சொல்லில் அடங்காச் சோகம் அது. சொல்லில் வெளியான வேதனை அது. கல்லெறிந்து கூட்டைக் கலைத்து திசைக்கொன்றாய், திக்குக்கொன்றாய் வீழ் என்று எறிந்துவிட்ட வேதனை அது.

**1983 யூலை 23** அன்றுதான் அனர்த்தத்தின் அத்திவாரம் என்றார்கள். யாழ்ப்பாணம்-திருநெல்வேலியில் 13 சிங்கள இராணுவம் கொல்லப்பட்டது இந்த இனப் படுகொலைக்குக் கால் என்றார்கள்.

இல்லை; இது எப்போதோ திட்டமிடப்பட்டது. தீர்மானிக்கப்பட்டது. இதற்கான சூழ்ச்சி வலை எப்போதோ பின்னப்பட்டது. இதற்கான சதிவித்துக்கள் எப்போதோ விதைக்கப்பட்டது.

**கப்பலை மூழ்க வைத்த கடைசி மூட்டை** என்று சொல்வார்கள்- ஏற்கனவே ஒவ்வொரு மூட்டை ஏறிய போதும் கப்பல் மூழ்கத் தொடங்கியது. ஒன்று, இரண்டு, மூன்று என்று மூட்டைகள் ஏறின. ஒரு அடி, இரண்டு அடி, மூன்று அடி என்று கப்பல் மூழ்கத் தொடங்கியது. இதோ இன்னுமொரு மூட்டை! இதோ கப்பல் முழுமையாக மூழ்கத் தொடங்கியது. இறுதியாக இறங்கிய மூட்டையே கப்பலை மூழ்கவைத்த கடைசி மூட்டை என்றார்கள்.

இதுவே இங்கும் நடந்தது. ஏற்கனவே இனப்படுகொலைக்கான சூழல் இருந்தது. இனப்படுகொலைகள் நடந்துகொண்டிருந்தன. 13 சிங்கள இராணுவம் கொல்லப்பட்டவுடன், சிங்கள இராணுவத்தின் உடல்கள் கொழும்புக்கு வந்தவுடன் நாடு கொழுந்துவிட்டெரிந்தது. அனல்கக்கும் அக்கினிக் குழம்பு ஊற்றியது அரசு.

இனவெறி எழுந்து விசிறியால் விசிறத்தொடங்கியது. நாடெங்கும் இனவாதக்கொள்ளி பொசுக்கென்று போய்ப் பற்ற ஏற்ற வகையில் இதமான நச்செண்ணெய் ஊற்றி அதில் ஊறவைத்த உள்ளங்கள் இத்தனை தீய எரிவுகளை நிகழ்த்தின. எத்தனை தீய எரிவுகளை நிகழ்த்தின. எத்தனை தீய எரிவு. தலையுடைப்பு, கத்துவெட்டு. பாயும் குருதிக்குளிப்பாட்டு.

இந்த நாட்களில் இலங்கை முழுவதும், தமிழர் வாழும் தாயகம் தவிர்த்து இதுதான் நடந்தது; இப்படித்தான் நடந்தது.

இந்த நாட்களில் இதுவும் நடந்தது. வெலிக்கடைச் சிறையால் வேதனைகள் வழிந்தன. உயிருக்கு உத்தரவாதம் என்று நம்பிய சிறையும் எம் தோழர்களைச் சிதைத்தது. எம் தோழர்களின் உயிரைக் குடித்தது. ஓர் உயிர் அல்ல; ஈர் உயிர் அல்ல. 52 உயிர்கள் அடுத்தடுத்த நாட்களில் அநியாயமாக அழிந்தன.

இந்த நாட்கள் இப்படிக் கழிந்ததுவும், இந்தக் கொடுமைகள் இப்படிச் சூழ்ந்ததுவும், இந்த வேதனைகள் இப்படித் தீர்ந்ததுவும், இந்த வாழ்வு இப்படியாய் ஆனதுவும்...

அழியத்தான் போகிறோமா?

வீழ்ந்து பொடிபடத்தான் போகிறோமா? இனி எங்கள் வாழ்வு இப்படியே போவதா? இனி எழும்பவே முடியவில்லையா? இடமில்லையா?

இல்லை; இனி அழியப்போவதில்லை. வீழ்ந்து வெடிபடப் போவதில்லை. எங்கள் வாழ்வு இத்துடன் முடியப்போவதில்லை. இனி எழுவோம். நெஞ்சு நிமிர்த்தி உயர்வோம். நேரான பாதை செல்வோம். வாழ வல்ல ஓர் உலகை வெல்வோம்.

வெல்வதற்கு வேலை கையில் எடுக்க வேண்டும். வாளைக் கையில் சுழற்றவேண்டும். **போராடுவதே மனிதரின் விதி எனில்... போராட்டத்தில் மரணம் அடைவதும் மகத்துவம் உடையதே!**

வாழ்வோம். வாழவல்ல ஓர் உலகை சமைப்போம். வெல்வோம். வெல்வதற்கான வேலைகள் நடக்கின்றன. வேறென்ன சொல்வோம்?

★★★

**நாம் வாழவே எழுந்தோம்!**
**சாவை உதைத்து**
**மண்ணிலெம் காலை ஆழப்பதித்து**
**மரண தேவதை இயற்கையாக வந்து**
**வருக எனும் இறுதிக் கணம்வரை...**
**மூக்கும் முழியுமாய்**
**வாழவே எழுந்தோம்!!**

*(வ.ஐ.ச.ஜெயபாலன்)*

# ஈழமுரசு வாசகர் கருத்துக் கணிப்பு – 3

புகலிட நாட்டிலிருந்து வெளிவரும் தமிழ் தேசியப் பத்திரிகை என்ற வகையில் ஈழமுரசு தன்னுடைய பயணப் பாதையில் தனது பணியை சுய மதிப்பீடு செய்து கொள்வதற்காக வாசகர் கருத்துக் கணிப்பு ஒன்றை நடாத்துவதற்கு முன்வந்திருக்கிறது. ஈழமுரசினுடைய வளர்ச்சியிலும் அதனுடைய வருகையிலும், தரத்திலும் அக்கறை கொண்ட அனைத்து வாசகர்களும் இந்தக் கருத்துக்கணிப்பில் இயன்றவரை பங்கெடுத்து ஈழமுரசு முகவரிக்கு இந்தப் படிவத்தை அனுப்பி வைத்து எமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(ஆர்)

1. நீங்கள் ஈழமுரசின் சந்தாதாரரா? ஆம் ❑ இல்லை ❑ (ஆம் எனில் சந்தா இல. ----------)
2. சந்தாதாரர் இல்லை எனில், மாதத்தில் எத்தனை முறை ஈழமுரசு வாங்குகின்றீர்கள்?
   வாரந்தோறும் ❑ இரண்டு வாரத்துக்கு ஒரு முறை ❑ ஒரு வாரம் மட்டும் ❑ எப்போதாவது ❑
3. ஈழமுரசு இதழைப் படிக்க எவ்வளவு நேரம் செலவு செய்கின்றீர்கள்?
   1/2 மணி நேரம் ❑ 1 மணி நேரம் ❑ 2 மணி நேரமும் ❑ அதற்கு மேலும் ❑
4. கீழே தரப்பட்டுள்ள ஈழமுரசின் பக்கங்களை எப்படிப் படித்து வருகின்றீர்கள்?

| | வழக்கமாக | எப்போதாவது | படிப்பதே இல்லை |
|---|---|---|---|
| சினிமா ................ | ☐ | ☐ | ☐ |
| சிறுகதை ................ | ☐ | ☐ | ☐ |
| பெண்கள் ................ | ☐ | ☐ | ☐ |
| சிறுவர் ................ | ☐ | ☐ | ☐ |
| தொடர்கதை................ | ☐ | ☐ | ☐ |
| உலகக் கண்................ | ☐ | ☐ | ☐ |
| மாயோன் பத்தி ................ | ☐ | ☐ | ☐ |
| வல்லூறு முகவர்கள் ................ | ☐ | ☐ | ☐ |
| மணலாறு ஒரு வீர வரலாறு ... | ☐ | ☐ | ☐ |
| பேம்பி................ | ☐ | ☐ | ☐ |
| கலைந்த சொற்கள் ................ | ☐ | ☐ | ☐ |
| விளையாட்டு ................ | ☐ | ☐ | ☐ |
| புகலிடம்................ | ☐ | ☐ | ☐ |
| அரசியல் பார்வை ................ | ☐ | ☐ | ☐ |
| பண்ணையார் ................ | ☐ | ☐ | ☐ |
| ஆசிரியர் தலையங்கம்................ | ☐ | ☐ | ☐ |
| அரசியல் ஆய்வுகள் ................ | ☐ | ☐ | ☐ |

5. ஈழமுரசில் வரும் செய்திகள் எப்படியிருக்கின்றன? அவற்றை விரும்பிப் படிக்கின்றீர்களா?

| | விருப்பம் | | | தரம் | | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகம் | ஓரளவு | குறைவு | நல்லது | பரவாயில்லை | மோசம் |
| உலகம் ................ | ❑ | ❑ | ❑ | ❑ | ❑ | ❑ |
| இந்தியா................ | ❑ | ❑ | ❑ | ❑ | ❑ | ❑ |
| தமிழீழச் செய்தி ................ | ❑ | ❑ | ❑ | ❑ | ❑ | ❑ |
| குசும்புச் செய்திகள்................ | ❑ | ❑ | ❑ | ❑ | ❑ | ❑ |
| உட்பக்கச் செய்தி [பொது] ................ | ❑ | ❑ | ❑ | ❑ | ❑ | ❑ |
| முன் – பின் பக்கங்கள் ................ | ❑ | ❑ | ❑ | ❑ | ❑ | ❑ |

6. நீங்கள் ஈழமுரசின் நிரந்தரமான வாசகராக அல்லது சந்தாதாரராக இருந்தால் எதற்காக ஈழமுரசை வாங்குகின்றீர்கள்?
   செய்திகளுக்காக................ ❑
   இராணுவ அரசியல் ஆய்வுகளுக்காக ....... ❑
   இலக்கிய விடயங்களுக்காக ................ ❑
   வேறு விடயங்களுக்காக ................ ❑ (விபரம் குறிப்பிடவும்)................
7. நீங்கள் எப்போதாவது ஈழமுரசு வாங்குபவராக அல்லது முதல் தடவையாக ஈழமுரசு வாங்குபவராக இருந்தால், எந்த அடிப்படையில் அதை வாங்கத் தீர்மானித்தீர்கள்?
   ★ தலைப்பு செய்திகளால் ஈர்க்கப்பட்டதால் ❑
   ★ கடைகளில் ஒட்டப்பட்டிருந்த ஈழமுரசு விளம்பரப்படுத்தியில் உள்ள கட்டுரைத் தலைப்புகளைப் பார்த்து ❑
   ★ ஈழமுரசில் நல்ல விடயங்கள் வருவதாக நண்பர்கள் சிபார்சு செய்ததனால் ❑
8. ஈழமுரசில் இடம்பெறும் கலைந்த சொற்கள் உங்களுக்கு திருப்தியளிக்கிறதா? ஆம் ❑ இல்லை ❑
   இல்லையென்றால் காரணம் ................
9. ஈழமுரசின் கீழ்காணும் அம்சங்களில் உங்கள் கருத்தைக் குறிப்பிடுங்கள்

| | மிகச் சிறந்தது | நன்று | மோசம் |
|---|---|---|---|
| ஒட்டுமொத்த உள்ளடக்கம் ................ | ❑ | ❑ | ❑ |
| செய்திகளின் மொழிநடையும் அமைப்பும்................ | ❑ | ❑ | ❑ |
| கட்டுரைகளின் மொழி நடையும் உள்ளடக்கமும்.... | ❑ | ❑ | ❑ |
| இதழின் வடிவமைப்பு................ | ❑ | ❑ | ❑ |
| முன்பின்பக்க வடிவமைப்பு ................ | ❑ | ❑ | ❑ |
| இதழின் ஆவணப்பயன்பாடு ................ | ❑ | ❑ | ❑ |

10. உங்கள் வீட்டில் ஐரோப்பிய தமிழ் வானொலிகளைக் கேட்கும் வாய்ப்புண்டா?
    ஆம் ❑ இல்லை ❑
11. ஈழமுரசில் விசேடமான தொடர்கள் கட்டுரைகள் இடம்பெறவேண்டும் என்று விரும்புகின்றீர்களா?
    ஆம் ❑ இல்லை ❑
    விரும்பினால் – எந்த மாதிரியான விடயங்கள் என்று குறிப்பிடவும்................
    ................
12. ஈழமுரசு இதழை மேம்படுத்த உங்கள் ஆலோசனைகள் ................
    ................
    ................

பெயர்: ................
வயது: 25க்கு கீழ் ❑ 25 – 35 வரை ❑ 35க்கு மேல் ❑
ஆண் ❑ பெண் ❑
முகவரி:................
................
................ நாடு ................
தொலைபேசி இலக்கம்: ................
தொலைநகல் இலக்கம்: ................

ஈழமுரசு முகவரிக்கு இப் படிவத்தை அனுப்பி வைக்கவும்

# நாற்று

## கறுப்பு யூலையில் ஒரு நெருப்புமலர்!

வெடித்தது சிங்கள இனவாதப் பூதம்
துடித்தது தமிழினம்,
தெருவெங்கும் துரத்தி வெட்டினர்...
தார்ப்பீப்பாக்குள் கொதிக்கப்போட்டான்..
தோசைக்கல்லில்
பாலரை வேகவைத்தான்...
கடுக்கன் குத்தியதால்
காதை வெட்டி எறிந்தான்...
கோவிலில் புகுந்தவரை
கத்தியால் வெட்டினர்!

அநியாய அகோரம்
ஒருநாள் கொழும்பு வீதியில் அரங்கேறியது...
தீவளர்க்கும் யாக மேடையில்
உடலை எரித்தனர்
தெய்வ சந்நிதியிலே
தலைகளைக் கொய்தனர்
பிஞ்சுப்பாலரை அடித்தனர் – கொன்றனர்
கும்பிட்ட கைகளை கோடரியால் வெட்டினர்!

கொழும்பும் எரிந்தது உண்மைதான்
எரிந்தது எல்லாம்
தமிழன் சொத்துக்களே!
ரயரோடு எரிந்தது எல்லாம்
ரத்தம்சொட்டிய தமிழன் தலைகளே!!....

செய்தவன் செத்துவிட்டான்
ஆட்டியவன் ஜெயவர்த்தனா
அடங்கிவிட்டான் மண்ணுக்குள்
ஆனால் சுட்டவடு இன்னும் ஆறவில்லை...
அன்று இட்ட தீ
இன்றுவரை கொழுந்தாக எரிகிறது!

தமிழன் அழிந்தால் என்ன
அவன் ஏது நினைத்தால் எனக்கென்ன
இறுமாந்திருந்த ஜே.ஆர்...
தட்டிக்கேட்க ஆளின்றி
தலைகால் தெரியாமல் துள்ளியவேளை
சிறுக சேர்ந்த படை பெரும்
பதிலடிகள் கொடுத்தது!
வீழ்ந்த தமிழர் வெகுண்டெழுந்தனர்
சேர்ந்திருந்த வெடிமருந்துக்கு
சிறுபொறி போதுமே
தமிழன் இனித்தலைகுனியான்
தர்மமே இனி வெல்லும்
நெருப்பு மலரை பிரசவித்த
கறுப்பு யூலைக்கிது சமர்ப்பணம்!

மட்டுவில் ஞானக்குமாரன்
ஒஸ்னாபுறூக், ஜேர்மனி

## கரி(ய) மாதம்

ஆடியிலே வதைபட்டு–நம்
ஆக்கமெல்லாம் சிதைபட்டு
ஆருயிர்கள் அழிபட்டு
ஆங்காங்கே புதைபட்டோம்
சிறைக் கூடங்களில்–நாம்
சித்திரவதைகள் தான் பட்டோம்
கண்களை கொய்தனர்
கால்களை வெட்டினர்
நுண்ணிய உறுப்பதில் ஊசியால்
குத்தியே கொன்றனர்.
வந்தனர் நின்றனர் யாவரும்
வாடி வதை வதைத்துப் போயினர்
ஆலயங்கள் ஆசான் கூட்டங்கள்
அகதிகள் மடங்களாகின.
அன்னம் தண்ணியின்றி – மாற்ற
ஆடைத் துணிகள் ஏதுமின்றி
அன்புத் தாயகம் நோக்கி
அணிகலன்கள் தானுமின்றி
அகதி முத்திரையிட்டு – இன்று
ஆண்டுகள் பதினாறாயின
மறக்க முடியுமோ எம்மால் – அந்த
கறுப்பு மாதம்தனை!!

வேலணை நடாசி – பிரான்ஸ்

# பலதும் பத்தும்

## பெண்ணைத் தொட்டார்! விமானி ஒருமாதம் உள்ளே

அண்மையில் பெல்ஜியத்தின் தலைநகர் பிரசல்சில் இருந்து ஹனோவர் நோக்கி 85 பயணிகளுடன் விமானமொன்று புறப்பட்டது. அந்த விமானம் தரையில் இருந்து எழுந்து நடுவானில் பறந்துகொண்டிருந்போது தலைமை விமான திடீரென தனக்கு அருகில் அமர்ந்திருந்த விமானப் பணிப் பெண்ணின் மேல் கைகளைப் பரவவிட்டாராம். இதன்போது விமானி தன்னிலை இழந்ததால் விமானம் சிறிது தள்ளாடியுள்ளது. ஆனாலும் உதவி விமானி நிலையைச் சமாளித்து விமானத்தின் பறப்பை சமப்படுத்தியுள்ளார். ஜேர்மனியில் விமானம் ஒரு பிரச்சினையுமில்லாமல் தரையிறங்கியது. ஆனால் பெல்ஜியம் மீண்டதும் தலைமை விமானி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அவரது விமானி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டதுடன், ஒரு மாதம் சிறைத் தண்டனையையும் பெற்றுக்கொண்டார்.

பெல்ஜிய விமானி ஒருவர் ஒழுங்கற்ற நடவடிக்கைகளால் சிறைக்கு போவது இது முதல் தடவையல்ல, கடந்த வருடம் பெப்ரவரி மாதம் ஏயார் பஸ் விமானமொன்றின் தலைமை விமானி விமானம் 10,000 அடியில் பறந்துகொண்டிருந்த வேளையில் அவசர அவசரமாக கழிப்பறைக்குச் சென்றாராம். அங்கு தனது நண்பர் ஒருவருடன் தகாத உறவுகொண்டதை விமானத்தில் பயணம் செய்துகொண்டிருந்த அந்த விமான நிறுவனத்தின் வர்த்தக முகாமையாளர் அறிந்துகொண்டதால், தரையிறங்கியவுடன் அந்த விமானியின் அனுமதிப் பத்திரம் பறிபோவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளத்தவறவில்லை.

## கற்பனைப் பெற்றோரை உருவாக்கி மக்கள் அனுதாபத்தை பெற்றுக்கொண்ட சிறுவன்

எட்வினுக்கு வயது 13 தானாகின்றது. அண்மையில் நியூயோர்க்கின் செய்தி ஊடகங்கள் முழுதும் இவரைப் பற்றிய செய்திகளையும் படங்களையும் ஒலிபரப்பின. ஹொண்டூராஸ் நாட்டைச் சேர்ந்த எட்வின் நியுயோர்க்கில் வசிக்கும் தனது தந்தையார் தாயார் மற்றும் சகோதரர் போன்றோரை தேடிக்கண்டுபிடிக்கவே அமெரிக்காவிற்கு வந்ததாகக் கூறினார். பொலிசாரின் விசாரணைக்குள் அகப்பட்ட இவர், ஹொண்டூராஸ் நாட்டில் அண்மையில் இடம்பெற்ற நிலச்சரிவினால் தனது பேரன், பேத்தி போன்றோர் கொல்லப்பட்டதாயும் அதனையடுத்து தன்னைக் கவனிக்க யாருமே இல்லாத நிலையில் தனது துவிச்சக்கர வண்டியை விற்று அதன்மூலம் கிடைத்த பணத்தை எடுத்துக்கொண்டு இரகசியமாக ஆட்களைக் கடத்துபவர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி ஒரு வழியாக அமெரிக்கா வந்து சேர்ந்ததாகக் கூறினார்.

தான் இன்றுவரை தனது தாய் தந்தையரைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் வெற்றியடையவில்லை என பொலிசாருக்குக் கூறியவர், எப்படியாவது அவர்களைக் கண்டுபிடித்து தன்னை தனது குடும்பத்துடன் சேர்த்துவைக்குமாறு கோரினார். மியாமியில் ஒரு தேவாலயத்தில் தங்கியிருப்பதாயும் அவர் கூறினார். இவரது பரிதாபத்தை அறிந்த நியூயோர்க் நகரசபை அதிகாரிகள் எட்வினின் தந்தையைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்கினர். நாடு முழுதிலும் உள்ள தொலைக்காட்சிகளிலும் எட்வின் சம்பந்தமான செய்திகள் வெளியாகின.

எட்வினின் நிலைகண்டு உலகமே அழுதபோது ஹொண்டூராசில் இருந்த அவரது பேத்தி மட்டும் மிகவும் வேடிக்கையாக அதனை அவதானித்துக் கொண்டிருந்தார்.

பின்னர் ஹொண்டூராசின் பொலிசாருடன் தொடர்பு கொண்ட அவர் இந்த விசித்திரமான தகவல்களின் உண்மைகளை விளக்கினார். ஹொண்டூராசில் எட்வினின் தாயார் வாழ்ந்துவருவதாகவும் எட்வின் சில மாதங்கள் புளோறிடாவில் தனது மாமியாருடன் தங்கியிருந்தாயும் கூறிய அந்த பேத்தி, எட்வின் அமெரிக்கத் தொலைக்காட்சிகளுக்குக் கூறியதெல்லாம் முழுப்பொய் எனக்கூறினார். எட்வினின் தந்தையார் கடந்த அக்டோபர் மாதம் எயிட்ஸ் நோயினால் இறந்துபோனார். அவரது இழப்பின் பின்னரேயே எட்வின் அமெரிக்கா சென்றதாயும் அவர் கூறினார். உண்மை வெளிவந்த நிலையில் எட்வினை என்ன செய்வதென நியுயோர்க் பொலிசார் தலையை உடைத்துக்கொண்டுள்ளனர்.

ஆனாலும் எட்வினோ மிகச் சாதாரணமாக தான் ஹொலிவூட்டில் ஓர் நடிகராகவோ அல்லது ஓர் இயக்குநராகவோ வர விரும்புகிறேன் என மீண்டுமோர் தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்துள்ளார்.

## நண்பரின் சடலத்தை துண்டாடிய இளைஞர்

பிரான்சின் தலைநகர் பாரிசில் அண்மையில் நடந்த ஒரு காட்டு மிராண்டித்தனமான நடவடிக்கையின் விபரமே இங்கு வெளியாகின்றது. இயற்கையாக இறந்த தனது நண்பர் ஒருவரின் உடலை துண்டு துண்டாக வெட்டி குப்பைத் தொட்டியில் போட முயன்றபோது ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். இந்த இளைஞரை பொலிசார் விசாரித்தபோது பல அருவருக்கத்தக்க தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இம்மாதம் 12ம் திகதி அதிகாலை நான்கு மணியளவில் பாரிசின் ஒரு வீதியில் ரோந்து சென்ற பொலிசார், ஒரு ஆபிரிக்கநாட்டு (மாலி) இளைஞர் மிகப் பாரமான சில பொதிகளை சிறுவர்களைக் கொண்டுசெல்லும் வண்டியில் வைத்து இழுத்துச் செல்வதை கவனித்துள்ளனர். பொலிசார் அந்த இளைஞரை அணுகி அவரைக் கைதுசெய்து அவரது பொதிகளைச் சோதிப்பதற்காகத் திறந்தபோது அதிர்ச்சியடைந்துள்ளனர்.

காரணம் அந்த பொதிகளுக்குள் ஒரு மனிதத் தலை, இரண்டு கைகள், இரண்டு கால்கள், உடல் பகுதி போன்றவைகளும் காணப்பட்டன. அத்துடன் ஒரு எரிபொருள் கொள்கலன், ஒரு அசிட்போத்தல் போன்றவைகளும் அந்த வண்டியில் காணப்பட்டுள்ளன. உடனடியாக அந்த இளைஞன் பொலிஸ் நிலையத்துக்குக்கொண்டு செல்லப்பட்டு விசாரணை செய்யப்பட்டார். இறந்தவர் பெயர் அலன். 53 வயதானவர். குடும்பத்தினர் லக்சம்பேர்க் நாட்டில் உள்ளனர். பாரிசில் வங்கியொன்றில் வேலை செய்த இவர் ஒரு தனியார் தங்குவிடுதியில் தங்கி, வார இறுதியில் லக்சம்பேர்க் சென்று வருவது வழக்கம். இவருக்குக் கருப்பின பெண்களிடம் ஒரு சபலம். எப்படியாவது அவர் ஒவ்வொரு வியாழக்கிழமையும் கறுப்பின இளம் பெண்களை நாடிவருவார். அதுவும் ஒன்றல்ல; அவருக்கு இருவர் தேவை. இந்தப் பெண்தேவையை நிறைவேற்றி வைத்தவர் மாலி இளைஞனான 'அமாடு' இவரும் திருமணமானவர்தான். மனைவி வேலைக்குச் சென்றபின் தனது வீட்டை விபச்சார விடுதியாக மாற்றி வாடிக்கையாளர்களை அழைத்துக்கொள்வார். இந்தச் சம்பவம் நடந்ததும் ஒரு வியாழன்தான். வழக்கம்போல இரண்டு இளம் பெண்களை அவனுக்கு ஏற்பாடு செய்துகொடுத்துவிட்டு வெளியே சென்றுவிட்டார். சில மணி நேரத்தில் திரும்பி வந்தபோது அலன் அவ் வீட்டில் இறந்துபோயிருக்கக் காணப்பட்டுள்ளார். அமாடுவிற்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அவரது மனைவி சில மணி நேரத்தில் திரும்பி வந்து விடுவாள் அவளுக்கு என்ன சமாதானம் சொல்வது? உடனடியாக செய்யக்கூடியது, சடலத்தை எங்காவது மறைத்து வைப்பதுதான் அமாடுவுக்கு சரியாகப்பட்டது. இரண்டாவதுநாள் மனைவி தனது குடும்பத்தினரைப் பார்க்கச் சென்றவுடன் அமாடு அலனின் உடலை வெளியே எடுத்து அதனை அறுக்கத் தொடங்கியுள்ளார். பின் அந்த பாகங்களை குப்பைகள் போடும் பைகளுக்குள்போட்டு வெளியே எங்காவது கொண்டுசென்று தனியான ஒரு இடத்தில் அவற்றை எரித்துவிடத் தீர்மானித்து, அதிகாலை நடவடிக்கைகளை ஆரம்பித்த போது அமாடு மாட்டிக் கொண்டார்.

இரண்டு பெண்களுடன் தொடர்புகொண்ட நிலையில் அலன் இயற்கையாகத்தான் இறந்துள்ளார் என பொலிசார் கூறியுள்ளனர். ஆனால் ஒரு சடலத்தை சின்னாபின்னப்படுத்தியதற்காக அமாடுவிற்கு 100.000 பிராங்குகள் அபராதமும் ஒரு வருட சிறைத் தண்டனையும் வழங்கப்படலாம்.

## பந்தயத்தில் தோல்வியடைந்தால் சிறைதான்!

புர்க்கினா பாசோ நாட்டில் விளையாட்டை விளையாட்டாக நினைக்க முடியாது போலிருக்கிறது. அண்மையில் அங்கு நடந்த உதைபந்தாட்டப்போட்டியொன்றில் தோல்வியடைந்த அணியினருக்கு ஒருநாள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

புர்க்கினா பாசோவின் இராணுவ உதைபந்தாட்ட அணியினர், அந்நாட்டின் முதலாவது தரத்திலிருக்கும் ஓர் அணியாகும். இவ் அணியினர் அண்மையில் அந்நாட்டின் மற்றுமோர் விளையாட்டு அணியுடனும் உதைபந்தாட்டப் போட்டியொன்றில் மோதிக்கொண்டனர். இராணுவ அணியினர் திறமையாக விளையாடியபோதிலும் எதிர் அணியினர் ஒரு கோலைப் போட்டுவிட்டனர். ஆனால் இராணுவ அணியினருக்கோ அதனைச் சமப்படுத்த முடியவில்லை. இறுதியாக தோல்வியுடன் முகாம் திரும்பினர். இராணுவ விளையாட்டு அமைப்பின் தலைவரான இராணுவத் தளபதிக்கு இந்தத் தோல்வியைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ஓய்வு அறைக்குத் திரும்பிய 11 வீரர்களும் உடனடியாக சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

அன்றைய இரவை வீரர்கள் சிறையில்தான் கழித்தனர். இது பற்றி அந்த பொறுப்பான தளபதி இப்படிக் கூறினார். எமது வீரர்களுக்கு பொறுப்பு வர வேண்டும். எதையுமே மிகத் தீவிரமாக கையாளத் தெரிந்து கொள்ள வேண்டும். இன்றைய தோல்வியானது இவர்களது தீவிரமற்ற தன்மையையே காட்டியது. இன்று சிறைக்குள் இவர்கள் தங்களது எதிர்கால பொறுப்புகள் பற்றி நிச்சயம் சிந்திப்பார்கள். இது அவர்களுக்கோர் படிப்பினையாகும் என்றார்.


## துயர் துடைப்பு நாட்கள் - யூலை 1999



எம் தேசத்தில் சிதறுண்டு அகதிகளாக வீதியோரங்களிலும் மர நிழல்களிலும் தஞ்சமடைந்திருக்கும் எம் உறவுகளின் பசிபோக்கி உயிர் காத்திட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்னெடுத்துச் செல்லும் துயர் துடைப்பு நாட்கள்-யூலை 99

*எங்கள் மக்களின் துயர்துடைத்திட நம் உழைப்பின் சிறு துளியை வழங்கிடுவோம். நீங்கள் வழங்கும் பங்களிப்பு நம் உறவுகளின் பசிபோக்கும், நோய் போக்கும், எதிர்காலச் சந்ததிக்கு கல்வி வழங்கும்!*

### துயர்துடைப்பு நாட்கள்

| நாடுகள் | காலம் | முகவரி |
|---|---|---|
| இத்தாலி | 10.07.99 - 31.07.99 | Via Dante 218/A, 90141 Palermo, Italy - Tel: 91 68 24 056 |
| பிரான்ஸ் | 04.07.99 - 15.08.99 | O.R.T 26, RUE DU DEPARTEMENT, 75018 PARIS. - TEL : 01 40 38 30 74 |
| லண்டன் | 05.07.99 - 08.08.99 | 79.Hoe Street, Walthamstow. London E 17 4 SA, U.K - Tel: 0181-520 5876 / Fax: 0171-403 16 53 |
| நெதர்லாந்து | 17.07.99 - 31.07.99 | 072-56 21 05 55 / 0224-217181 |

Pub Gra.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

## அகலிட நிகழ்வுகள்

# தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுவிழா 1999

பிரித்தானியாவில் இயங்கிவரும் இலங்கைத் தமிழ்ப் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்க விளையாட்டு விழாவில் இம்முறை பதினாறு கழகங்கள் பங்குகொண்டன. 10.07.99 நண்பகல் 12 மணியளவில் பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர் MR.Donalds (MP) விளையாட்டுக்கழக கொடியை ஏற்றி வைக்க அமைதி வணக்கத்துடன் விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகின.

இக்கோடைகால விளையாட்டு விழாவில் துடுப்பெடுத்தாட்டம், வலைப்பந்தாட்டம், 10 வயதுக்குட்பட்டோர் உதைபந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களுடன் சிறுவர் சிறுமியர்கட்கான ஓவியம், பொதுஅறிவு, விஞ்ஞான கண்காட்சி, மாதிரிகள் தயாரித்தல் போன்ற போட்டிகளும் இடம்பெற்றன.

இம்முறை நடைபெற்ற துடுப்பெடுத்தாட்டப்போட்டியில் 16 வயதுக்குட்பட்டோர் பிரிவில் சிதம்பராக் கல்லூரியும், 16 வயதிற்கு மேற்பட்டோர் பிரிவில் யாழ்.மத்திய கல்லூரியும் 1999 இற்கான பரிசில்களை தட்டிக் கொண்டன. வலைப் பந்தாட்டப் போட்டியில் இளவாலை 'கொன்வென்ற்' மகளிர் கல்லூரி பரிசினை தட்டிக்கொண்டது.

போட்டியின் இறுதியில் நடைபெற்ற முதல் பரிசளிப்பு வைபவத்தில் Dr.திருமதி ராஜ்சந்திரன் வெற்றி பெற்ற போட்டியாளர்கட்கு பரிசில்களை வழங்கினார்.

பின்வருவோர் தங்கப் பதக்கங்களைப் பெற்றுக்கொண்டனர்

**ஓவியம்**

**செல்வி தேவகி ரவீந்திரன்**
*(08 வயதிற்குட்பட்டோர்)*
**செல்வி ஆர்த்தி பகீரதன்**
*(12 வயதிற்குட்பட்டோர்)*
**செல்வன் பிரதீபன் சிறீஸ்கந்தராஜா**
*(16 வயதிற்குட்பட்டோர்)*
**செல்வி சேரா குணரட்ணம்**
*(18 வயதிற்குட்பட்டோர்)*

**மாதிரிகள் தயாரித்தல்**

**செல்வன் உமேஸ் ரஞ்சித்குமார்**
*(10 வயதிற்குட்பட்டோர்)*
**செல்வன் பவன் அரசரட்னம்** *(14 வயதிற்குட்பட்டோர்)*

**ஆங்கிலப் பொது அறிவுப் போட்டி**

**விக்ரர் பொன்னுத்துரை**
*(10 வயதிற்குட்பட்டோர்)*
**கரன் குணரட்ணம்**
*(14 வயதிற்குட்பட்டோர்)*
**மாதவி உதயணன்**
*(18 வயதிற்குட்பட்டோர்)*

**தமிழ் அறிவுப் போட்டி**

**ஆர்த்தி பகீரதன்**
*(10 வயதிற்குட்பட்டோர்)*
**பிரதீபன் சிறீஸ்கந்தராசா**
*(18 வயதிற்குட்பட்டோர்)*

துடுப்பெடுத்தாட்டம், வலைப் பந்தாட்டம், உதைபந்தாட்டத்திற்கான பரிசில்களை Mr.Donaldes (M.P.) வழங்கினார். இவ்விளையாட்டு நிகழ்வில் ஓவியப் போட்டியில் பங்குகொண்ட சிறுவர்களின் தாயக உணர்வு, திரண்டிருந்த பார்வையாளர்களைக் கவர்ந்தது. வன்னிக் காட்டிற்குள் எம் மக்கள் படும் இடர்களை தத்ரூபமாக வரைந்திருந்த சிபிரதீபனின் ஓவியமும், பகீரதனின் 'சுக்கு நூறானது சிக்குறு, இங்கு சும்மா கிடந்து அது முக்குது - அக்குவேர் ஆணி வேரானது; ஜயசிக்குறு ஆடாமல் நிக்குது' என்ற வாசகம் பொறித்த வன்னிச் சமர் ஓவியமும் மக்கள் மனங்கவர்ந்த நிகழ்வுகளாகும்.

இவ் விளையாட்டு விழாவில் பங்குகொண்ட மக்களிற்கு தமிழீழ உணவு வகைகளை உண்பதற்கு ஏதுவாக கடைகளை உருவாக்கி, மக்களின் கோடைகால விளையாட்டுவிழாவை சிறப்புற வைத்த சிற்றுண்டிச்சாலைகளும் ஆங்காங்கே செயற்பட்டன. இரவு 10 மணியளவில் கொடியிறக்கலுடன் 1999 இற்கான தமிழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்க வினையாட்டுவிழா இனிதே முடிவடைந்தது.


*- அ. கேசவராஜா*

# இத்தாலியில் கரும்புலிகள் தினம்

இத்தாலி பியோமோந்தே வாழ் தமிழ் மக்களால் 11.07.99 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணியளவில் கரும்புலிகள் தினம் பொன்சோனே பறோக்கியோ கத்தோலிக்க தேவாலய மண்டபத்தில் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சகல தமிழ் மக்களும் இவ்விழாவுக்கு வருகை தந்து தமது ஆதரவையும் ஒத்துழைப்பையு நல்கினர். மாவீரன் கப்டன் ரூபனின் சகோதரி திருமதி புவனேஸ்வரி திருஞானசோதி அவர்களால் ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு விழா ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து அமைதிவணக்கம், தேசிய கீதம் இசைத்தல் என்பன இடம்பெற்றன.

இத்தாலி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பியோமோந்தே பிரதிநிதி திரு. சுப்பிரமணியம் குமாரமூர்த்தி அவர்களால் 'புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்பாடும் அதன் எதிர்காலத்திட்டங்களும்' பற்றி எடுத்தியம்பப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கரும்புலிகளின் தியாகத்தையும், வீரத்தையும் உணர்த்தும் வகையிலான பேச்சுக்கள், கவிதைகள், தனிப்பாடல், குழுப்பாடல், தனிநடனம், குழு நடனங்கள் என்பன இடம்பெற்றன. 'தமிழன் வளர்த்த படை' எனும் வில்லுப் பாட்டும் இடம்பெற்றது.



'புலம் பெயர் மண்ணில் வாழும் தமிழ்க்குழந்தைகளுக்கு தமிழர்களின் கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்கள் பற்றிய அறிவு அவசியமா, அவசியமில்லையா? எனும் தலைப்பின் கீழ் ஒரு பட்டிமன்றம் இடம் பெற்றது. 'புலம் பெயர் மண்ணில் வாழும் தமிழ்க் குழந்தைகளுக்கு தமிழர்களின் கலை, கலாச்சார, பண்பாட்டு, விழுமியம்பற்றிய அறிவு அவசியம்' என - தீர்ப்பு வழங்கப்பட்டது.

இறுதியாக பியோமொந்தே கலைபண்பாட்டுக்கழக கலைஞர்களின் 'புரட்சிக்கானங்கள்' இடம்பெற்று கரும்புலிகள் தின விழா நிறைவெய்தியது.



# அரங்கேறும் மாணவிக்கு பட்டமளிப்பு எதற்காக?

தமிழர்களின் பாரம்பரிய கலை வடிவங்களில் ஒன்றாக மிளிரும் பரதக்கலை, பாவம், ராகம், தாளம் மூன்றையும் உள்ளடங்கிய சிறப்புக் கலையாகும். இப்படிப் பட்ட இச்சிறப்புக் கலையை கற்றுத் தேர்ச்சி பெறுவது என் பதுகூட சிறப்பான நல்லவிடயம். அதுவும் புலம்பெயர் தேசங்களின் மாற்று பண்பாட்டுச் சூழ்நிலைக்கு மத்தியிலும் பரதக்கலை வீறு நடைபோடுவதை கண்கூடாகப் பார்க்கமுடிகிறது.

சுவிற்சர்லாந்தின் எல்லையோர பட்டினமான பாசல் நகரில் 03.07.99 சனிக்கிழமை நாட்டியக் கலைமணி திருமதி. கிருஷ்ண பவானி சிறீதரனின் மாணவி யான செல்வி. தர்ஷினி இராம லிங்கத்தின் அரங்கேற்றம் நடந் தேறியது. குறித்த நேரத்தில் ஆரம் பம் என்பது தமிழர்களுக்குப் பெரும்பாலும் சங்கடமான நிகழ்வாகிறது. இவ் ஆரம்பமும் அதைக்காட்டத்தவறவில்லை. மங்கல விளக்கேற்றல், ஆடல் அரசன் அந்த தாண்டவ தெய் வத்திற்கான பூசை, மண்விடு தலைப்போரில் மண்டியிடாத மாவீரர்கள் பொதுமக்கள் ஆகி யோருக்கான அமைதிவணக்கம் என்பனவற்றைக் முறையாக கடைப் பிடித்து, மங்கல வந்தனம்பாடி, புஷ்பாஞ்சலியுடன் புன்னகை முகத்துடன் அரங்கேற்ற நாயகி யின் பரீட்சை சபைமுன் ஆரம் பமானது. ஆரம்பத்தில் தமிழ் அறிவிப்பில் சற்று சரிவு இருந்த போதிலும், அதற்கு சரியான குரலில் ஒலிபரப்பு துறையில் ஈடு பாடு கொண்ட திருமதி ஜெயந்தி மாலா குணசீலன் இணைந்து குறையை நிவர்த்தி செய்தார். ஜேர்மன் மொழி அறிவிப்பும் ஒரு இளையகுரலால் அருமையாக அமைந்தது.

அடவுகள் கோர்வைகளாகி மேடையில் விரிந்து சென்ற நடன உருப்படிகளில் முதல் அங் கமாகச் செய்யப்படும் அலாரிப்பு என்றும், தன்னை ஒரு அங்க மாக கடவுளுக்கு சமர்ப்பணங் களும் நிருத்த உருப்படியான நடராஜர் கௌத்துவம் காட்டப் படுகிறது. அடுத்து ஜதிகளையும், ஸ்வரங்களையும் எடுத்துக்காட்ட பல ராகங்களாலும் தாளங்களா லும் கட்டப்படும் ஜதீஸ்வரம் இம்மேடையில் கேரள நடன மான கதகளி கலந்து பின்னப் பட்டிருந்தது. இரு விடயங்களை ஒருநடனத்தில் பிரதிபலிப்பதை நடன வடிவமைப்பாளர் திரு மதி. சிறீதரன் நன்றாக கற்றுக் கொண்டிருக்கிறார். அடுத்து அபி நயத்துடன் ஆரம்பிக்கும் நிருத் தியவகையான சப்தம் கவிதைக ளாலும் சொற்தொடர்களாலும் ஆதிக்கம் செய்யப்படுகிறது. இவ் வாறு அரங்கேற்றம் இடை நிலையில் இருக்கும்போது, பிர தம விருந்தினர் பேசுவதற்காக மேடையேறி, விழாநடந்த இடத் தைப்பற்றியும். சுவிஸ் கடிகாரத் தைப்பற்றியும் சில அளவு கடந்த நிலைக்குச் சென்று பேசிவிட்டு, அரங்கேற்ற நாயகிக்கு 'பரத நாட்டிய தர்ஷினி' பட்டமும் கொடுக்கிறார். ஒரு துறையை ஊக்குவிப்பதற்கு பட்டமளிப்பு கள் நடைபெறுவது இயற்கை. இந்த இடத்தில் நடன அரங் கேற்றம் இனிது நிறைவேறியபின் அந்த பிள்ளையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக இறுதி யில் இப்பட்டமளிப்பைச் செய்தி ருக்கலாம் என்பது பலரது ஆதங் கம். அரங்கேற்ற முக்கிய உருப் படிகளான பதம், தில்லானா காட்டமுன்பு பட்டமளிப்பு தேவையா? என்பதிலும் குழப் பம் இருக்கத்தான் செய்கிறது.

பாடலுடன் ஆடல் கலந்து ஆடுபவருக்கும் ஆட்டிவைப்பவ ருக்கும் இடையிலான காலப்பிர மாணத்தைக் காட்டுவதற்கு களம் அமைக்கும் வர்ணம், மிகவும் நீண்ட நடன உருப்படியாகும். இவ் விடத்தில் தனது திறமையை தர்ஷினி சரியாகவே வெளிப் படுத்தியிருந்தார். நடன அரங் கேற்றங்களின் இறுதியாக காட் டப்படும் பதம், ஒரு நிகழ்வை வெளிக்காட்ட பல்லவி, அனு பல்லவி, சரண கட்டுமானங்க ளுடன் காட்டப்படுவதாகும்.

வெளிக்காட்டல் செயற்பாட் டினை நர்த்தகி ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் வைத்திருக்க வேண்டும் என்ற நியதி கிடையாது. காலத்தின் வெளிப்பாட்டை கலை களால் அலங்கரிப்பதற்கு அது தகுதியான ஒரு இடம். ஒரு கலை ஞன் சமுதாயத்தில் உயர்ந்து நிற் பதற்கு சமுதாயத்தின் தேவையை உணர்ந்து, கலைகளால் சமு தாய நிலைமைகளைச் சித்தரிக்க வேண்டும். இன்று நடைபெறும் தமிழர்களின் வீரம் செறிந்த போராட்டத்தை ஒரு பதமாகக் காட்டுவதில் இந்த அரங்கேற் றம் பெருமையடையுமே தவிர அபகீர்த்திக்கு ஆளாகாது. அத் துடன் இந்த ஆடல்நாயகி தர் ஷினியும் ஆசிரியை திருமதி சிறீ தரனும் இணைந்து பல தாயக நிகழ்வுகளைச் செய்து பெரும் பாராட்டினையும் பெற்றவர்கள். தாயக நினைவை அடியோடு மறந்து அரங்கேற்றத்தை வடிவ மைத்தது உண்மையில் வேதனை யான விடயமாகும்.

இறுதியாக பாம்புநடனம், தில்லானா, குறத்திநடனம் விறு விறுப்பாக ஆடல் திறமையை வெளிக்காட்டி மங்களம் கூறி அரங்கேற்றத்தை முடிவுக்குக் கொண்டுவந்தது.

திருமதி சிறீதரன் நட்டுவாங் கத்தை செய்ய, பலவிடுதலைப் பாடல்களுக்கு குரல்கொடுத்த சங்கீத பூஷணம் பொன். சுந்தர லிங்கம் வாய்ப்பாட்டுப்பாட, திரு மதி கோமளா கந்தையா வயலி னையும், திரு. முத்துசிவராஜா மிருதங்கத்தையும், திரு. கந்தையா சிதம்பரநாதன் மோர்சிங்கையும் திரு. அப்புத்துரை சண்முகதாஸ் தபேலாவையும் கொண்டு பரத நாட்டியத்திற்கு இசைவழங்கி யிருந்தனர்.

அரங்கேற்றத்துடன் பரதக் கலை முடிவுறவில்லை. தொடர்ந் தும் கலையைப் பயின்று காலத் தைப் பதிவுசெய்ய கலைஞர்க ளுக்காக காலத்தின் கதவுகள் என்றும் விரிந்துகிடக்கின்றன.

- கலையரசி

## சுவிசில் வர்ண. இராமேஸ்வரனின் இசைநிகழ்ச்சிகள்



ஏராளமான புரட்சிப் பாடல்க ளைப் பாடிய தமிழீழத்தின் குரல் வர்ணராமேஸ்வரனின் தமிழி சைக் கச்சேரியும் பொங்கும் தமி ழீழம் மாபெரும் புரட்சிகானங்க ளும் இணைந்த மூன்று இசை நிகழ்ச்சிகள் 09.07.99 லுசேர்ன் நகரிலும், 10.07.99 பேர்ன் நகரி லும், 11.07.99 சூரிச் நகரிலும் நடைபெற்று பெருமளவு மக்கள் கலந்துகொண்டனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம், கலைபண்பாட்டுக்கழகம், 'வணக் கம்' சஞ்சிகை இணைந்து இந் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தி ருந்தன.



# லியோன் நகரத்தின் ஒளி விழா

தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தின் லியோன் கிளையின் இடைக் கால நிர்வாக குழுவினரால் 11-04-1999 அன்று ஒழுங்செய்யப் பட்ட மாபெரும் ஒளி விழா குறிப்பிட்ட நேரத்திற்கு சற்று தாமதமாக மிகவும் கோலாகல மான முறையில் ஆரம்பமானது. திருமதி பவானி மகேஸ்வரன் திருமதி வதனா ஜெயபாலன் ஆகியோர் மங்கல விளக்கேற்ற, அமைதி வணக்கத்துடன் தமிழ்ச் சோலை பள்ளி மாணவர்கள் தமிழ்த்தாய் வாழ்த்துக்கள் இசை க்க நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. இவ்விழாவுக்கு அனைத்து தமிழ் அமைப்புக்களின் இணைப்பா ளர் திரு.பாலசுந்தரம் அவர்கள் கலந்துகொண்டு விழாவை சிறப் பித்தார்.

லியோன் தமிழ்ச்சோலை பள்ளி மாணவமணிகளின் இசை நடன பேச்சுக்கள் வந்திருப் போரை மெய்மறக்கச் செய்தன. மலரஇருக்கும் தமிழீழத்தினை எங்கள் கரங்கள் பலப்படுத்தும் என்ற நோக்கில் சதுர்னா சற் குணராசா இசைத்த, சின்னஞ் சிறு பூக்கள் நாங்கள் ஈட்டி செல் வோம் வெற்றிப் பாதை' மரிய தாஸ் சுவீட்டி, மரியதாஸ் மிசேல் இசைத்த, 'நாளை நமதே', சாந்த மீரா கஜேந்திரகுமார் வயலின் மீட்டி இசைத்த புலிமாமா புலி மாமா வீட்டுக்கு வாங்க' என்ற பாடல்களும், சபையினரை மகிழ் வித்தன. இதையடுத்து காரு-ண்யா மகேஸ்வரன் தமிழின் பெருமை என்ற தலைப்பில் முழக்கமிட்டார். ஜெயப்பிரகாஸ் பழனிநாதன் தமிழ் மொழியின் சிறப்பு என்னும் தலைப்பில் தமிழுக்கே உரியதான தனிச்சி றப்பால் மண்டபத்தை கரவொ லிகளினால் அதிரும்படி செய் வித்தார்.

அடுத்து, 'கல்வித்தெய்வம் இவள் தானடி தோழி' என்ற பாடலுக்கு, லியோன் தமிழ்ச் சோலை பள்ளி மாணவர்கள் வழங்கிய கும்மி நடனம் சபை யினரை பெரிதும் மகிழ்வித்தது. இதை தயாரித்த வழங்கிய ஆசி ரியை பாராட்டுக்குரியவர்.

அடுத்தநிகழ்வாக, தமிழர் கலையகத்தில் இருந்து கலந்து கொண்ட நடன ஆசிரியை செல்வி எட்வேட் மினேவ், செல்வி சாந்தி மேர்சியே பரத நாட்டியம் ஆடி சபையினரின் உள்ளங்களை கவர்ந்துகொண் டனர்.

சிறப்புச் சொற்பொழிவாளர் திருபாலசுந்தரம் அவர்கள் உரை யாற்றுகையில், இன்றைய தமிழீ ழத்தின் நிலைமை பற்றியும் இந்த நேரத்தில் புலம்பெயர்ந்து வாழு கின்ற நாம் எமது தாய் நாட் டிற்கு செய்யவேண்டிய கடமை யையும், அங்குவாழ்கின்ற மக் கள் படும் இன்னல்களையும், சித றுண்டு மரநிழலிலும் வீதியோ ரங்களிலும் தஞ்சமடைந்துள்ள எம் உறவுகளின் பசிபோக்கி உயிர் காத்திட துயர் துடைப்பு வார மான இந்தநேரத்திலே உங்கள் பங்களிப்பை வழங்க நீங்கள் முன் வர வேண்டும் என்றும் மிகவும் பணிவாக வேண்டிக் கொண் டார்.

அவரது வேண்டுகோளை ஏற்று பலர் நிதியுதவி வழங்க முன்வந்தனர். முதலாவதாக தமிழ் நாட்டை சோந்த நண்ப ரொருவர் பேருவகையோடு தனது பங்களிப்பை வழங்கி துயர் துடைப்பு நிதிசேகரிப்பு நிகழ் வினை ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்ச்சி பல முக்கிய மாற் றங்களை கொண்டிருந்ததான தும், தமிழீழ விடுதலைப் போருக் காக பலமுனை ஆதரவுக்கரங் கள் திரண்டிருப்பதும், வெற்றிக் கான பாதை வெகுதுரத்தில் இல்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது.

அடுத்து தமிழர்களின் போரா ட்டம் எனும் தலைப்பில், திரு. பாரதிகண்ணன் மேர்சியே அவர் கள் உரையாற்றுகையில், அடக்கு முறைகள், சிங்கள இராணுவத் தினரால் தமிழ் மக்கள் மீது திட்ட மிடப்பட்டு நடத்திவரும் மனித வதைகள் பற்றியும் தமி ழர்களின் சொத்துக்களையும் உடைமைகளையும் சூறையாடும் சிங்கள அரசுக்கெதிராக நாம் ஒன்றுபட்டு போராட வேண் டும் என்றும், இது தமிழ் மக்க ளாகிய எங்களது கடமையாகும் என்று குறிப்பிட்டபின் இன்னிசை தென்றல் தவழ்ந்தது தமிழர் கலையகக் கலைஞர்கள் தாமா கவே இயற்றி இசையமைத்து பாடிய பாடல்களும் சபையோ ரின் பெருவரவேற்பை பெற்றன.

அடுத்து இசை வழங்கிய தமி ழீழ இசைக் கலைஞர்கள் சபை யோரை இசை வெள்ளத்தில் மிதக்கவிட்டனர். அடுத்து 'இந் திய முத்துக்கள்' சங்கத்தலைவர் திரு.எட்வேட் சம்பத் அவர்கள் பாவேந்தரின் 108வது பிறந்தநாள் மலர் வெளியீட்டு விற்பனை மூலம் கிடைத்த நிதியினை தமி ழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் கையளித்தார். இவ் விழாவின் முக்கிய அம்சமாக, பெருமளவில் தமிழ்நாட்டைச் சேர்ந்த நண் பர்களும் கலந்து கொண்டு பல நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றிச் சிறப்பித்தமை குறிப்பிடத்தக்க தாகும்.

ஒளிவிழா மூல்மும், அன்று மேடையில் சேகரித்த துயர்து டைப்பு நாட்கள் நிதியுமாக புனர்வாழ்வுக் கழக லியோன் கிளையினர் 10.000 பிராங்குகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சார்பாக திருபாலசுந்தரம் அவர் களிடம் வழங்கினர்.

- லிங்கேஸ்வரன்
லியோன்

ஈழத் தமிழர் உதைபந்தாட்ட சங்கத்தின் ஆதரவில்
வவுனியா எவர்கிறீன் ஐக்கிய சங்கம் நடாத்தும்

**மாவீரன் பண்டாரவன்னியன் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி**

காலம்: 08.08.1999 ஞாயிற்றுக்கிழமை.
நேரம்: காலை 9.00 மணி
இடம்: STADE JULES Ladoumeque Métro: Porte de Pantin

மேலதிக தொடர்புகளுக்கு:
சி. விஜயகுமார்
0614514188
0144690678

# முன்னணி ஓட்டுநர் இல்லாதநிலையிலும் ஃபறாறிக்கு வெற்றி

இங்கிலாந்தில் நடந்துமுடிந்த கார் ஓட்டப் பந்தயத்தில் (Formula - 1) விபத்துக்குள்ளான ஃபறாறியின் முதன்மை ஓட்டுநர் சூமாக்கர் கலந்துகொள்ளாமல் இருந்தும், 25.07.99 அன்று ஒஸ்திரியாவில் நடைபெற்ற இவ்வருடத்திற்கான 9-வது போட்டியில் ஃபறாறியே வெற்றி பெற்றுள்ளது. இவ்வருட முதல் போட்டி மெல்பேர்னின் நடைபெற்றபோது ஃபறாறியின் வெற்றிக்கு ஓட்டுநராக இருந்த இங்கிலாந்தின் ஈர்வின் (Irvine) அவர்களே ஒஸ்திரியா போட்டியிலும் ஃபறாறியை ஓட்டிச் சென்று வெற்றியை ஈட்டினார். மிக மிக சொற்பநேர வித்தியாசத்தால்தான் ஃபறாறி முதல் இடத்தைப்பெற்றுக்கொண்டது. இரண்டாம் இடத்துக்கு வந்த மக்லேறன் 0.3 விநாடிகளையே கூடுதலாக எடுக்கவேண்டி நேர்ந்தது. இரண்டாம் இடத்து மக்லேறனை பிரித்தானிய வீரரான குல்தாட் (Coulthard) ஓட்டிச்சென்றார். அடுத்து மூன்றாவது இடமும் மக்லேறனுக்கே கிடைத்தது. மூன்றாம் இடத்துக்கான ஓட்டுநராக தற்போதைய சம்பியன் ஷக்கினன் இருந்தார். 2-ம் 3-ம் நிலைகளுக்கிடையிலும் பெரிய நேர இடைவெளி காணப்படவில்லை. அதில் 22 விநாடிகளே தென்பட்டது. இப்போட்டியில் ஈர்வின் வெற்றி பெற்றதையடுத்து, சம்பியன் பட்டத்திற்கான நிலையில், ஷக்கினனுக்கு பெரும் சவாலாக உருவெடுத்துள்ளார். இந்நிலையில் 01.08.99 ஜேர்மன் 'ஷொகன் கைம்' இல் நடைபெறவுள்ள 10-வது போட்டியில் ஈர்வின், ஷக்கினன் இருவருக்கும் கடுமையான மோதல் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. நடந்து முடிந்த ஒன்பது போட்டிகளிலும் பெறப்பட்ட முடிவுகளின்படி முதல் 5 இடங்களையும் பெற்ற வீரர்கள், கார்களின் விபரம் பின்வருமாறு

| | ஓட்டுநர்கள் | புள்ளிகள் |
|---|---|---|
| 1. | ஷக்கினன் | 44 |
| 2. | ஈர்வின் | 42 |
| 3. | சூமாக்கர் | 32 |
| 4. | பிறன்சின் | 29 |
| 5. | குல்தாட் | 28 |

| | கார்கள் | புள்ளிகள் |
|---|---|---|
| 1. | ஃபறாறி | 74 |
| 2. | மக்லேறன் | 72 |
| 3. | யோர்டன் | 34 |
| 4. | வில்லியம்ஸ் | 19 |
| 5. | பேனற்றன் | 16 |


# லோட்ஸ்சில் நியுசிலாந்து வெற்றி

இங்கிலாந்து-நியுசிலாந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி 22.07.99 பழம்பெரும் இலண்டன் லோட்ஸ் மைதானத்தில் ஆரம்பித்தபோது, இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடியது. ஆரம்ப துடுப்பாட்டநாசர் குசைன் 61 ஓட்டங்களையும் பெற்று வலுவான ஆரம்பத்தை எடுத்தபோதும், மற்றைய வீரர்களின் சீரற்ற ஆட்டத்தால் விக்கட்டுகள் மளமளவென சரிந்துவிட, இங்கிலாந்து அணி 186 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது. இங்கிலாந்து அணியின் இவ்வீழ்ச்சிக்கு நியுசிலாந்தின் வீச்சாளர் ஷர்ன்ஸ் காரணகர்த்தாவாக இருந்து 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்காடிய நியுசிலாந்து மிகநேர்த்தியாக தனது ஆரம்பத்தை மேற்கொள்ளுவதற்கு ஆரம்பஆட்டக்காரன் மத்தியு கோர்ன் அடித்தளமாக இருந்து, 100 ஓட்டங்களைப் பெற்றார். அடுத்து ருஸ் 52 ஓட்டங்களையும், விற்றோறி 54 ஓட்டங்களையும் பெற்று நியுசிலாந்தின் பலத்தை 358 வரை உயர்த்தினர்.

பின்தங்கிய நிலையிலிருந்து இங்கிலாந்துக்கு மற்றொரு சோதனையாக அணித்தலைவர் குசையின் மைதானத்தடுப்பின்போது காயத்துக்குள்ளாகி ஆட்டத்திலிருந்து விலகிக்கொண்டார். இந்நிலையில் இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த இங்கிலாந்தால் 229 ஓட்டங்களுக்கு மேல் தாக்குப்பிடிக்க முடியவில்லை. நியுசிலாந்தின் வெற்றிக்காக தேவைப்பட்ட 58 ஓட்டங்களையும் மிக சுலபமாக ஒரு விக்கெட் இழப்புடன் அவ்வணி பெற்றுக்கொண்டதால், ஆட்டம் ஒருநாள் முன்னதாக முடிவுற்றது. இவ் வெற்றிக்கான ஆட்ட நாயகனாக சதமடித்த மத்தியூ கோர்ன் தெரிவானார்.

# பிரான்ஸ் சைக்கிள் ஓட்டப்போட்டிகளில் ஆம்ஸ்ரோங் வெற்றி




யூலை 3 தொடக்கம் யூலை 25 வரையான மூன்று வாரப் பகுதியில் 20 போட்டிகளை உள்ளடக்கிய 'Tour De France' சைக்கிள் ஓட்டப் பந்தயத்தில் அமெரிக்க வீரன் லன்ஸ் ஆம்ஸ்ரோங் (Lance Armstrong) வெற்றி பெற்றுள்ளார். 86 தடவைகள் நடைபெற்ற இப்பிரான்ஸ் சைக்கிளோட்டப்பந்தயத்தில் வெற்றி பெறும் இரண்டாவது அமெரிக்க வீரர் ஆம்ஸ்ரோங் ஆவர். இதற்கு முன் கிறேக் லேமேன்ட் (Greg Lemond) மூன்று தடவைகள் `Tour De France'-ஐ வெற்றி கொண்டுள்ளார். நடைபெற்ற 20 போட்டிகளில் 4 போட்டிகளில் வெற்றி பெற்ற ஆம்ஸ்ரோங், முழுப் போட்டிகளுக்குமாக மொத்தத்தில் 91 மணி 32 நிமிடம் 16 விநாடிகள் எடுத்துக்கொண்டார். இரண்டாவதாக வந்த சுவிசின் அலெக்ஸ் சூல் (Alex Zulle) 7 நிமிடம் 37 விநாடிகள் கூடதலாக எடுத்துக் கொண்டார். மூன்றாவதாக வந்த ஸ்பானியர் பெனான்டோ எஸ்கார்ரின் (Fernando Escartin) 10 நிமிடம் 26 விநாடிகள் கூடுதலாக எடுத்துக்கொண்டார்.




# அமெரிக்கா ரஷ்யா இறுதிமோதலுக்கு தயார்

டென்னிஸ் ஆட்டம் நாடுகளுக்கிடையிலான ஆட்டமாக பெரியளவில் இல்லாதிருக்கும்போதும் சில குறிப்பிட்ட ஆட்டங்கள் நாடுகளுக்கிடையிலான போட்டிகளாகவும் அமைகின்றன. ஆண்களுக்கிடையில் டேவிஸ் கிண்ண ஆட்டம் போன்று, பெண்களுக்கிடையில் Federa Tion Cup எனப்படும் 'FED CUP' இறுதியாட்டத்தில் மோதுவதற்கு அமெரிக்காவும் ரஷ்யாவும் தயார்நிலையில் உள்ளன. இத்தாலி அன்கேனா நகரில் நடைபெற்ற அரையிறுதியாட்டமொன்றில் அமெரிக்கா, இத்தாலியை மிக இலகுவாக 4:1 என்று வெற்றி கொண்டுள்ளது. அமெரிக்காவின் சார்பில் வீனுஸ் வில்லியம்சும், மொனிக்கா செலசும் கலந்துகொண்ட போதிலும் முதல்போட்டி ஒன்றில் செலஸ் தோல்வியடைந்தது மட்டுமன்றி, காயத்துக்கும் உள்ளானதால் செலசின் இடத்துக்குச் சரியான வில்லியம்ஸ் மாற்றப்பட்டார். இந்த வில்லியம்ஸ் சகோதரிகளே அமெரிக்காவின் வெற்றியை சுலபப்படுத்தினர். மற்றொரு அரையிறுதியாட்டம் மொஸ்கோவில் ரஷ்யாவுக்கும் ஸ்லோவியாவுக்கும் இடையில் நடைபெற்றபோது, ரஷ்யா 3:2 என்று வெற்றிபெற்றது. அமெரிக்கா, ரஷ்யா வல்லரசுகளுக்கிடையிலான இவ் 'Fed Cup' டெனிஸ் இறுதிமோதல் செம்படெம்பர் 18-ம், 19-ம் திகதிகளில் அமெரிக்காவில் நடைபெறவுள்ளது.

# ஜேர்மனியின் சிறந்த உதைபந்தாட்ட வீரன் மத்தயூஸ்

1986-ம் ஆண்டு உலகக்கிண்ணப்போட்டிகளின் இறுதியாட்டத்திற்கும் 1990-ம் ஆண்டு உலகக் கிண்ண வெற்றிக்கும் தலைமை தாங்கிய அனுபவமான பல சாதனைகள் புரிந்த லொதர் மத்தயூஸ் (Lothar matthaus) இவ்வாண்டுக்கான சிறந்த ஜேர்மன் உதைபந்தாட்ட வீரனாக தெரிவாகியுள்ளார். ஆயிரம் உதைபந்தாட்ட வல்லுநர்களின் தெரிவுகளில் 556-ன் தெரிவை ஈர்த்துக்கொண்ட அந்த வெற்றியின் நாயகனை ஜேர்மனியர் இன்றும் மறக்கவில்லைப்போலும். ஜேர்மனி அணிக்காக 137 போட்டிகளில் கலந்துகொண்ட இவர், மைதானத்தில் முன்னணி நிலையிலிருந்து பின்னணி காவல் தடுப்பு ஆட்டம்வரை பல பகுதிகளில் விளையாடும் ஆற்றலைக்கொண்டிருக்கிறார்.


38 வயதிலும் தளராது ஆடி, சிறந்த வீரன் பட்டத்தையும் தனதாக்கிய இவரால், ஜேர்மனி பல வெற்றிகளையும் பெற்றுக் கொண்டது.

# 2000ம் ஆண்டு கணினிச் சிக்கலுக்கு பிரான்சின் தேசிய மூலோபாயம்

2000-ம் ஆண்டு கணினிப் பிரச்சினைக்கு முகம் கொடுக்க பிரான்சைத் தயார்படுத்தும் வகையில் பிரெஞ்சு அரசாங்கம், அரசுமற்றும் தனியார் துறையினரை ஒருமுகப் படுத்துமுகமாக ஒரு தேசிய மூலோபாயத்தை விரிவாக முன் வைத்துள்ளது.

இதில் அரசின் கடமைகள் இரண்டுவகையில் நிர்ணயிக்கப் பட்டுள்ளன.

தேசிய மட்டத்தில் இவ்விடயம் தொடர்பான புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையில் செயற் திட்டங்களை முன்வைத்து சமுதாயத்தை அணிதிரட்டுவது ஒன்று, மற்றையது அமைச்சுக்கள், அரசாங்க முகவர்கள் மற்றும் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள அத்தியாவசிய சேவைகளின் பாவனையிலுள்ள கணினித்தொகுதி முழுவதிலும் தேவையான மாற்றங்க



ளைச் செய்வதை நேரடியாக மேற் பார்வை செய்தலும் ஆகும்.

1. செப்டெம்பர் 1997-ல் கைத் தொழில் துறைக்கான அரச செயலாளர் கிறிஸ்ரியன் பியர் மேற்கூறிய அடிப்படையில் வர்த்தக சமூகத்தை அணிதிரளுமாறு அறைகூவல் விடுத்தார்.
2. பெப்ரவரி 20, 1998-ல் பொருளாதார விவகாரம் நீதிமற்றும் கைத்தொழில்களின் அமைச்சர் டொமினிக் ஸ்ரெளஸ் ஹானும், கைத்தொழில் அரச செயலாளர் கிறிஸ்ரியன் பியரும், ஜேராட் தியரியும் வருடம் 2000த்திற்கான கணினி மாற்றங்களைச் செய்யும் பணிக் குழுவுக்குப் பொறுப்பாக இருந்தனர்.

மூன்று மாதங்களின் பின்னர், கைத்தொழில் துறைக்கான செயலாளர் கிறிஸ்ரியன் பியர் பணிக்குழுவின் ஆரம்ப முடிவுகளை முன்வைத்து மீளவும் அனைவரையும் இப்பிரச்சினைக்கு முகம்கொடுக்க ஓரணி திரளுமாறு வேண்டுகோள் விடுத்தார். அவ்வேண்டுகோள், கணினித் தொகுதிகளைக் கணிப்பீடு செய்வதற்கான 10 சிபார்சுகளை முன்வைத்து வெளியிடப்பட்ட பிரசுரங்களுடன் சுமார் 500,000 சிறு மற்றும் நடுத்தர தொழில் நிலையங்களுக்குத் தபால் மூலம் அனுப்பப்பட்டது.

1998 டிசெம்பர் 6-ம் திகதி பிரெஞ்சு பிரதமர் எல்லா அமைச்சர்களுக்கும், பிரதான உள்துறை அரச பிரதிநிதிகளுக்கும் அனுப்பிய கடிதத்தை மக்கள் முன் வைத்தார். அக்கடிதம் அமைச்சுக்களையும், அரச முகவர்களையும் மற்றும் அரசின் ஆதிக்கத்திற்குள் வரும் மற்றும் சேவைகளையும் ஓரணி திரட்டும் திட்டத்தை மேலும் மேம்படுத்துவதை விளக்குவதாக இருந்தது.

சக்தி தொலைத்தொடர்பு, நீர், போக்குவரத்து, சுகாதாரம், தீயணைத்தல் போன்ற இன்னோரன்ன அத்தியாவசிய சேவைகளின் தொடர்ச்சியையும், ஆபத்துக்களை முகம் கொடுக்கக்கூடிய இடங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் வேண்டி தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு எல்லா அமைச்சர்களையும் பிரதமர் தெளிவாகக் கேட்டிருந்தார். அச்சுற்று நிரூபணம் குறிப்பாக, ஆரம்ப தயாரிப்பு வேலைகளை ஒருங்கமைக்கவும், அவற்றை மேற்பார்வை செய்யவும் பொறுப்பாக உள்ள ஓர் உயர் அதிகாரியை, ஒவ்வொரு அமைச்சரின் கீழ் நியமிக்க வேண்டுமென வலியுறுத்தியது.


அத் தயாரிப்பு வேலைத்திட்டம், சில குறிப்பான செயற்பாடுகளுக்கு அவற்றின் நுட்பமான தன்மையைப் பொறுத்து, முன்கூட்டியே திருத்த நடவடிக்கைகளை முன்னெடுக்கவும், அதேவேளை ஏதாவது அசம்பாவிதங்கள் நடைபெறின் அதற்கு எடுக்க வேண்டிய உகந்தநடவடிக்கைகள் பற்றி திட்டமுறைகளையும் முன் வைத்திருந்தது. சில துறைகளில் ஏற்படும் அசம்பாவிதங்கள் மக்களின் பாதுகாப்பிற்கு ஆபத்தையும் தொடர்ச்சியாக செயற்படும் சில சேவைகளில் தடங்கல்களையும் ஏற்படுத்தலாம். அது முழு சமூகத்தையும் பாதிப்பிற்குள்ளாக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கூறிய திட்டங்கள் 'Y2K பிரெஞ்சு தேசிய முகவர் நிலை



யத்தினூடாக' பொதுமக்களின் கவனத்திற்குக்கொண்டு வரப் பட்டது.

ஏனைய அமைச்சர்களும் அரச முகவர்களும் 1998 இறுதியில் எதிர்பார்த்த ஆண்டு 2000த்தில் உருவாகக்கூடிய பிரச்சினைகளைக் கணக்கில்கொண்டு ஆரம்பத் தயாரிப்பு வேலைத்திட்டங்களைத் தயாரித்தனர். இத்



லியோனல் ஜொஸ்பன்

திட்டங்கள் சுமார் இருபது மட்டில் மூன்று முக்கிய பகுதிகளை மையப்படுத்தியிருந்தன. அவை யாவன:

1. பெரிய முகாமைத்துவ செயற்பாடுகளுக்கான மென்பொருள் (Softwere for large management applications)
2. (Office Computers) செயலகக் கணினிகள்
3. ஆணைகள் வழங்கும், கட்டுப்படுத்தும் மற்றும் மேற்பார்வை செய்யும் தொகுதிகள் (Command and control and Monitoring Systems)

முன் ஏற்பாட்டுத் திட்டங்கள் என்பவை ஏதாவது தடங்கல்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மீறி ஏற்படின் அவற்றை நிவர்த்தி செய்வதற்கானவையாக இருக்கும்.


மிகவும் பாரிய தடங்கல்கள் ஏற்படின் அதனால் ஏற்படும் பிரச்சினைகளை அவசரகால மற்றும்/நெருக்குவார திட்டங்கள் அவற்றைக் கையாளக் கூடியதாக இருக்கும்.

சகல உள்நாட்டு அரச பிரதிநிதிகளுக்கும், அவர்களுடைய கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் முடியுமான வரையில் மக்கள் மத்தியில் பிரக்ஞையை உருவாக்கும் வகையில் பிரச்சாரம் செய்வதன் மூலம், அப்பிர தேசங்களில் உள்ள பொதுத்துறைகள் மத்தியில் ஆரம்பத்தயாரிப்பு வேலைகளை ஒருங்கிணைப்பதற்கான வழிமுறைகள் கொடுக்கப்பட்டிருந்தன.

தேசிய பாதுகாப்புத்துறையின் செயலாளர் நாயகம் இவ்விடயம் தொடர்பாக ஒவ்வொரு மாதமும் பாதுகாப்பு மற்றும் கூட்டுப்பாதுகாப்புத் துறையின் பிரதிநிதிகளுடன் கூட்டங்களை நடாத்தி பிரதமருக்கு அவற்றின் பலாபலன்களை அறிவித்து வருகின்றார்.

இவ்வாறான எல்லாவிதமான ஏற்பாடுகளும் பொது நிர்வாக தயாரிப்புத் திட்டங்களை மேம்படுத்தவும், வர்த்தக சமூகத்தை மேலும் ஒன்றுதிரட்டும் நோக்கத்தையும் முதன்மையாகக் கொண்டுள்ளது. குறிப்பாக சிறு மற்றும் மத்திய தொழிற்துறையினர், Y2K ஆபத்துக்கள் பற்றி அதிகமாக நம்பாதவர்களாக உள்ளனர்.

எனவேதான் வர்த்தக, கைத் தொழில் மற்றும் பாரிய சம்மேளனங்களை குறிவைத்தும் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.



அதன் மூலம் அத்துறையினரும் பிரெஞ்சுப் பொருளாதாரம் முழுவதையும் இப் பிரச்சினைக்கு முகம்கொடுக்க ஒன்று திரட்டுவதில் தமது பங்களிப்பைச் செய்யமுடியும்.

வருடம் 2000 மாற்றத்திற்கான தேசிய குழுஅமைத்தல் என்பது இறுதியாக எடுக்கப்பட்ட முடிவாகும். அதனடிப்படையில் பிரதமர் லயனல் ஜொஸ்பின் தலைமையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது, இக்குழு! இது அதன் அங்கத்தவர்களின் மத்தியில் வருடம் 2000 மாற்றத்திற்கான ஆயத்த மட்டங்களைத் தீர்மானிக்கும் வகையில் கருத்துக்கள் மற்றும் தகவல்களைப் பகிர்ந்து கொண்டு ஓர் அமைப்பாக செயற்படுகின்றது. இக்குழுவானது தொழிற் துறை ஸ்தாபனங்கள், தொழிற் சங்கங்கள், பிரதேச மற்றும் உள் துறை அமைப்புக்கள் என்பவற்றின் பிரதிநிதிகளையும் மற்றும் நபர்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அல்லது முக்கிய பொருளாதாரத் துறைகளைத் தக்க வைத்துக்கொள்ளும் விசேடமான சேவைகளை முகாமைத்துவம் செய்யும் பெரிய தொழில் ஸ்தாபனங்களின் பிரதானமுகாமைத்துவ அதிகாரிகளையும் கொண்டுள்ளது.

பொதுச் சேவைகளின் செயற்பாட்டிற்கும் நபர்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படும் பெரிய கணினித் தொகுதிகள் மிகவும் முக்கியமானவையாகும். SME மற்றும் SMI துறைகளில் 50 தொடக்கம் 199 ஊழியர்களைக் கொண்டவைகளில் 67 வீதமும் 10 தொடக்கம் 49 ஊழியர்களைக் கொண்டவைகளில் 46 வீதமும் பிரச்சினைகளைக் கையாள ஓர் நபரை நியமித்தோ அல்லது 2000 ஆண்டுக்கான குழுக்களை அமைத்தோ உள்ளன.

2000-ம் ஆண்டுக்கு முன்னதான மூன்று வருடங்களிலும் பிரான்சின் கணினி தொகுதிகளில் மாற்றங்களைச் செய்வதற்கான எதிர்பார்ப்பு செலவு 50—100 மில்லியன் பிராங்குகளாகக் கருதப்படுகிறது. இது பற்றிய கணிப்பில் யூரோ (Euro) மாற்றத்திற்கான செலவும் இணைந்துள்ளது என்பதை கவனத்திற்கொள்ள வேண்டும். மேலும் Y2K பிரச்சினைக்கான செலவு, பெரும்பாலும் கணினி வரவு செலவுத் திட்டத்தில் இணைக்கப்பட்டிருக்காதும் இருக்கலாம். குறிப்பாக Y2K தரமுயர்த்தல் ஸ்தாபனங்களின் உள்ளே உள்ளவர்களாலேயே செய்யப்பட முடியும்.

Y2K பிரச்சினையின் உலகளாவிய தாக்கத்தின் தாற்பரியத்தைத் புரிந்து கொண்டுள்ள பிரான்ஸ், 2000-ம் ஆண்டு மாற்றத்திற்கான தயாரிப்புகளை உலகம் பரந்த கணிப்பீடுகளை G8 அமைப்புக் கோப்புக்குள் செய்து, அத்தகவல்களையும் அனுபவங்களையும் விருப்பம் காட்டுகின்ற எந்த நாடுகளுடனும் பகிர்ந்துகொள்ளத் தயாராக இருக்கின்றது என்பதை நடைமுறையில் காட்டியுள்ளது. பிரான்சின் 2000-ம் ஆண்டு மாற்றத்திற்கான எல்லாத் தகவல்களையும் பின்வரும் கணினி வலைகளில் (Web Sites) காணலாம்.

WWW.an2000.gouv.fr
WWW.Premier-ministre.gouv.fr
WWW.finances.gouv.fr
WWW.internet.gouv.fr
WWW.diplomaie.fr

எல்லா பிரெஞ்சு அமைச்சுக்களுக்கும் தமது திட்ட நடவடிக்கைகளை அவர்களின் வெப் பகுதிகளில் (Web Sites) வெளியிட்டுள்ளன.

# ஐ.நா.வை நோக்கிய அமைதிப் பேரணி

## உலகத் தமிழர்களே அணிதிரள்வோம்

### 09.08.99 திங்கள் பிற்பகல் 2.00 மணிக்கு
### ஜெனிவா புகையிரத நிலையத்திலிருந்து ஐ.நா.வை நோக்கி

★ தமிழீழ மக்களுக்கு எதிரான தொடர்ச்சியான இன அழிப்பை உடன் நிறுத்த வழிகோலும் வகையில் ஆக்கிரமிக்கப் பட்ட தமிழீழப் பகுதிகளிலிருந்து சிங்கள இராணுவத்தை வெளியேற்றக்கோரியும்.....

★ தமிழீழ மக்களின் ஆயுதப் போராட்டத்தையும் தன்னாட்சி உரித்தையும் அங்கீகரித்து நிலையான தீர்வு ஏற்படுவதற்கு சர்வதேச அரசுகள் சிறீலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுக்கக்கோரியும்....

★ தமிழின அழிப்பிற்காக உலக நாடுகளிடம் அபிவிருத்திக்கென சிறீலங்கா கோரும் உதவிகளை சர்வதேச நாடுகள் வழங்குவதை நிறுத்தக்கோரியும்....

★ சிறீலங்காவின் போர்ச் சூழலே தமிழீழ மக்களைப் புலம்பெயர்ந்த நாடுகளில் அரசியல் அகதியாக்கியுள்ளது என்பதை எடுத்துரைக்கவும்.

**சுவிஸ் ஜெனிவாவில் ஐ.நாவை நோக்கிய அமைதிப் பேரணியில் இணைந்துகொள்வோம் வாருங்கள் !**

ஜெனிவா அமைதிப்பேரணியில் ஜேர்மனி, பிரான்ஸ் (பாரிஸ், லியோன் நகரங்களிலிருந்து), நெதர்லாந்து தமிழர்களும் இணைந்துகொள்வதற்காக போக்குவரத்து வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. எனவே ஜெனிவா பேரணியில் இணைந்துகொள்ள விருப்பமுடையவர்கள் எதிர்வரும் 30.07.99 இற்கு முன்பு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஜேர்மனி, நெதர்லாந்து பணியகங்களுடனும், பிரான்ஸ் (பாரிஸ், லியோன்) வாழ் தமிழீழ மக்கள் – பிரான்ஸ் தமிழர் கூட்டமைப்புடனும் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்:
1. ஜேர்மனி – 02166551074
2. பிரான்ஸ் – 0143581142 அல்லது 0140383074
3. நெதர்லாந்து – 070 34 61 963 அல்லது 065 27 18 604

*21ம் நூற்றாண்டில் தமிழீழத்தை நோக்கி உலகத் தமிழர்கள் ஒன்றிணைந்து நடாத்தும் ஐ.நா.வை நோக்கிய அமைதிப் பேரணி*
*புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்*
*தமிழீழ விடுதலைப் புலிகள்–சுவிஸ் பணியகம்*






நன்றி: 'தினக்குரல்'

# புளொட்டிலிருந்து பலர் புலிகளுடன் இணைவு வடமராட்சி புளொட் அலுவலகம் மூடப்பட்டது

விடுதலைப் புலிகள் அண்மையில் தமிழ்க்குழு உறுப்பினர்களுக்கு விடுத்துள்ள அறிவுறுத்தலில் அவர்களைத் தமது அமைப்புக்களில் இருந்து விலகி தம்முடன் இணைந்துகொள்ளும்படியும் அல்லது பொதுவாழ்வில் ஈடுபடும்படியும் குறிப்பிட்டிருந்தனர். இவ் அறிவுறுத்தலையடுத்து தமிழ்க் குழுக்களின் உறுப்பினர்கள் பலர் விடுதலைப் புலிகளுடன் இணைந்துகொண்டார்கள். யாழ்.குடாவில் உள்ள வடமராட்சி புளொட் அலுவலகத்திலிருந்தும் பல உறுப்பினர்கள் விடுதலைப்புலிகளுடன் இணைந்துகொண்டுள்ளதாகத் தெரியவருகிறது. இந்த நடவடிக்கையை அடுத்து வடமராட்சியில் உள்ள புளொட் அலுவலகம் அவசரமாக மூடப்பட்டுள்ளது. தமது எஞ்சிய உறுப்பினர்களையாவது காத்துக்கொள்ளும் நோக்குடனேயே புளொட் இந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

இதேவேளை வவுனியாவில் உள்ள 60 வர்த்தகர்களைத் தமது லக்கிபேஸ் முகாமிற்கு அழைத்த புளொட் குழுவினர் ஒவ்வொருவரும் தமக்கு 5000 ரூபாவைத் தரவேண்டும் எனப் பணித்துள்ள போதிலும் பல வர்த்தகர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் தெரியவருகிறது.

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

## செஞ்சிலுவை.......

ரிடம் ஒப்படைக்கப்பட்டார். அடுத்த கட்ட விசாரணையின் பின்னர் அவ் இளைஞனை சொந்த இடத்திற்கு அனுப்பி வைப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்குமாறு யாழ். அரசாங்க அதிபரை நீதவான் பணித்துள்ளார்.

## மீண்டும் டெங்குக் காய்ச்சல் தீவிரம் ஐவர் பலி

நாட்டின் பல பகுதிகளிலும் மீண்டும் டெங்குக் காய்ச்சல் நோய் தீவிரமாகியுள்ளதாக சிறீலங்காவின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. டெங்குக் காய்ச்சல் நோயாளராக இனம் காணப்பட்டவர்களில் ஐவர் மரணமடைந்துள்ளதாகவும் கடந்த மாதம் மட்டும் 116 பேர் டெங்குக் காய்ச்சல் தாக்கத்திற்குள்ளானதாகவும் குறிப்பிட்ட அமைச்சு அறிக்கை டெங்குக் காய்ச்சல் சிறுவர்களையே பெரிதும் தாக்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

## திருமலையில்.......

இக் குடியேற்றத்திற்கு துணைபுரிவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சிங்களவர்களால் அபகரிக்கப்பட்டுவரும் இந் நிலங்களின் உரிமையாளர்கள் இதுபற்றி சம்பந்தப்பட்டவர்களிடம் முறையிட்ட போதும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# 11-ம் திகதி மதியத்தை இருட்டாக்கும் சூரிய கிரகணம்

இந்த நூற்றாண்டின் இறுதியானதும் மூன்றாவதுமான முழுமையான சூரிய கிரகணம் ஒன்று எதிர்வரும் 11—ம் திகதி ஏற்படவுள்ளது. இந்நூற்றாண்டில் பகுதியான சூரிய கிரகணங்கள் பல தோன்றியுள்ள போதிலும் மூன்று தடவைகள் மாத்திரமே முழுமையான சூரிய கிரகணங்கள் தோன்றியுள்ளன. முதலாவதாக 1912—ம் ஆண்டு ஏப்ரல் 17ம் திகதி முழுமையான கிரகணம் ஏற்பட்டது. அடுத்ததாக 1961-ம் ஆண்டு பெப்ரவரி 15-ம் திகதி இரண்டாவது கிரகணம் தோன்றியது. இந்த வருடம் ஒகஸ்ட் மாதம் 11—ம் திகதி மூன்றாவது தடவையாக முழுச் சூரிய கிரகணம் தோன்றவுள்ளது. இதன்பின் 2081-ம் ஆண்டே முழுமையான சூரிய கிரகணம் தோன்றும்.

பிரான்சின் மேற்பகுதியில் மதியம் 12.18க்கு சூரிய கிரகணம் தோன்ற ஆரம்பித்தது. 12.10 க்கு முழுமையான கிரகணநிலை தோன்றும். சுமார் 2 நிமிடங்களும் பத்தொன்பது விநாடிகளும் நீடிக்கும் இச் சூரிய கிரகணம் வங்காள விரிகுடாவில் உள்ள நாடுகளில் இந்தியா, பாகிஸ்தான், துருக்கி, ஈராக், ஈரான் போன்ற நாடுகளிலும் ஐரோப்பாவில் ஜேர்மனி, ஆஸ்திரியா, ஹப்கேரி, ரூமானியா போன்ற நாடுகளிலும் தெரியக்கூடியதாய் இருக்கும்.

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

## மகனை இழந்த.......

யும் கூறவில்லை. எனினும் இது பற்றி உண்மைத் தகவலை எனது நண்பனூடாக எப்படியாவது நான் பெற்றுத்தருவேன். உங்கள் திருப்திக்காக என்னால் செய்ய முடிந்த அனைத்தையும் நான் செய்வேன். கடந்த காலங்களில் நடந்த சம்பவங்களிற்காக நான் இப்போது பெரிதும் வருந்துகிறேன். குற்றவாளிகளை அடையாளம் காட்டுவதற்கு நான் எவ்வகையிலும் உதவுவேன் என்பதையும் உறுதியளிக்கின்றேன் எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

## இனந்தெரியா.......

வடிக்கைகளை சிறீலங்கா படைகளால் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இன்று நண்பகல் திடீரென அங்கு வந்த ஆயுதம் தரித்தவர்கள் தாக்குதலை நடாத்தியதை தொடர்ந்து அப்பகுதியில் நின்ற பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டுள்ளனர். எனினும் தாக்குதலை நடாத்தியவர்கள் வந்த வழியே தப்பிச்சென்று விட்டனர் எனவும் தெரியவருகின்றது. சிறிது நேரம் தொடர்ச்சியாக பொலிசார் துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டனர். இதனால் வவுனியா நகரப்பகுதியில் பெரும் பதட்டம் நிலவியது. இதில் கொல்லப்பட்டவர்கள் நால்வரும் சிங்கள பொதுமக்கள் என பொலிசார் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. காயமடைந்த பொதுமக்கள் அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# மாணவிகளை ஆபாசப் படத்தில் நடிக்கவைக்கும் முயற்சி படையில் பணிபுரிந்த பெண் கைது

ஆபாசப் படங்களில் நடிக்கவென பாடசாலை மாணவிகள் சிலருக்குப் பயிற்சி அளித்த சிறீலங்கா இராணுவத்தில் கடமையாற்றிய பெண் ஒருவரை பொலிசார் கைதுசெய்துள்ளனர். பொலிசாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்படி பெண் வசித்துவந்த வீட்டைப் பொலிசார் முற்றுகையிட்ட போது அங்கிருந்து 16 வயதான மாணவி ஒருவர் மீட்கப்பட்டுள்ளார். ஆபாசப்படங்களில் நடிக்கவென பல பகுதிகளிலிருந்தும் 14 — 18 வயதிற்கு இடைப்பட்ட மாணவிகளைக்கொண்டுவரும் இப் பெண் அவர்களுக்குப் பயிற்சியினை அளித்துவந்ததாக ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது.

# 3ம் ஆண்டு நினைவஞ்சலி

திதி: 27.07.1999

அன்னை மடியில்: 18.11.1938



ஆண்டவன் திருவடியில்: 29.07.1996

## அமரர் திருமதி லீலா திருநாவுக்கரசு

(அளவெட்டி, தமிழீழம்)

அம்மா இனிய உங்கள் நினைவுகள் கலையவில்லை, இமைகளில் ஈரமும் காயவில்லை. இதயத்தின் வேதனையும் குறையவில்லை அம்மா! எமக்கு மூன்றாண்டுகள் வந்ததும் தெரியவில்லை. இறவா புகழுடன் நீங்கள் இருந்து எமக்கு இணையாய், துணையாய் நின்றிடுங்கள். உங்கள் ஆத்மா இறையோடு கலந்து இளைப்பாற இறையின் இனிய பாதங்களை இறைஞ்சுகிறோம்.

உங்கள் பிள்ளைகள்: தம்பிநாயகம் (இந்தியா), சகுந்தலாதேவி (பிரான்ஸ்), விக்கினேஸ்வரன் (இலண்டன்), சத்தியதேவி (பிரான்ஸ்), வட்சலாதேவி (இலங்கை), ஜீவா (பிரான்ஸ்), சுஜீவன் (லண்டன்), மருமக்கள்: ஜெயச்சந்திரன் (பிரான்ஸ்), சாந்தினி (இந்தியா), சசிரேகா (லண்டன்). பேரப்பிள்ளைகள் கார்த்திகா, ஜெயமிளா, நிரோஸ்குமார் (இந்தியா), கபில் (இலங்கை), மாதுரி - ஜெனிதா (பிரான்ஸ்), ரெவிந்தனா (லண்டன்) மற்றும் சகோதரர்கள், மைத்துனர், மைத்துனிமார்கள், பெறாமக்கள், மருமக்கள், உற்றார் உறவினர் நண்பர்கள் எல்லோரும் பாசத்தை மறவாது நினைவு கூருகின்றோம்.

தகவல்: பிள்ளைகள் மருமக்கள்
பிரான்ஸ் Tel: 01 49 46 94 20

NÆRKØB -DKS Video

Danmark பதரேஸ்சியா
மாநகரில் (Nærkøb) நியர்குய்ப் DKSVideo
ஸ்தாபனத்தாரின் மற்றும் இரு சேவைகள்

Nærkøb Rejser®
Korskærvej 104
DK-7000 Fredericia
Tlf: 75 91 58 04
Fax: 75 91 58 06

Nærkøb DK's Video
Korskærvei 104 (கோஸ்கர்வாய் 104)
DK 7000 Fredericia
Fax: 75 91 58 06.

Nærkøb Travels®

உங்கள் பிரயாணத்துக்குரிய விமானச் சீட்டுகளை மிக மலிவான முறையில் உரியநேரத்தில் நீங்கள் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
அத்துடன் இவ்வாண்டிலிருந்து எமது ஸ்தாபனம் இந்திய/சிங்கப்பூர் சுற்றுலாவை ஆரம்பித்துள்ளது. தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் யூலை மாதம் இச்சுற்றுலா ஆரம்பமாகும்.
FREMMED Pas வைத்திருப்போரும் இந்த சுற்றுலாவில் கலந்து கொள்ளலாம் என்பதை மிக மிக மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகிறார்கள்.

Nærkøb Money Transfer

15 நிமிடங்களுக்குள் உங்கள் பணத்தை அன்றைய வங்கி மதிப்பின்படி உலகில் எந்த இடத்துக்கும் கொடுக்கவோ/ பெற்றுக்கொள்ளவோ முடியும்.
இந்த Money Exchange அரச அங்கீகாரம் பெற்ற ஒரு நிறுவனம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறார்கள்.

இவ்வாரம் முதல் Okotober 30-ம் திகதி வரை
மலிவான விமானப் பயணச்சீட்டுக்கள்.
Copenhagen - Colombo - 3,200 Kr மட்டும் (Tax 165 Kr)
Copenhagen - Colombo - India (திருவனந்தபுரத்திற்கு) - 3800 Kr + Tax 185 kr

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64


Réseau WWA
உலகம் உங்கள் கைகளில்

*King* தொலைபேசி அட்டையை பாவிப்பதன் மூலம் தொலைபேசி அழைப்பில் 65% வரை சேமியுங்கள்
இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் 45 நிமிடம் (N° Local) – 27 நிமிடம் (N° vert)
92, Rue de Bellville, 75020 Paris (M° :Pyrénées) Tel: 01 44 62 93 96 Fax: 01 44 62 94 96
KING Telecom
33, Place de Général de Gaulle 60100 Creil (Place de la Gare) Tel:03 44 55 41 59 Fax: 03 44 55 42 51
அனைத்துத் தொடர்புகளுக்கும்: 01 43 15 17 17 - விற்பனையின் பின்னான சேவைகளுக்கு: 01 43 15 17 18

# சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு வன்னிப்பொது அமைப்புக்கள் விசனம்

## ஐ.நா.விற்கு அவசர கடிதம்

வன்னியில் மோசமடைந்து வரும் சூழ்நிலை குறித்து சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் பாராமுகமாக இருப்பது குறித்து வன்னியின் பொது அமைப்புகள் பல விசனம் தெரிவித்துள்ளன. இதேவேளை வன்னி மக்களுக்கு உடனடியான உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனானுக்கும் அவசர கோரிக்கைகள் இவ்வமைப்புக்களால் விடுக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் ஐ.நா. செயலாளருக்கு அவசர முறையீட்டு மனு ஒன்றை அனுப்பிவைத்துள்ளது. அம்மனுவில் வன்னியில் தோன்றியுள்ள மிகவும் நெருக்கடியான உணவு நிலை மற்றும் முற்றாகச் செயலிழந்த மருத்துவ நிலை பற்றியும் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. 37 கிளைகளைக் கொண்ட இந்தச் சங்கம் போக்குவரத்துத் தடை காரணமாக நிவாரணப் பொருட்களை மக்களுக்கு விநியோகிக்கமுடியாத சூழ்நிலையையும் உணவுப்பொருட்கள் கையிருப்பில் இல்லாத நிலையையும் சுட்டிக்காட்டி இனிமேலும் இவ்வாறான அவலத்தைத் தாங்குவதற்கு மக்களுக்கு வலு இல்லாததால் சிறீலங்கா அரசு பேரம் பேசாது பாதையினைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மகனை இழந்த தாய்க்கு இராஜபக்ஷ கடிதம்

சிறீலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன தனது மகனின் நிலை குறித்து அறிவதற்காக நடேசன் குணவதி என்பவர் கிருஷாந்தி பாலியல் வல்லுறவுக் கொலை வழக்கின் முதலாவது எதிரியான சோமரட்ன இராஜபக்ஷவிற்கு கடிதமொன்றினை எழுதியிருந்தார். அக் கடிதத்திற்கு இராஜபக்ஷ பதில் கடிதம் அனுப்பியிருக்கின்றார். அக் கடிதத்தில் காணாமல்போன இன்னொரு நபரான பிரபாகரன் என்பவர் கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலியும் மோதிரமும் தன்னிடம் இருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார். அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது,

யாழ்.மாவட்டத்தில் காணாமல்போனோர் குறித்த சகல விபரங்களும் எனக்குத் தெரியும். இதையெல்லாம் நான் வெளிக்கொணரத் தயாராக இருக்கிறேன். மேஜர் வீரக்கொடி மற்றும் கப்டன் லலித் ஹேவா ஆகியோருடன் வேறு கனிஷ்டதர அதிகாரிகளும் இக்கொலைகளைப் புரிந்தனர். அக்கொலைகளில் எமது பங்களிப்பு மிகவும் குறைவானது. கிருஷாந்தியைக் கூட மேற்குறிப்பிட்ட அதிகாரிகளை குறிப்பிட்ட நோக்கத்திற்காகக் கொலைசெய்தனர். உங்களது மகனைப் பற்றி லலித் ஹேவா நேரடிப்பதில் எதனை

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# செஞ்சிலுவைச் சங்கத்திடம் சரணடைந்த இளைஞன் யாழ். நீதிமன்றில் ஆஜர்

*(26.07.99)*

யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி குழுவில் இணைந்து இயங்கி வந்த இளைஞர் ஒருவர் அங்கிருந்து விலகி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் சரணடைந்திருந்தார். அவ் இளைஞரை இன்று காலை யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் பதில் நீதிபதி க.கேசவன் முன்னிலையில் சிறீலங்கா பொலிஸார் கொண்டு வந்து ஆஜர் செய்தனர். அதனை தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்ட நீதவான், மேற்படி இளைஞனை அடுத்த மாதம் 9 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

ஈ.பி.டி.பி. குழுவில் இயங்கி வந்த இவ் இளைஞன் அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்றை சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகின்றது. நீண்டகாலம் ஈ.பி.டி.பி குழுவில் இருந்து செயற்பட்ட இவர், அண்மையில் அக்குழுவில் இருந்து விலகி அச்சம் காரணமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் சரணடைந்தார். பின்னர் அவர் யாழ். பொலிஸா

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# இனந்தெரியாதவர்களால் சுடப்பட்டு வவுனியாவில் ஆறு பேர் மரணம்

*(26.07.99)*

வவுனியா நகருக்கு தெற்கு பகுதியில் சிறீலங்காப்படை இணைப்பு அலுவலகத்திற்கு அருகில் உள்ள கடையொன்றில் வைத்து இன்று நண்பகல் 1.50 மணியளவில் ஆட்டோவில் சென்ற ஆயுதம் தரித்த இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சிறீலங்கா பொலிஸார் ஒருவரும், ஒரு இராணுவ சிப்பாய் உட்பட, நான்கு சிவிலியன்களுமாக ஆறு பேர் கொல்லப்பட்டனர். மேலும் ஆறு பொதுமக்கள் காயமடைந்துள்ளனர் என வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வவுனியா நகருக்கு தெற்கே தேக்குமரங்கள் நிறைந்த பகுதியில் சிறீலங்கா படையினரால் ரம்மியா கவுஸ் என்று அழைக்கப்படும் இராணுவத்தின் இணைப்பு அலுவலகம் உள்ளது. இந்த இடத்தில்வைத்தே முன்பு பொது மக்களுக்கு பாஸ் வழங்கும் நட

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# திருமலையில் வீரவிதான தமிழர் காணிகளில் சிங்களவர்கள் குடியேற்றம்

*(26.07.99)*

திருமலை நகரின் நுழைவாயிலாக உள்ள மட்டிக்களிப் பகுதியில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டு வருகின்றனர் என செய்திகள் தெரிவிக்கின்றன. இந்து ஆலயங்களும் தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகளும் உள்ள இப் பகுதிகளில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுவருகின்றனர்.

கடந்த சில தினங்களாக, இரவு பகலாக சிங்கள இனத்தவர்கள் தமிழ் மக்களின் இக்காணிகளை தங்களுக்குள் பிரித்து வேலிகள் போட்டு தமது சொந்தமாக்குவதில் பகிரங்கமாக ஈடுபட்டு வருகின்றனர் என்று திருமலை செய்திகள் தெரிவிக்கின்றன. வீரவிதான என்ற அமைப்பபே

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

கே.ஆர்.எஸ்.
என்றப்றைசெஸ்
537 High Road, Wembley
Middlesey, Hao 2 Dj, Tel: 0181- 9024590
நிர்வாகி: G.சதீஸ்
Pub

★ Kingfish- 2.59 ல் இருந்து
★ நீலக்கால் [துப்பரவு செய்த] நண்டு £3.89 ல் இருந்து
★ 20 Kg Broken Basmath £7.99 இலிருந்து; 20 கிலோ Broken Basmath £7.99 இலங்கை மரக்கறிவகை 99P
★ CD 2.99 இல் இருந்து
★ Audio 99 இல் இருந்து
★ நல்லெண்ணை £3.49; 1/2 போத்தல் £1.79
★ ஞானம்காட் 10% விலைக் கழிவில்